சங்க நூல்களில்

# மணிகள்








பி.எல்.சாமி ஐ.ஏ.எஸ்.

ந. வெங்கடேசன்

சேகர் பதிப்பகம்

# சங்க நூல்களில் மணிகள்

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | SANGA NOOLGALIL MANIGAL |
| Author | : | P L. SAMY. I.A.S. |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | December 1980 |
| Copy right Holder | : | P. L SAMY |
| Paper used | : | White Printing D. Crown. 11.6 Kg |
| Size of the book | : | 18.2 × 12.4 cm. (C 8) |
| Type Points used | : | 10 Pt. |
| No. of Pages | : | 136 + 12 = 148 |
| No. of Copies Printed | : | 1200 |
| Printer | : | VETTRI ACHAGAM Madras - 600 005 |
| Binding | : | Card-Board |
| Publisher | : | SEKAR PATHIPPAGAM Madras - 600 078 |
| Price | : | Rs 10 |
| Subject | : | Criticism of Sangam Literature |
| Call Number | : | O 31, 1 A; g N 80 |

# சங்க நூல்களில் மணிகள்



பி.எல்.சாமி
ஐ.ஏ.எஸ்..

சேகர் பதிப்பகம்
66, பெரியார் தெரு
எம்.ஜி.ஆர் நகர் - சென்னை - 600 078

முதற் பதிப்பு :

டிசம்பர் 1980

உரிமை :

ஆசிரியர்க்கு

விலை ரூ. 10

அச்சிட்டோர் :

வெற்றி அச்சகம்

25, கஜபதி சந்து

ஐஸ் ஹவுஸ்

சென்னை — 600 005.

## உருவாக்கியோர்

| | | | |
|---|---|---|---|
| ஆசிரியர் | | — | பி. எல். சாமி, ஐ.ஏ.எஸ். |
| ஓவியர் | - முகப்பு, உட்புறம் | — | கவிஞர் அமுதோன் |
| பிளாக் | - உட்புறம் | — | எவிகண்ட் பிராசஸ் |
| பிளாக் | - முகப்பு | | நியூடோன் |
| அச்சுக் கோப்பு | | — | சங்கர், ஜெயராமன்<br>தங்கம், கன்னிகா |
| அச்சகத்தார் | - நூல் | — | எஸ். குப்புசாமி<br>வெற்றி அச்சகம் |
| அச்சகத்தார் | - முகப்பு | — | சோல்டன் பிரஸ் |
| கட்டுக்கோப்பு | | — | நடராஜன் |
| பிழை திருத்தம் | | — | பேராசிரியர்<br>மா. ரா. இளங்கோவன் |
| பதிப்பாளர் | | — | வெள்ளையாம்பட்டு சுந்தரம்<br>சேகர் பதிப்பகம் |

---


**நன்றி**

படங்கள் :

திரு. வி. எஸ். வி. இராகவன் அவர்கள்

# முன்னுரை

சங்க இலக்கியத்தில் மணிகள் என்ற எனது இந்நூல், சங்க இலக்கிய ஆராய்ச்சி நூல்களின் வரிசையில் வெளிவரும் ஐந்தாவது நூலாகும்.

சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், சங்க நூல்களில் மீன்கள் ஆகிய நான்கு நூல்களும் உயிரினங்களைப்பற்றி நான் ஆராய்ந்து எழுதிய நூல்களாகும்.

இந்நூல் அவைகளில் முற்றிலும் வேறுபட்டதாகும், சங்க நூல்களில் மணிகளைப்பற்றியும் சொல்லியிருப்பார்களோ என்று பலர் ஐயுறுவர். சங்க நூல்களில் மணிகளைப்பற்றிய செய்திகளை ஆராயும்போது, பல அரிய செய்திகள் காணப் படுவதை எண்ணி வியப்படைய வேண்டியுள்ளது.

தமிழ் நாட்டில் கிடைத்த சிறந்த கற்களான வைடூரியம், முத்து ஆகியவைப் பற்றிய செய்திகள் புதியவை யாகும். வைடூரியம்,முத்து என்ற பெயர்கள் தூய தமிழ்ச் சொற்களிலிருந்து தோன்றின என்பதும் இதில் விளக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்தில் காணப்படும் மணிகளைப்பற்றிய செய்திகளை, உரோமர், கிரேக்கர் கூறியுள்ள பண்டைய செய்தி களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து முதல் முறையாக இந்நூலில் விளக்கம் கூறப்பட்டுள்ளது.

சங்க இலக்கியச் செய்திகளும், கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் உரோமரும் கிரேக்கரும் இந்தியாவுடன் கொண்டிருந்த வாணிகத்தைப் பற்றிய செய்திகளும், பல வகையில் ஒன்றுக்கொன்று சான்று பகர்வனவாகும்.

சங்க நூல்களின் காலத்தை அறுதியிட்டுக் கூறவும் முடிகின்றது. இந்நூலை எழுத, மணிகளைப்பற்றிய அறிவியல் செய்திகள், வரலாற்றுச் செய்திகள், பாரம்பரியச் செய்திகள் முதலிய யாவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சங்க நூல்களில் காணப்படும் அரிய பெரிய நுணுக்கமான செய்திகளைப் புரிந்து கொள்ள பல்துறை அறிவு இன்றியமையாததாகும்.

சங்க நூல்களில் இயற்கைச் செய்திகள் உள்ளது உள்ளவாறு விளக்கமாகவும் நுணுக்கமாகவும் கூறப்பட்டுள்ளன; அறிவியல் தழுவிய இயற்கைச் செய்திகள் மிகுந்து காணப்படுகின்றன. ஆதலின் சங்க நூல்களில் கூறப்பட்ட இயற்கைச் செய்திகளை நன்கு உணர்வதற்கு வெறும் தமிழ் இலக்கிய அறிவு மட்டும் போதாது; பல்துறை அறிவும் வேண்டும். சங்கப் புலவர்களுக்கு இருந்த இயற்கையைப்பற்றிய பட்டறிவு தற்காலத்தில் இல்லாத தால் அறிவியல் துணை கொண்டு ஆராய வேண்டியுள்ளது.

இந்நூல், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிடும் திங்கள் இதழான 'செந்தமிழ்ச் செல்வி'யில் தொடர்ந்து வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பாகும். அக்கட்டுரைகளில் தேவையான அளவு திருத்தியும் விரித்தும் செப்பமுற நூலாக்கப்பட்டுள்ளது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பரந்த உள்ளத்தோடு ஒரு சங்கப் புலவன் கூறினான். சங்க காலத்தில், நாகரிக உலகு என்று கருதப்பட்ட உரோம, கிரேக்க நாடுகளுடன் தமிழகம் கொண்டிருந்த வாணிகத் தொடர்பு, மணிகளின் ஆராய்ச்சி யிலிருந்து நன்கு விளங்கும். சங்க இலக்கியத்திற்குப் பிறகு

மணிகளைப் பற்றியதாகச் சிலப்பதிகாரத்திலும், கல்லாடத்திலும், திருவிளையாடற் புராணத்திலும் பல செய்திகள் - நூலிலும் உரையிலும் காணப்படுகின்றன. ஆனால் இச்செய்திகளில் பலவற்றிற்கு இன்று விளக்கம் தர முடியவில்லை.

இராஜராஜ சோழனும், இராஜேந்திர சோழனும் கோயில் களுக்கு அளித்த அணிகலன்களில் மிகப் பல, மணிகளை உடையனவாக இருந்தன. மணிகளைப்பற்றிய செய்திகளும் நிறையக் கூறப்பட்டுள்ளன. ஆனால் அவைகளில் பல செய்தி கள் விளங்காமல் உள்ளன.

மணிகளைப் பற்றிய மிகுந்த அறிவுடையவராகத் தமிழர்கள் இருந்துள்ளனர். மணிகளைப் பற்றிய நூல்களும் அக்காலத்தில் இருந்தன. ஆனால் இக்காலத்தில் அந்த அழகு மணிகளைப் பற்றிய அறிவும், நூல்களும் இல்லாதிருப்பது ஒரு குறையே.

சங்க காலத்தில் கூறப்பட்ட மணிகளைப்பற்றி நான் எழுதிய இந்த நூலை, சென்னை சேகர் பதிப்பகத்தார் நல்ல முறையில் அழகாக உருவாக்கி வெளியிடுகிறார்கள். தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றுப் பயன்பெறுமென்று நம்புகின்றேன்.

புதுவை<br>
4 - 12 - 80 }

பி. எல். சாமி

# பதிப்புரை

இது ஓர் ஆய்வு நூல். இந்நூலாசிரியர் உயிரியல் கல்வி கற்றவர்; குடும்பவழியில் நிறைந்த தமிழார்வம் உடையவர்; இலக்கியத்தில் விருப்புடன் மூழ்கித் திளைப்பவர். எதனையும் ஆய்வு நேர்க்கோடு கற்றுச் சுவைக்கும் இயல்புடையவர். மேலும் இவர், நூல்களை ஒப்பு நோக்கி ஆராய்ந்து உண்மை கண்டறியும் துடிப்புடையவராகவும் விளங்குகின்றார்.

தமிழ் மொழிக்குத் தொண்டு செய்த அறிஞர் பெருமக்களில் பலரும் தமிழ்ப் புலவர்களாக - தமிழ்ப்பேராசிரியர்களாக இருப்பதை வரலாறு நமக்குக் காட்டுகிறது.

தமிழ் இலக்கிய வரலாற்றில், புதிய நோக்கினையும், புதிய சிந்தனைகளையும், புதிய கருத்துகளையும் ஆக்கிச் சேர்த்து புதுமை புரிந்த ஒரு சில அறிஞர்களை நாம் எண்ணிப் பார்க்கும் போது ஒரு வியப்பான செய்தி புலனாகின்றது.

பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை, டாக்டர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, பல்கலைச் செல்வர் டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் முதலான அறிஞர் பெருமக்கள் சட்டம் படித்தவர்கள்; மிகுந்த ஆர்வத்தால் அவர்கள் பின்னர் பேராசிரியர்களாகவும் தொண்டாற்றியுள்ளனர்.

அறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் அரசின் பொறியாளராகப் பணியாற்றியவர். இவர்தம் தமிழ்ப் பற்றின்

உயர்வையும், வரிவடிவம் - ஒலிவடிவம் பற்றிய இவரது சிறந்த ஆராய்ச்சிப் பணியின் புகழையும் தமிழுலகம் மறவாமல் போற்றி வருகின்றது. புலவராகவும் இன்றி, ஆசிரியராகவும் இன்றித் தமிழுக்குப் புரட்சிகரமான தொண்டாற்றியவர் இவர் என்பது ஒரு புதுமையாகும்.

அவ்வழியில், அவருக்கு அடுத்து இந்நூல் ஆசிரியர் பி. எல். சாமி அவர்கள் இன்று புதுமை புரியும் ஆய்வாளராக விளங்குகின்றார்.

அறிஞர் பி. எல். சாமி அவர்கள் தமிழில் பட்டம் பெறாதவர்; ஆசிரியராகவும் பணியாற்றியவர் அல்லர். அரசாங்கப் பணியில் வாழ்வைத் தொடங்கியவர். பல துறைகளில் சிறப்புற பணி புரிந்து ஊக்கத்தாலும் உழைப்பாலும் முன்னேறியவர்; இன்று புதுவை அரசின் செயலாளராகவும் மாவட்ட ஆட்சித் தலைவராகவும் புகழோடு செயலாற்றிக் கொண்டிருக்கின்றார்.

அரசுப் பொறுப்பில் அமர்ந்து, மக்களுக்கும் நாட்டுக்கும் நற்றொண்டு புரிந்துவரும் நிலையிலேயும் இவரது இலக்கிய ஆர்வம் குறைந்து விடவில்லை; சலிப்பும் அடையவில்லை. மாறாக மேலும் மேலும் ஆய்வுப் பணியில் முனைப்பாக ஈடுபட்டு, ஆர்வத்துடன் தமிழுக்குப் பயன்மிகு கருத்துகளைக் கண்டளித்து களிபேருவகையுடன் வாழ்கின்றார்.

இப்பெருமகனார்தம் வாழ்வும் செயலும் கற்றவர்கள் அனைவர்க்கும் வழிகாட்டுவதாகவும், உணர்ச்சி தந்து ஊக்கம் தருவதாகவும் உள்ளன.

சிறந்த நூல்களைத் தமிழ் நாட்டுக்குப் படைத்தளித்துள்ள மற்றொருவர், தமிழக அரசின் இரண்டாவது தலைமைச் செயலர் அறிஞர் க. திரவியம் ஐ.ஏ.எஸ். அவர்களாவர். அப் பெரு மகானாரை இங்கே நினைவு கொள்வது பொருத்தமாகும்.

மற்றும், மதுரைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வ. செ. குழந்தைசாமி, கொடுமுடி சண்முகம்

ஆகியோர் பொறியியல் துறையில் பணியாற்றியவாறு, தாய் மொழிக்குத் தொண்டு செய்யும் பேரார்வம் குறிப்பிடத்தக்கது.

செந்தமிழ் வளர்க்கும் புதுவைப் புகழ் மணிகளின் வரிசையில் இன்றைய புகழ் மணியாகத் திகழ்பவர் அறிஞர் பி.எல். சாமி அவர்கள். மறைந்த புதுவைப் பெருமகனார் திருமுடி ந. சேதுராமன் அவர்கள், 'வரலாற்றுக் களஞ்சியம்' எனப் பலர் புகழ வாழ்ந்தவர்; கலை வள்ளல்; அப்பெருமகனாரால் எனக்கு அறிமுகமானவர் அறிஞர் பி. எல். சாமி. அவர்களின் சிறந்த ஆராய்ச்சி நூல், 'சங்க நூல்களில் மீன்கள்' என்ற பெயரில் 1978 ஆம் ஆண்டில் எமது நிலையம் வாயிலாக அழகுடன் வெளியாயிற்று. அடுத்து, 'சங்க நூல்களில் மணிகள்' என்னும் இந்த அரிய ஆய்வுமாலையை மகிழ்வோடு வெளியிடுகின்றோம். அன்போடு ஒத்துழைத்திடும் அறிஞர் அவர்கட்கு இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலாசிரியர் சங்க நூல்களில் மூழ்கித் தோய்ந்த நிலையில் எழுந்த எண்ணங்களும், வேறு பல வரலாற்று இலக்கியங்களைக் கற்று ஒப்பிட்டு ஆராய்ந்து கண்ட முடிவுகளும் இந்த நூலாக உருப்பெற்றிருக்கிறது.

தமிழ் அறிந்தார் முன்னர் இந்நூலை மகிழ்வோடு படைக்கின்றோம். தமிழ் வாழ்வும் வரலாறும் சிறப்பதாக!

**வெள்ளையாம்பட்டு சுந்தரம்**
சேகர் பதிப்பகம்

---

அடுத்த பக்கத்தில்
உலகப்படம் ஒரு பகுதி கி. பி. 200

---



ஆசியா
பெர்ஸிஸ்
அரேபியா
கங்கை
பாலிபோத்ரா
லிமிரிகா
தாப்ரப்ரேன
ஈஜிப்டஸ்
எதியோப்பியா
ஆப்பிரிக்கா



வணிகக் கப்பல் (கி. பி. 200)



மார்க்கோபோலோ காலத்தில்
முத்து எடுக்கப் பயன்படுத்திய கப்பல்
(13-14ஆம் நூற்றாண்டு)



குறும்பர் அல்லது பல்லவர்
நாணயத்தில் காணப்படும்
கப்பல் தோற்றம்



ஆந்திராவில் கிடைத்த
நாணயம் ஒன்றில் காணப்படும்
கப்பல் தோற்றம்

# பொருளடக்கம்


**கோமேதகம்** 9 - 11

மணி பல்லவம் - புன்னாடு

**வைடூரியம்** 12 - 25

கொங்கு நாட்டில்
ஊரின் பெயரா?
பூனைக்கண் போலும்!
தமிழ்ப் பெயரே
கதிர்விடும் மணி
உவமைகள்
மீன் கண்

**நீலம்** 26 - 27

பாலும் நீலமாகும்
உடல் நிறத்திற்கு

**மாணிக்கம்** 28 - 40

கதையா? உண்மையா?
உண்மையன்று
சேலம் பகுதியில்
இறக்குமதியும் ஏற்றுமதியும்
குருந்தம் - மஞ்சள் நிறத்தில்
பலநிற மாணிக்கங்கள்

குற்றமுடையவை
மாறுபட்ட மதிப்பீடு
பெயர் ஒற்றுமை

**வைரம்** 41 - 48

பலநிறங்கள் காட்டும்
பலவகை மணிகள்
தோன்றுமிடம்

**சாணைக் கல்** 49 - 54

சாணைக்கல் செய்பவன்
சாணைக்கல் – கெம்புக்கல்
குப்பை என்பது என்ன?
இன்றைய நிலையில்
ஆய்வுகளில் குறை

**கட்டளைக் கல்** 55 - 57

கருநிறக் கற்கள்
தரம் உரைக்கும் கல்

**பளிங்குக் கல்** 58 - 64

பல நிறங்களில்
பொருந்தா உரை

**பவளம்** 65 - 69

தேடிவந்த பவளம்
பயன்பட்ட வகைகள்

**முத்து** 70 - 91

புகழ் பெற்ற முத்து
வலம்புரிச் சங்கின் முத்து
மார்க்கோபோலோ கூற்று
பெத்தலார்
தொள்ளாயிரம் பார்
முத்தொள்ளாயிரம் - நூல்

முத்துச் சிப்பிகள் பற்றி
சிப்பியும் சங்கும்
முத்து பிறப்பது எப்படி
செயற்கை முத்து
கொற்கை முத்து
கிரேக்கரின் முத்து ஆர்வம்
முத்து அணியப் பெற்ற ஆர்வம்
முத்து மேகலை
பெயர்களில் முத்து
ஒற்றைக் கிளிஞல்

**வரலாற்றின் ஒளிவீச்சு!** 92 - 101

உண்மைச் செய்தி, பாண்டிய கவாடம்
அலைவாய் - ஆலவாய்
தொண்டி, கபாடபுரம்
தாம்பரபர்ணிகம், இரு துறைகள்
முத்தும் சோழரும்
பந்தர் - விளக்கம்
பந்தலாயினிக் கொல்லம்

**ஆய்வுப் பயன்** 102 - 114

மொழிமாற்றம் - பேர்யாறு
மிளகு - மரீசி
பெயர்கள் பிறந்த வழி
யானையிடம் முத்தா?
கல்வெட்டில் காணும் முத்துகள்
கருமுத்து
தமிழ்ப் பெயரே

**இணைப்பு** 115 - 131

மணிக் கலம்
கம்பர் கருத்துகள்
மேற்கோள் நூல்கள் 133



# கோமேதகம்

## திருமணி

சங்க இலக்கியத்தில் மணிகளைப்பற்றிய பல செய்திகளைக் காணலாம். முன்னோர் முத்தையும் மணிகளில் ஒன்றாகக் கொண்டனர். இலக்கியத்தில் மணிகள் என்று சிறப்பாக அழைக்கப்படுபவை மாணிக்கம், நீலம், புட்பராகம், வைடூரியம், கோமேதகம் ஆகிய ஐந்து மணிகளாகும்.

" ஒருமைத் தோற்றத் தைவேறு வனப்பின்
இலங்குகதிர் விடூஉ நலங்கெழு மணிகளும் "
— சிலம்பு : ஊர்காண் காதை : 191 - 192

இந்தக் கற்களையே சங்க நூல்களில் 'இலங்குகதிர்த் திருமணி' என்று அழைத்தனர்.

" இலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பின் நாடு "
—பதிற்றுப் பத்து 6 : 8, 19 - 20

சங்க நூல்களில் இந்த ஐந்து இரத்தினக் கற்களையே 'திருமணி' என்று அழைத்தனர். மணி என்ற பெயர் பெரும்பாலும் மாணிக்கத்திற்கும் நீலத்திற்கும் பெயராக வழங்கியது.

தமிழ் நாட்டில் கிடைத்த கற்களில் சிறந்தவை வைடூரியமும் நீலமும் ஆகும்.

## ஏற்றுமதி

தமிழ் நாட்டில் விளைந்த மணிக்கற்களைத் தவிரத் தமிழ் நாட்டுத் துறைமுகங்களுக்குப் பலவகை மணிக்கற்கள் கொண்டு வரப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியானதைப்பற்றியும் பிறநாட்டார் எழுதியுள்ளனர். தொண்டி, முசிறி ஆகிய துறைமுகங்களிலிருந்து பலவகை மணிகள் ஏற்றுமதி செய்யப் பட்டதாகப் 'பெரிபுளூஸ்' என்ற நூல் கூறியுள்ளது. இந்த மணிகளில் பல தமிழ் நாட்டில் கிடைக்காதவையாகும் இவை பெரும்பாலும் ஈழ நாட்டிலிருந்து கொணரப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டவையாகக் கருதலாம்.

## மணிபல்லவம்

ஈழ நாட்டில்தான் சிறந்த மணிகள் நிறையக் கிடைத்தன. மணிகள் கிடைத்த தீவையே மணிமேகலை 'மணிபல்லவம்' என்று அழைத்துள்ளது.

தமிழ் நாட்டில், கொங்கு மண்டலத்திலேதான் நிறைய மணிகள் கிடைத்தன என்று ஆராய்ச்சியாளர் கண்டுபிடித் துள்ளனர். கோயமுத்தூர் மாவட்டத்தில் பாடியூர் என்ற ஊரில் உயர்ந்த மணிக்கற்கள் கிடைத்ததை உரோமர் கி. பி. முதல் நூற்றாண்டிலேயே குறிப்பிட்டுள்ளனர். இங்கு ஒருவகைக் கோமேதகக் கல் (Beryl) கிடைத்தது என்று தெரிகின்றது.

ஆந்திரத்தில் பட்டிப்புரோலு தூபியில் (Bhattiprolu Stupa) கோமேதக அணிகள் அகப்பட்டுள்ளன.

பிளினி என்ற மேல்நாட்டு ஆசிரியர் கோமேதகம் இந்தியாவில் கிடைப்பதாக எழுதியுள்ளார்.

## புன்னாடு

இந்தக் கற்கள் கிடைத்த புன்னாடு என்ற ஊரைச் சங்க காலத்தில் நன்னன் வென்றதாகக் கூறப்பட்டுள்ளது.

மைசூருக்கு அருகே உள்ள இந்த நாட்டிலும் ஒருவகைக் கோமேதகம் கிடைத்துள்ளது. இங்குக் கிடைத்த கோமேதகம் நீல நிறமுடையதாக இருந்தது.

இந்த நீலக் கற்களை (Acquamarine) சுரங்கத்தில் இருந்து எடுத்ததாகப் பிளினி கூறியுள்ளார்.

# வைடூரியம்

தமிழ் நாட்டில் கிடைத்த மற்றொரு விலையுயர்ந்த மணிக் கல் வைடூரியமாகும்.

கௌடில்யர் எழுதிய அர்த்தசாத்திரத்தில் வைடூரியம் மலைய மலையிலும் விந்திய மலையிலும் கிடைத்ததாக எழுதியுள்ளார்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் வைடூரியத்தில் ஒருவகை கிடைத்ததாகச் சிலர் கருதுகின்றனர்.

## கொங்கு நாட்டில்

கொங்குநாட்டுக் காங்கயம் பகுதியிலும், கேரளத்தில் நெடு மாங்காடு என்ற வட்டத்திலும், மணிக்கல் என்ற இடத்திலும் ஒருவகை வைடூரியம் (chrysoberyl) கிடைத்ததாக ஆராய்ச்சி யாளர் எழுதியுள்ளனர்.

புத்தபட்டர் (Buddha Bhatta) என்ற ஆசிரியர் தாம் எழுதிய நூலில் 'விடூர' மலையில் வைடூரியம் கிடைப்பதாகவும், அந்த மலை கொங்கு நாட்டில் இருந்ததாகவும் எழுதியுள்ளார்.

கொங்கு நாட்டில் வைடூரியம் கிடைத்ததென்பதற்கு இலக்கியச் சான்று உள்ளது. கி. பி. 225 ஆம் ஆண்டில்

பழைய கம்போடியா என்று கருதப்படும் புனல் (Funan) நாட்டிலிருந்து வைடூரியம் பிற நாடுகளுக்கு அனுப்பப்பெற்ற தாக வெளிநாட்டுப் பயணியர் குறிப்புக் கூறியுள்ளது. இந்த வைடூரியம் தமிழ் நாட்டிலிருந்து சென்றதாக வரலாற்று ஆசிரியர் கூறுகின்றனர்.

பூனான் என்ற பெயர் புனல் நாடு என்ற பெயரின் மாற்றமே என்று அறிஞர் தி. நா. சுப்பரமணியன் கூறுவர்.

பூனான் நாட்டைத் தோற்றுவித்தவனே தமிழ் நாட்டிலிருந்து சென்ற ஓர் அரசன் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். வைடூரியம் கீழை நாடுகள் எங்கும் கிடைப்பதில்லையாதலால் தென்னாட்டிலிருந்து பூனான் நாட்டுக்குச் சென்றதாக ஆராய்ச்சியாளர் கூறுவர்.

## ஊரின் பெயரா?

வைடூரியம் என்ற பெயரைப்பற்றி ஆராய்ச்சி நடந்துள்ளது. வைடூரியம் என்ற பெயர் அதே பெயருடைய நாட்டின் பெயரால் வந்தது என்று சிலர் கூறுவர். பாணினியும் பதஞ்சலியும் வைடூரிய நாடு (விடூர நாடு) இருந்ததாகக் கூறியுள்ளனர். ஆனால், இந்த நாடு இருந்த இடத்தைப்பற்றிக் குழப்பமான செய்திகளையே கூறியுள்ளனர்.

டாலமி என்ற வெளிநாட்டு ஆசிரியர் 'ஒருடையான்' (Oroudian) என்ற மலையில் வைடூரியம் கிடைத்ததாக எழுதினார். இந்த மலை சாத்புரா மலைத் தொடரில் இருந்ததாக அவர் எழுதினார்.

வைடூரியம் கிடைத்த இடத்தையெல்லாம் வைடூரிய மலை என்றழைத்ததால் மயக்கம் ஏற்பட்டதாகத் தெரிகின்றது.

வைடூரியம் என்ற வடமொழிப் பெயர் 'வெளூர்ய(ம்)' (Velaurya) என்ற பாலி மொழியில் வழங்கும் பெயரிலிருந்து வந்ததாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

வைடூரியம் என்ற பெயர் 'வேளூர்' (வேலூர்) என்ற தமிழ்ப் பெயரிலிருந்து வந்ததாக T. Masters என்ற அறிஞர் கருதினார்.

பாலி மொழிப் பெயரான 'வெளூர்ய (ம்)' என்பது தமிழி லிருந்து வந்திருக்கலாம் என்று கருத இடமிருக்கின்றது.

பழைய அக்கேடிய மொழியில் (Akkadian) வைடூரியத்தை 'புரல்' (Buralle) என்று அழைக்கின்றனர். இப்பெயர் கி. மு. எட்டாம் நூற்றாண்டிலேயே வழங்கியது என்று கூறுவர். இப் பெயரே பிற்காலத்தில் Beryl என்ற மேல்நாட்டு மொழிகளில் மாறி வழங்கியது.

கிரேக்க மொழியில் இப்பெயர் Beeryllos என்று வழங்கியது. கிரேக்க மொழிப் பெயர் 'வெளூர்ய' என்ற பாலி மொழிப் பெயரி லிருந்து அல்லது 'வைடூர்ய' என்ற வடமொழிப் பெயரிலிருந்து வந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் எழுதினர்.

தமிழகத்திலிருந்தே வெளிநாட்டுக்கு வைடூரியம் சென்றதால் அதன் பெயர் தமிழிலிருந்து சென்றிருக்கலாம் என்று கருத வேண்டும்.

'வெளூர்ய' என்ற பாலி மொழிச் சொல் வெருகு என்ற சங்ககாலத்துச் சொல்லிலிருந்து வந்ததாகத் தெரிகின்றது.

## பூனைக்கண் போலும்!

வைடூரியத்தைத் தற்கால வணிகர் 'பூனைக் கண்' (Cat's-eye) என்றழைப்பர். பூனையின் கண் போன்று பச்சையாகவும் பூனைக்கண்ணின் நடுவில் காணப்படும் செங்குத்தான வெள்ளைக் கோடு போல வெண்மையான கோடு உடையதாகவும் இந்தக் கல் காணப்படுமென்பதால் பூனைக்கண் என்று பெயரிடப்பட்டது. ஆனால், இந்தக் கல்லை இன்னும் பொருத்தமாய் 'வெருகுக் கண்' என்றழைக்கலாம்.

வைடூரியத்தைத் திருவிளையாடற் புராணத்தில் 'வெருகின் கண் திறந்ததாய்' என்று கூறியதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

வைடூரியத்தின் நிறத்திற்கும் தோற்றத்திற்கும் வீட்டுப் பூனையின் கண்ணைவிடக் காட்டுப்பூனையின் கண்ணே சிறந்த பொருத்தமாகும் என்பதை உணர வேண்டும்.

வெருகின் கண் பச்சை நிறமுடையது என்று அகநானூறு கூறியுள்ளது. "குவியடி வெருகின் பைங்கண் ஏற்றை" (367) என்று வெருகின் பசிய கண் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கல் பச்சையாக இருப்பதால் படிகப் பச்சை என்று இக்காலத்தில் அழைப்பர். 'வெருக்குக் கண்' என்ற பெயர் நாலடியாரில் வருகின்றது.

" விருப்பிலார் இல்லத்து வேறிருந்து உண்ணும்
வெருக்குக்கண் வெங்கருணை வேம்பாகும் "
— நாலடியார் 210

வெருகின் கண்ணை ஒப்பிட்டுக் கூறும் வழக்கம் நாலடியாரிலிருந்து தெரிகின்றது. வெருகின் கண்ணை வைடூரியத்திற்கு ஒப்பிட்டுத் திருவிளையாடற் புராணம் கூறியது போலச் சங்க காலத்திலேயே வைடூரியக் கல்லை வெருகின் கண்ணிற்கு ஒப்பிட்டுப் பெயர் வழங்கியிருக்கலாம்.

## நிற மாறுபாடு குறிக்க

முத்திற்கு வெருகின் கண்ணை ஒப்பிட்டுக் கூறிய அகநானூற்று வரியை இது சார்பாகக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

" வெருகிருள் நோக்கி அன்ன கதிர்விடு
பொருகாழ் முத்தம் இடைமுலை விளங்க "
— அகம் 73

வெருகு இருளை நோக்கும்போது கண்ணின் நடுவில் கோடு இருக்காது. இரவில் கண் இரப்பை நன்கு திறந்திருக்குமா தலால் கண்விழி உருண்டையாக முத்துப்போல இருக்கும். முத்தில் வெண்மையைத் தவிரப் பிற நிறங்களும் உண்டு.

வெருகு இருளில் நோக்கிய கண்ணை முத்திற்கு ஒப்பிட்டது போலச் சங்ககாலத்திலேயே வெருகு பகலில் நோக்கிய கண்ணை வைடூரியக் கல்லிற்கு ஒப்பிட்டிருப்பர். வெருகு பகலில் நோக்கும் கண் பச்சையாகவும் நடுவில் வெண்மையான கோடுடையதாகவும் இருக்கும். இதைக் கருதியே திருவிளை யாடற் புராணம் 'வெருகின் கண் நிறத்ததாய்' என்று கூறிற்று; வெருக்குக் கண் என்று நாலடியார் கூறிற்று.

## தமிழ்ப் பெயரே!

வெருகின்கண், வெருக்குக் கண் என்ற பெயர்களே வைடூரியத்தின் பெயராக முற்காலத்தில் வழங்கியிருக்க வேண்டும். வெருகு என்ற பெயரின் அடிப்படையாகவே பாலி மொழிப் பெயரான 'வெருள்ய' என்பது தோன்றியதாகத் தெரி கின்றது. வெருகு என்ற பெயரே வெரு (வெருள்) என்ற வேர்ச்சொல்லடி வந்தது. வெருட்குக்கண், 'வெருள்ய' என்ற பெயர்களில் அடிப்படைச் சொல் 'வெரு' என்பதாகும். வெருள் என்றும் கொள்ளலாம்.

" வெருக்கு விடையன்ன "

" வெருள் நோக்குக் கயந்தலை "

என்று வரும் புறநானூற்று (324) வரியில் வெருள் நோக்கு கூறப்பட்டுள்ளது.

'வெருள் பிணைபோல நோக்கம்' என்று பழமொழி நானூறு (13) கூறியுள்ளது.

பாலி மொழிப் பெயரான 'வெருள்ய' என்பது வெருள் நோக்கு உடைய வெருக்கின்கண் என்ற பெயரடிப்படையில் தோன்றியது என்று கருதுவதே மிகவும் பொருத்தமானது. வெருள் என்ற தமிழ்ச் சொல்லும் 'புருள்' என்ற அக்கேடியப் பெயரும் நெருங்கிய ஒலியொப்புமையுடையதைக் காணலாம்.

பூனைக்கண் (Cat's - eye) என்ற மேல் நாட்டு மொழி களில் வழங்கும் இன்றைய பெயர்கூட 'வெருக்குக் கண்' என்ற தமிழ்ப் பெயரின் மரபாகவே பிற்காலத்தில் தோன்றியதெனத் தெரிகின்றது.

வைடூரியம் என்ற பெயருக்குப் பொருத்தமான வேர்ச்சொல் விளக்கம் தமிழ் மொழியில் காணப்படுவதாலும், வைடூரியக்கல் தமிழ் நாட்டில் சிறப்பாகக் கிடைத்ததாலும், தமிழகத்தில் கிடைத்த இந்தக் கல் பண்டைக் காலத்திலேயே வெளி நாட்டுக்கு அனுப்பப்பட்டுச் சிறப்புப் பெற்றதாலும் வைடூரியம் என்ற இதன் வடமொழிப் பெயர் தமிழ் மொழியிலிருந்து பாலி மொழிவழி சென்றது என்றும் கூறலாம்.

கொங்கு நாட்டில் மணிகள் கிடைத்ததாகப் பதிற்றுப் பத்துக் கூறியது பெரும்பாலும் வைடூரியத்தையே குறித்த தாகலாம்.

## கதிர்விடும் மணி

மணிகளில் சிறந்ததைத் 'திருமணி' என்றழைப்பது சங்க நூல் வழக்காகும். கதிர்விடும் மணியையே திருமணி என் றழைத்தனர். 'கதிர்த் திருமணி' என்றழைப்பதைக் கவனிக்க வேண்டும். முத்தைக்கூட 'கதிர்விடு முத்தம்' என்று கூறி யிருப்பதைக் காணலாம். இந்தக் கதிர் என்பதையே மணிநூலார் 'Vitreous' என்று கூறுவர்.

வைடூரியத்தை நன்றாகக் கதிர் ஒளி வீசும்படி செய்ய வட்டமாகவும் உருண்டையாகவும் அமைப்பர். பட்டையுடைய தாகச் செய்தால் சிறப்பாக ஒளி வீசும்.

"முழவுமரு டிருமணி மிடைந்தநின்
அரவுற மூார முகக்குவ மெனவே"

— புறம் 368

சேர அரசன் முழவு போன்ற உருவில் பெரிய வைடூரி யத்தைக் கழுத்தில் ஆரமாக அணிந்திருந்தான் என்று தெரி கின்றது. புறநானூறு கூறும் முழவு போன்ற திருமணி வைடூரிய மாகவே இருக்கலாம். சேர அரசர்கள் கொங்கு நாட்டையும் ஆண்டதால் கொங்கு நாட்டில் கிடைத்த வைடூரியக் கற்கள் சேர அரசனுக்கு முதலுரிமையாகக் கிடைத்திருக்க வேண்டும்.

" வான்கதிர் திருமணி விளங்குஞ் சென்னிச்
செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன் "

என்று வரும் புறநானூற்றுப் (1'0) பாடலில் 'வான்கதிர் திருமணி' என்று சொல்லப்பட்டிருப்பதால் இந்த மணியும் வைடூரியத்தையே குறித்ததாகலாம்.

வாலிய ஒளியுடைய மணியானது சுழலும் வெண்மையான நூலிழை போன்ற கதிரையுடைய வைடூரியம் என்று கருதலாம். இந்தக் கதிரை நூலோட்டம் என்று கூறுவர். பச்சை நிறத் திற்குள் இந்த நூலிழை போன்ற வெள்ளையான ஒளிக் கதிரே காட்டுப்பூனைக் கண் போலத் தோற்றிற்று.

திருவிளையாடற் புராணத்தில் இக்கல்லைக் காட்டுப் பூனையின் கண்ணோடு ஒப்பிட்டதுடன் மூங்கில் இலை, மயில் கழுத்து ஆகியவற்றின் நிறங்களுடன் ஒப்பிட்டுக் கூறியதைக் காணலாம். சிலப்பதிகாரத்தில் "தீதறு கதிரொளித் தெண்மட்டுருவவும்" என்று வைடூரியக் கல் விளக்கப் பட்டுள்ளது. கதிர் ஒளிவிடும் தேன் துளியைப்போல இருந்ததாகக் கூறியதைக் காணலாம்.

பசுந்தேன் துளியைப்போல வைடூரியம் இருந்ததாகக் கூறியதென்று கொள்ள வேண்டும். கி. பி. முதல் இரண்டு

நூற்றாண்டுகளில் பிளினி, டாலமி ஆகியோர் எழுதிய நூல்களிலும் பெரிப்புளூஸ் என்ற நூலிலும் முசிறி, தொண்டி ஆகிய தமிழகத்துத் துறைமுகங்களிலிருந்து வைடூரியம் நிறைய ஏற்றுமதியானதாகக் கூறப்பட்டுள்ளது;

பாடியூரிலும், காங்கயத்திலும், புன்னாட்டிலும் வாணியம்பாடியிலும் வைடூரியம் கிடைத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

கோயமுத்தூர் மாவட்டத்திலும் ஆறுபட்டையுடைய சிறந்த வைடூரியம் கிடைத்ததாகப் பிளினி எழுதியுள்ளார்.

வைடூரியத்திற்காக உரோமர் கொடுத்த பொன் நாணயங்கள் கோயமுத்தூர் மாவட்டத்தில் நிறையக் கிடைத்துள்ளன. பொன்னைவிடத் தமிழகத்திலிருந்து கிடைத்த கடற் பச்சை நிறமுடைய (Acquamarine வைடூரியக் கற்களையே உரோமர் மிகவும் விரும்பினர்.

ஈழ நாட்டில் நீலமணி போன்ற மணிகள் நிறையக் கிடைத்தனவாயினும் பண்டைக் காலத்தில் வைடூரியம் அங்கு நிறையக் கிடைத்ததாகச் செய்திக் குறிப்பு இல்லை.

சங்க காலத்தில் வைடூரியம் தமிழ் நாட்டில் கிடைத்ததாயினும் தற்காலத்தில் கிடைப்பதரிதாக உள்ளது. கோமேதகம் என்று சொல்லப்படும் கல் பண்டைக் காலத்தில் வைடூரியத்தில் ஒன்றாகவே கருதப்பட்டதாகும். பண்டைக் காலத்தில் பச்சைக் கல்லான மரகதத்தையும் வைடூரியத்தையும் ஒன்றாகவே கருதி மயங்கினர்.

## உவமைகள்

மணிகளின் பலவகை நிறங்களைக் குறிப்பிட பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் கண்களோடு ஒப்பிட்டுக் கூறுவது பழந்தமிழர் மரபாகத் தெரிகின்றது.

மணிகளில் தோன்றும் நுண்ணிய நிறங்களை வேறுபடுத்திச் சொல்ல அக்காலத்தில் சொற்கள் நிறைய இல்லை.

மணிகளின் உருட்சியும் திரட்சியும் உருவும் நிறமும் பறவை, விலங்குகளின் கண்களுக்குப் பொருத்தமாக இருந்ததைக் கண்டே இவ்வாறு ஒப்பிட்டுக் கூறினர்.

குக்கிற்கண்

குயிற்கண்

சாதகப்புட்கண்

ஆகிய உவமைகள் பண்டைத் தமிழ் மரபில் தோன்றி யவையே.

மற்றும்,

இந்திர கோபம்

மாதுளம்பூ விதை

முயல் இரத்தம்

குன்றி மணி

கவிரலர்

மயிலின் கழுத்து

பொன்வண்டின் வயிறு

மினிப் பூச்சி

ஆகிய இயற்கைப் பொருள்களின் நிறங்களுடன் மணிகளின் நிறங்களை ஒப்பிட்டுக் கூறியுள்ளனர்.

இந்த மரபிற்கு வடமொழியில் வரலாறு இல்லை.

**மீன் கண்**

பண்டைக் கிரேக்க ஆரியர்கள் முத்துமணியை "மீன்கண்" (fish - eye) என்று அழைத்துள்ளனர். கடலில் கிடைக்கும் முத்தை மீன் கண்ணிற்கு ஒப்பிட்டுக் கூறியது பொருத்தமே.

இந்த மீன் கண் என்ற முத்தின் பெயருடன் பண்டைத் தமிழ் மரபைப் பின்பற்றிக் கிரேக்கர்கள் வழங்கியிருக்கலாம்.

மதுரையில் உள்ள பண்டைத் தமிழ்த் தெய்வமான மீனாட்சியம்மன் மீன்கண்ணி, அங்கயற்கண்ணி (அம் + கயல் + கண்ணி) என்ற பெயர்களுடன் அழைக்கப்படுவதைக் கவனிக்க வேண்டும். இந்தத் தெய்வத்தையே முத்து மீனாட்சி என்று அழைப்பதையும் காணலாம். பண்டைக் காலத்தில் இந்தத் தெய்வத்தின் கண்கள் விலையுயர்ந்த பாண்டி நாட்டு முத்தால் அமைக்கப்பட்டிருக்கும் என்று கருதலாம்.

சங்க காலத்திலேயே மணிக்கண் காக்கை, மணிக்கண் பேடை என்ற வழக்குகள் பாடல்களில் வழங்கியுள்ளன. ஆதலின் மணிகளின் நிறங்களைப் பறவை, விலங்குகளின் கண்களோடு ஒப்பிட்டுக் கூறுவது சங்க காலத்திலிருந்து தொன்று தொட்டு வந்த மரபு என்பது விளங்குகிறது.

மணி என்ற பெயரே தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்றதாக மொழிநூல் வல்லுநர் கருதுகின்றனர்.

பண்டைத் தமிழர் மூன்று பொருள்களை விலைமதிப்பிற்கரியவையாகக் கருதினர். அவை பொன், மணி, முத்து ஆகும். இவை மூன்றும் தமிழ் நாட்டில் கிடைத்து வந்தன. வெளி நாட்டிலிருந்தும் வரவழைக்கப்பட்டன. இவற்றை மூவேறு தாரங்கள் என்று கூறினர். தருவிக்கப்பட்டவை என்ற பொருளில் தாரம் எனப்பட்டதாகக் கருதுதல் வேண்டும்.

“ நீர்திகழ் சிலம்பி னன் பொன் னகழ்வோன்
கண் பொரு திமைக்குந் திண்மணி கிளர்ப்ப
வைந்நுதி வான்மருப் பொடிய வுக்க
தெண்ணீராலி கடுக்கு முத்தமொடு
மூவறு தாரமு மொருங்குடன் சாற்றி ”

— அகம் 282

" பொன்னும் துகிரும் முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும் "

— புறம் 218

பவளத்தையும் விலையுயர்ந்ததாகவே கருதினர்.

சங்க காலத்திலேயே மணிகளின் குற்றத்தையும் குணத்தையும் பழந்தமிழர் தெரிந்திருந்தனர். ஆனால் அவற்றைப் பற்றிய விரிவான விளக்கங்கள் சிலப்பதிகாரத்திலும் அதன் உரைகளிலும், கல்லாடத்திலும், திருவிளையாடற் புராணத்திலும் கிடைக்கின்றன.

சிறந்த, உயரிய மணிக்கற்களைத் திருமணி என்றழைத்த பண்டைத் தமிழர்கள் மணிகளில் குற்றமற்றவையைத் தூமணி என்றும் ஆய்மணி என்றும் அழைத்தனர்.

" இன்றியாண் டையனோ தோழி குன்றத்துப்
பழங்குழி யகழ்ந்த கானவன் கிழங்கினொடு
கண்ணகன் தூமணி பெறூஉ நாடன்

— குறுந்தொகை, 379

கண்விரிந்த தூமணியை மலைக்குன்றின் பழங்குழியில் அகழ்ந்து எடுத்ததாகக் குறுந்தொகை கூறியதைக் கவனிக்க வேண்டும். "ஆய்மணி பொதியவிர்ந் தாங்கு" (நற்றிணை 239), ' அழலவிர் மணி" (ஐங்குறு நூறு, 232) என்று வரும் சங்க நூல் வழக்குகளிலிருந்து உயர்ந்த மணிகள் கதிர்விரித்தலைப் பொதியவிழ்ந்ததுபோல இருந்ததாகவும், நெருப்பு அவிர்ந்ததுபோல இருந்ததாகவும் கூறி விளக்கியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

மணிகளின் கதிர்கள் கண்ணைப் பொரும்படி ஒளிவீசும் என்று கூறியுள்ளனர். 'கண் பொருதிமைக்கும் திண்மணி கிளர்ப்ப' (அகம், 282) என்றும்,

"கதிர்விடு மணியிற் கண்பொருமாடம்"

— புறம், 53

என்றும் கூறப்பட்டதிலிருந்து மணிகள் விடும் கதிர்கள், கண்ணைப் பொரும்படியாக இருக்க வேண்டும் என்று கருதினது தெரிகின்றது. நமது கண்ணைத் தாக்கும்படியாக ஒளிக்கதிர் வீசும் மணி என்று கூறியது கவனிக்கத் தக்கதாகும்.

"திருமணி பொறாத திகழ்விடு பசும் பொன்" என்ற பதிற்றுப்பத்து வரிக்கு (16 : 15) உரை கூறியபோது பொறாத என்ற சொற்கு 'மாறுபட்டுத் தோன்றிய ஒளி' என்று பொருள் கூறியதைக் காணலாம். மணிகளின் கதிர்கள் வெவ்வேறு கோணங்களில் பார்க்கும்போது வெவ்வேறு நிறங்களுடன் மாறுபட்டுத் தோன்றி அழகைத் தருவது இயற்கையில் கண்டதேயாகும்.

# நீலம்

சங்க நூல்களில் 'மணி' என்ற சொல் பெரும்பாலும் நீலத்தையே குறித்து வந்துள்ளது. நீலமணியை (Sapphire) மிகவும் போற்றினர் என்று தெரிகின்றது.

மணி என்ற சொல் மாணிக்கத்தையும் (Ruby) சில இடங்களில் குறித்துள்ளது.

" ஆய்மணி பொதியவிழ்ந் தாங்கு நெய்தற்
புல்லிதழ் பொதிந்த பூத்தப மிதிக்கும் "

— நற்றிணை 239

" மண்ணுறு திருமணி புரையு மேனி "

— புறம் 56

## நீலம் - இருள் நிறம்

நெய்தற்பூப் போன்ற நிறமுடையது என்று கூறப்பட்டிருப்பதால் நீலமணி என்பது தெளிவாகின்றது. நீல நிறத்தையே கருநிறம் என்றும் கூறுவது சங்க கால மரபேயாகும். அதனால் நீலமணியை 'இருள் தெளித் தனையவும்' (சிலம்பு : ஊர் காண் காதை : 50) என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார். இருளைத் தெளிய வைத்ததைப் போல இருந்ததாகக்கூறியது நயமான உவமையாகும்.

பார்போசா என்ற ஆசிரியர் இடைக் காலத்தில் 'Carahatonilam' என்ற பெயருடைய நீலக்கல் கள்ளிக் கோட்டையில் கிடைத்ததாக எழுதியுள்ளார். இந்தப் பெயர் 'காரக நீலம்' (காரகத்து நீலம்) என்ற தமிழ்ப் பெயரே என்று தெரிகின்றது.

நீலமணி தமிழகத்தில் அரிதாகவே கிடைத்து வந்ததாகக் கூறுவர். ஆனால், ஈழத்திலிருந்து நிறைய நீலக்கற்கள் பண்டைத் தமிழகத்திற்கு வந்து முசிறி, தொண்டி முதலிய துறைமுகங்கள் வழியாகச் சங்க காலத்தில் ஏற்றுமதி செய்யப் பட்டன. ஈழ நாட்டில் இரத்தினபுரத்தில் இன்னும் சிறந்த நீலக்கற்கள் கிடைக்கின்றன.

நீலக்கல்லின் தலையாய தன்மை தன்னுடன் சேர்ந்த பொருளையும் நீலநிறமாகக் காட்டுவதாகும்.

## பாலும் நீலமாகும்

> " கறந்த பாலினும் காசில் திருமணி
> நிறங் கிளர்ந்துதன் நீர்மை கெட்டாங்கு "

என்று சிந்தாமணியில் (1325) கூறப்பட்டுள்ளது. கறந்த பாலில் நீலக்கல்லைப் போட்டால் பாலும் நீல நிறமாகக் காட்சி யளிக்கும் என்று திருத்தக்க தேவர் கூறியுள்ளார்

பண்டைத் தமிழகத்தில் சேலத்திலும், மலையாளத்திலும், காவிரிப் படுகையிலும் நீலக்கற்கள் சிறிதளவு கிடைத்ததாக வெளிநாட்டு ஆசிரியர்கள் குறிப்பிலிருந்து தெரிகிறது; இதை Nilion என்று குறிப்பிட்டுள்ளனர்.

## உடல் நிறத்திற்கு

நீலமணிகளில் கருநீல மணிகளையே பண்டைத் தமிழக மக்கள் மிகவும் சிறப்பாகக் கருதினதாகத் தெரிகின்றது. கருநீல

மணியை ஆடவரின் நிறத்திற்கு ஒப்பிட்டுக் கூறும் ஒரு மரபும் வழங்கி வந்தது.

மகளிரின் நிறத்திற்கும் நீலமணியை ஒப்பிட்டுக் கூறுவது வழக்கமாயிருந்தது.

"மண்ணுறு திருமணி புரையு மேனி"

—புறம் 56

"திருமணி புரையும் மேனி மடவோள்"

—நற்றிணை 8

தமிழர் மிகவும் போற்றிய மணிகளில் நீலமணியும் ஒன்று என்று கொள்ளலாம்.

நீலமணியில் ஈழக நீலமணி என்ற பெயரும் தமிழில் வழங்கியுள்ளது. இந்திர நீலம் என்று ஒருவகை நீலமணியை அழைத்தனர். வான வில்லிலுள்ள நீல நிறத்தை உடைய மணி என்று பொருள் கூறுவர். வானவில் இந்திரனுடைய வில் என்று பிற் காலத்தில் கருதினர். ஆதலின் இந்திர நீலம் என்றழைத்தனர்.

திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்ட நீலமணிகளில் இந்திர நீலமும், மாநீலமும் சிறந்த நீலக் கற்களாகக் குறிக்கப் பட்டுள்ளன. மாநீலம் முற்றிலும் கரியதென்று கூறப்பட்டிருப்பதால் கார்நீலம், காரகத்து நீலம் என்று குறிப்பிட்ட கல் இதுவே யாகலாம். கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளில் நீலக் கல்லைக் கிரேக்க மொழியில் சபேரசு (Sappheeuros) என்றும், ஈபுரு மொழியில் சபீர் (Sappir) என்றும் அழைத்தனர்.

இந்தப் பெயர்கள் வடமொழிப் பெயரான 'சனிப்பிரியா' என்பதன் மாற்றமே என்று வடமொழியாளர் கூறினர். சனிக் கோளிற்கு உகந்த மணி என்பது அதன் பொருள். ஆனால் இந்தக் கருத்தை ஆராய்ச்சியாளர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த வடமொழிச் சொல்லே மிகப் பிற்காலத்து வழங்கியது என்பர்.

ஈழ நாட்டில் பெருமளவு கிடைத்த உயர்ந்த நீலமணிகள் அக்காலத்தில் தமிழ் நாட்டுத் துறைமுகங்களான முசிறி தொண்டி வழியாகவே மேல் நாடுகளுக்கு ஏற்றுமதியானதாகப் பெரிப்புளூஸ் என்ற நூலில் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. தாலமி, காஸ்மோஸ் (Cosmos) ஆகிய ஆசிரியர்களும் அக்காலத்தில் ஈழத்திலேயே சிறந்த நீலமணி நிறையக் கிடைத்ததைக் குறிப்பிட்டுள்ளனர். கிழக்கு ஆசிய நாடுகளான பர்மா, சயாம் ஆகிய நாடுகளில் கிடைத்த நீலமணிகளும் தமிழ்நாட்டு மேற்கத்திய துறைமுகங்கள் வழியாகவே கி. பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதைக் குறித்து கிரேக்க, உரோம ஆசிரியர்கள் எழுதியுள்ளனர்.

மணிகளின் வணிகத்தில் தமிழ்நாட்டுத் துறைமுகங்கள் எந்த அளவு சிறந்தவையாக இருந்தன என்றால் கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் நேராக வந்த நீலக் கற்களைக் கூடத் தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதியானதாகக் கிரேக்கர்கள் மயங்கிக் கூறினராம்.

நீலக் கற்களை மேல்நாட்டார் நகைகளுக்குப் பயன்படுத்தினர். உரோம அரசர்கள் நீலமணியை மோதிரங்களில் அணிந்து வந்தனர்.

# மாணிக்கம்

## மாணிக்கம் - மணி

மணி என்ற பெயர் பெரும்பாலும் நீல மணியையே குறித்து வழங்கியிருப்பினும் சில சங்கப் பாடல்களில் மாணிக்கக் கல்லைக் குறித்து வழங்கினர் என்பது முன்பும் கூறப்பட்டது. மாணிக்கம் தமிழ் நாட்டில் மிக அரிதாகவே கிடைத்ததாக மேலைநாட்டு ஆசிரியர்கள் எழுதியுள்ளனர். சேலம் பகுதியில் சிறிதளவு கிடைத்ததாகவும் எழுதியுள்ளனர். ஆனால், தமிழ் நாட்டிற்குப் பிற நாடுகளிலிருந்து மாணிக்கக் கற்கள் நிறைய இறக்குமதியானதாகக் கிரேக்க, உரோம ஆசிரியர்கள் குறிப் பிட்டுள்ளதை மறக்கக் கூடாது. ஆதலின் மாணிக்கத்தை சங்க காலத்தில் தமிழர் நன்கு அறிந்திருப்பர் எனலாம்.

" ஐவனங் காவலர் பெய்தீ நந்தின்
ஒளிதிகழ் திருந்துமணி நளியிரு ளகற்றும்
வன்புல நாடன் வயமான் பிட்டன் "

—புறம் 172

" ஞாயிற் றன்ன வாய்மணி மிடைந்த
மதியுறழ் மாரம் மார்பிற் புரள "

—புறம் 362

இந்தப் புறநானூற்றுப் பாக்களில் வரும் மணி என்ற சொல் லுக்குப் புறநானூற்றுப் பழைய உரைகாரரும் உ.வே. சாமிநாதய் யரும் மாணிக்கம் என்றே பொருள் கூறியுள்ளனர்.

மாலையில் ஒளி கெட்டவிடத்து சங்கில் பொருத்தப்பட்ட மாணிக்கக் கல் இருளை நீக்கியதாகப் புறநானூறு கூறியுள்ளது.

மாணிக்கக் கல்லின் உள்ளே அணையாத தீக்கதிர் ஒளி விடுவதாக மணி நூல் வல்லுநர் கூறுவர்.

புறநானூறு மாணிக்கக்கல் இருளை நீக்கி ஒளியைத் தந்த தாகக் கூறியுள்ளது. ஞாயிறு போன்று ஒளி தந்ததாகவும் புறநானூறு கூறியுள்ளது. நல்லப் பாம்பின் தலையில் மணி இருந்ததாகச் சில சங்கப் பாடல்கள் குறிப்பிட்டுள்ளன. இந்த மணியை மாணிக்கம் என்றே கூறுவர்.

நாகரத்தினம்

நாகமணி

நாகமாணிக்கம்

என்ற பெயர்கள் இக்காலத்தில் இந்த மணியைக் குறித்து வழங்குகின்றன.

" மேய்மணி யிழந்த பாம்பின் நீநனி "

—அகம் 372

" நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கின் புலரவீர்க்கும் "

—அகம் 72

" திருமணி யுமிழ்ந்த நாகங் காந்தட்
கொழுமடற் புதுப்பூ ஊந்தும்பி
நன்னிற மருளுமருவிடர் "

—அகம் 138

" உருமுச்சிவந் தெறிந்த உரனழி பாம்பின்
திருமணி விளக்கிற் பெறுகுவை "

—அகம் 92

" அருவி தந்த அரவுமிழ் திருமணி
பெருவரைச் சிறுகுடி மறுகுவிளக் குறுத்தலின் "
—அகம் 192

" உயர்வரை அடுக்கத்து ஒளிறுபு மின்னிப்
பெயர்கால் மயங்கிய பொழுதுகழி பானாள்
திருமணி அரவுத் தேர்ந்து உழல "
—நற்றிணை 255

## கதையா? உண்மையா?

மிகவும் முதிய நாகப் பாம்பின் தலையில் மாணிக்கக் கல் தோன்றுவதாகவும், இரவில் அந்தக் கல்லின் ஒளியில் இரை தேடுவதாகவும் ஒரு நம்பிக்கை இந்தியாவில் பல இடங்களிலும் நிலவி வந்தது. கதைகளிலும் புராணங்களிலும் வழங்கியது.

மாணிக்கக் கல்லை நாகப்பாம்பு கீழே வைத்து அதன் ஒளியில் இரை தேடுமாம். இந்தக் கல்லின் மேல் மாட்டின் சாணியையோ மண்ணையோ போட்டு மூடிவிட்டால் ஒளி மறைந்துவிடும். இவ்வாறு செய்து மாணிக்கக் கல்லை மக்கள் எடுத்துக் கொள்வர் என்று கதைகள் கூறுகின்றன.

சங்க நூல்களிலும் இரவில் மேய்வதற்காக மாணிக்கத்தை நாகப்பாம்பு பயன்படுத்தியதாகக் கருதினதால் 'மேய்மணி' என்றழைத்தனர்.

நாகம் மணியை உமிழ்வதாகவும் கூறப்பட்டுள்ளது. நாகம் தனது மாணிக்கத்தைத் தேடி அலைந்ததாக நற்றிணை 255-ஆம் பாடல் கூறியுள்ளது.

நாகம் உமிழ்ந்த மாணிக்கத்தை அருவி அடித்து வந்ததாகவும் அது மலையிலிருந்த சிறுகுடியினரின் தெருவில் விளக்காக உதவியதாகவும் அகநானூறு கூறியுள்ளது. பாம்பின்

தலையிலிருந்த மாணிக்கக் கல்லைப் பற்றிச் சங்க காலத்திலேயே செய்திகள் பரவியிருந்தன.

அகநானூறு 138 ஆம் பாடலில் நாகம் உமிழ்ந்த திருமணி தும்பியின் நன்னிறத்தை ஒத்திருப்பதாகக் கூறியதிலிருந்து அதை நீலமணியென்றும் கொண்டனரென்று கருதலாம். திருவிளையாடற் புராணமும் 'பாம்பின் பெரிய முத்து நீலரத்தின நிறமுடையதாம்' என்று கூறியுள்ளது. ஆனால் நாகமணியை மாணிக்கமென்றே கருதினர்.

## உண்மையன்று

நாகத்தின் தலையில் மாணிக்கக்கல் இருந்ததாகக் கூறியது ஒரு கற்பனைச் செய்தியேயாகும். இது வட நாட்டிலிருந்து வந்ததாகத் தெரிகின்றது. நாக இனத்தாரிடையே வழங்கிய செய்தி பிற்காலத்தில் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் பரவியிருக்கலாம்.

"திருமணி" என்று சில பாடல்களில் மாணிக்கத்தையும் குறிப்பிட்டுள்ளார்கள்

" நெருந லெல்லை யேனற் றோன்றித்
திருமணி யொளிர்வரும் பூணன் வந்து
புரவலன் போலுந் தோற்ற முறழ் கொள "

—அகம் 32

" பல் கதிர் வாங்கிய படுசுட ரமையத்துப்
பெருமரங் கொன்ற கால்புகு வியன்புனத்
தெரிமருள் கதிர திருமணி இமைக்கும்
வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை "

—அகம் 213

" முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப "
—திருமுருகா: 84 - 85

" புலித்தொடர் விட்டபுனைமா ணல்லிற்
றிருமணி விளக்கங் காட்டித் திண் ஞாண் "
—முல்லைப்பாட்டு 62 - 63

" வாழையஞ் சிலம்பின் கேழல் கெண்டிய
நிலவரை நிவந்த பலவுறு திருமணி
ஒளிதிகழ் விளக்கத்து ஈன்ற மடப்பிடி "
—நற்றிணை 399

மேலே காட்டிய பாடல்களில் திருமணி என்று வருமிடங்களில் மாணிக்கம் என்று சில உரையாசிரியர்கள் பொருள் கூறியிருப்பது பொருத்தமாகவே உள்ளது.

## முடியில் மாணிக்கம்

மாணிக்கத்தை அரசர்கள் விரும்பி முடியிலும் அணிகளிலும் அணிந்து வந்தனரென்று தெரிகின்றது. ஒளிவிடும் மாணிக்கத்தை அணிகலனில் அணிந்த தலைவன் அரசன் போலத் தோற்றமளித்தான் என்று அகநானூறு (32) கூறுவது கவனிக்கத்தக்கது. முடியில் திருமணியான மாணிக்கம் மின்னியதாகத் திருமுருகாற்றுப்படை கூறியிருக்கின்றது

மாணிக்கம் நன்கு ஒளிவிடும் என்ற கருத்து இருந்ததால் மாணிக்கம் விளக்கு போலத் திகழ்ந்ததாக முல்லைப்பாட்டும் நற்றிணையும் கூறியுள்ளதைக் காணலாம். "அழல் அவிர் மணி" என்று ஐங்குறுநூறும் (213) கூறுவதிலிருந்து தீக்கதிர் போன்ற ஒளியுடையதாக மாணிக்கத்தைச் சங்ககாலத்திலும் கருதினர் என்று தெரிகின்றது. மாணிக்கக் கல்லே ஒளி விளக்கம் போல

இருந்ததாகச் சங்க நூல்களில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சேலம் பகுதியில்

கொல்லி மலையில் மாணிக்கம் கிடைத்ததாக அகநானூறு கூறியிருப்பது அரிய செய்தியாகும். மேல் நாட்டு ஆசிரியர்கள் தமிழ் நாட்டில் அரிதாகச் சேலம் பகுதியில் மாணிக்கம் கிடைப்பதாகக் கூறியிருப்பதோடு இச் செய்தி ஒத்துள்ளது.

## கோயில்களில் மாணிக்கம்

மாணிக்கத்தைப் பிற்காலத்திலும் அரசர்கள் விரும்பி அணிந்தனர். சிறந்த மாணிக்கத்தை அணியும் அரசன் பகைவரை வெல்வான், உலகையே அரசாள்வான் என்ற எண்ணம் பிற்காலத்தில் நிலவி வந்துள்ளது அரசருக்குகந்த மாணிக்கக் கற்களை இறைவனுக்கும் மிகவும் சிறந்ததாகக் கருதி இராசேந்திர சோழன் போன்ற பேரரசர்கள் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு உயர்ந்த மாணிக்கக் கற்களை அளித்த செய்தி கல்வெட்டுகளிலிருந்து விளங்குகின்றது.

## இறக்குமதியும் ஏற்றுமதியும்

மாணிக்கக்கல் ஈழநாட்டிலும் சயாம் நாட்டிலும் இருந்து அக்காலத்திலேயே தமிழ் நாட்டிற்கு வந்ததற்குச் சான்றுகள் உண்டு. அக்கற்கள் தமிழ் நாட்டுத் துறைமுகங்களிலே இருந்து தான் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதை மேல்நாட்டு ஆசிரியர் எழுதிய செய்திகளிலிருந்து நாம் உணரலாம். ஆதலின் மாணிக்கத்தைப் பற்றிச் சங்க காலத்திலேயே செய்திகள் இருந்ததில் வியப்பில்லை.

ஆனால், சங்ககாலத்தில் மாணிக்கம் என்ற பெயர் வழங்கவில்லை. பொதுவாக மாணிக்கத்தையும் மணி என்றே

குறிப்பிட்டனர். ஆனால், மிக முதன்மையாக உணர வேண்டிய ஒரு செய்தி உரோம ஆசிரியர்களின் குறிப்பிலிருந்து தெளிவாகின்றது. உரோமர் நீலமணியையும் மாணிக்கத்தையும் "Sapphire and Ruby" என்று கூறினர்.

## குருந்தம்

அக்காலத்தில் கொரண்டம் (Corundam) என்ற உறுதியான கல்லாகவே இதனைக் கூறினர் என்பது தெரிகின்றது. இந்த Corundam என்ற பெயர் தமிழ்ச் சொல்லான குருந்தம் என்ற பெயரிலிருந்து வந்தது என்பது எல்லோரும் ஒப்புக் கொண்ட கருத்தாகும். ஆதலின் மாணிக்கம் என்ற பெயர் சங்க காலத்தில் வழங்கவில்லையாயினும் குருந்தம் என்ற பெயர் சங்க காலத் திலேயே மாணிக்கத்திற்குத் தமிழில் வழங்கியிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

நவமணிகள் என்ற நூலின் ஆசிரியர் வைத்தியநாதன் அவர்கள், 'மாணிக்கக் கல்லை ஆதியில் "குருவிந்தி" என்று அழைத்தார்கள், அச் சொல்லே கொரண்டு என்று மாறி நவரத்தின பரீட்சகர்களால் கோரண்டம் என்று வழங்கப்படு கின்றது' என்று கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

குருந்தம் என்ற பெயர் சங்க நூல்களில் வழங்கியுள்ளது. ஆனால், அஃது ஒரு மரத்தின் பெயராகவே வழங்கியுள்ளது. ஒரு விலையுயர்ந்த கல்லின் பெயராக வழங்கிய இடம் சங்க நூல் களில் காணப்படவில்லை. ஆயினும் குருந்தம் என்ற பெயர் சங்க காலத்திலேயே ஒரு மரத்திற்கும் ஒரு விலையுயர்ந்த மணிக் கல்லிற்கும் வழங்கியிருக்க வேண்டும் என்று கருத வேண்டி யுள்ளது.

ஏனென்றால் சங்க காலத்திலேயே கிரேக்க, உரோம ஆசிரியர்கள் மணிகளின் தமிழ்ப் பெயர்களைத் தெரிந்திருந்தனர். பூக்களின் நிறத்தால் மணிக்கற்களை ஒப்புமைப்படுத்திக் கூறும்

பிற்கால மரபிலிருந்தும் குருந்தம் என்ற பெயர் ஒரு மரத்தையும் விலையுயர்ந்த ஒருவகைக் கல்லையும் குறித்திருக்கலாம் என்று கருத இடமுண்டு. இந்தக் குருந்தக் கல்லையே பிற்காலத்தில் மாணிக்கத்தின் ஒரு சாதியாகக் கொண்டு குருவிந்தம் என்று அழைத்தனரென்று தெரிகின்றது.

" திலகம் உலோத்திரம் செம்பருத் திப்பூக்
கவிர்மலர் குன்றி முயலுதி ரம்மே
சிந்துரம் குக்கிற் கண்ணென எட்டும்
எண்ணிய குருவிந்தம் மன்னிய நிறமே "

—ஊர்காண்: 186-7

என்ற மேற்கோள் பாடலை அடியார்க்கு நல்லார் காட்டியுள்ளார். இந்தப் பாடலில் கூறியுள்ள மலர்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் நிறமெல்லாம் சிவப்பாக இருப்பதைக் காணலாம்.

## மஞ்சள் நிறத்தில்

குருந்தம் என்ற மரத்தின் (Atlanta Monphylla) மலர் மஞ்சள் நிறமானது. மாணிக்கத்தின் நிறம் முதன்மையாகச் சிவப்பேயாகும். ஆதலின் இதைச் செம்மணி என்றும் பிற்காலத்தில் அழைத்தனர். ஆனால், குருந்தம் என்ற மரத்தின் பூவின் நிறம் மஞ்சளாகும். ஆதலின் சிவந்த மணியை எப்படிக் குருந்தம் என்று அழைக்கலாம் என்ற கேள்வி எழலாம். மணிகளின் உண்மைத் தன்மையை உணர்ந்தோர் அத்தகைய ஐயத்தை எழுப்பமாட்டார்.

மாணிக்கத்தில் நீல நிறமும் உண்டு, சிவப்பு நிறமும் உண்டு, மஞ்சள் நிறமும் உண்டு.

வடமொழி நூலில் காலாபுரத்தில் உண்டாகும் மஞ்சள் வண்ணமுள்ள மாணிக்கத்திற்குக் 'குருவிந்தம்' என்ற பெயர் உண்டு என்று கூறப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் அக்காலத்தில் கிடைத்த மாணிக்கக் கற்கள் மஞ்சளாக இருந்ததால் குருந்த மலரை அக்கற்களுக்கு ஒப்பிட்டுப் பெயரிட்டிருக்கலாம். ஆனால், பிற்காலத்தில் இந்த நிறக் கற்கள் மாணிக்கத்தில் ஒரு தாழ்ந்த வகையே என்று கருதினர். ஈழ நாட்டில் கிடைத்தவையே சிவந்த நிறத்திலும் பெரிய உருவிலும் விளங்கின என்பதை அறிய வேண்டும்.

## பலநிற மாணிக்கங்கள்

சிலப்பதிகாரத்தில் மாணிக்கத்தைப் 'பதுமம்', 'நீலம்', 'விந்தம்', 'படிகம்' என்று தகுதி பிரித்துக் கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

மாணிக்கத்தின் சிறப்பான நிறம் சிவப்பு. ஆனாலும் மாணிக்கக் கல் மஞ்சள், நீலம், இளஞ்சிவப்பு, கருஞ்சிவப்பு போன்ற பல மாற்று நிறங்களில் கிடைத்தன என்பதை உணர வேண்டும்.

பிற்கால நூல்களில் மாணிக்கத்தைப் பதுமராகம், சௌகந்திகம், குருவிந்தம், கோவாங்கம் என்று வகைப்படுத்தினர். ஆனால் சங்க காலத்தில் குருந்தம் என்ற பெயரே மாணிக்கத்திற்கு வழங்கியிருக்க வேண்டும் என்பதைப் பிற செய்திகளிலிருந்து உய்த்து உணரலாம். இந்தப் பெயரே பிற்காலத்தில் குருவிந்தம் என்று மாற்றி அழைக்கப்பட்டது; வடமொழிக்கும் சென்றது. சங்க காலத்திலேயே கிரேக்க மொழியிலும் சென்றது. மாணிக்கம் ஈழ நாட்டில் நிறைய கிடைத்ததால் இந்தக் கற்களைச் சங்க காலத்திலேயே தமிழர் நன்கு அறிந்திருப்பர் என்பதில் ஐயமில்லை.

## குற்றமுடையவை

மாணிக்கத்தின் பதினாறு குற்றங்களைக் கல்லாடம் விரிவாக விளக்கியுள்ளது. ஒரு வடமொழி நூலில் மாணிக்கத்தின்

குற்றங்கள் எட்டு கூறப்பட்டுள்ளன. அவற்றில் லசுநாபதம் என்பதொன்றெனக் காணப்படுகின்றது. கல்லில் பால் படிந்தது போலக் காணப்படும் குற்றமே இப்பெயரால் அழைக்கப்பட்டது.

சோழர் காலக் கல்வெட்டிலும் லசுனி (லஸூநி) என்பது மாணிக்கத்தின் குற்றத்துள் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. லசுநாபதமும் லசுனியும் ஒன்றேயென்று தோன்றுகின்றது

அரேபியர்கள் "லா சுனியா" (Lah Suniya) என்ற பெயரில் ஒருவகை மணியையே குறிப்பிட்டுள்ளனர். இதை 'வாட்' என்ற அறிஞர் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"A stone collected at various localities on the Malabar Coast is generally accepted as a form of Cat's eye. They are sent for Cambay to Bombay thence to Persia and Arabia and are best known under the name Chush. Maidar or Lah Suniya, the name given to peculiar green coloured Cat's eye."

இராசேந்திர சோழன் கல்வெட்டில் லசுனி என்பது மாணிக்கத்தின் குற்றமாகக் கூறப்பட்டிருப்பினும் கல்வெட்டின் கருத்தைப் பார்க்கும் போது குற்றங்களும் குணங்களும் சேர்ந்த விலையுயர்ந்த கற்களைப் பயன்படுத்தினர் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

## மாறுபட்ட மதிப்பீடு

ஆதலின் 'லா சுனியா' என்ற குற்றத்தையுடைய மாணிக்கக் கல்லை அரேபியர் குணமாகக் கொண்டு போற்றினர் என்று கருத வேண்டும். இதன் காரணமாகவே நவமணிகளைப்பற்றி எழுதின நவரத்தினக்கல் வல்லுநரான ஆசிரியர் வைத்தியநாதன் 'லசுனி' என்பது குணத்துள் ஒன்றாகச் சொல்லப் பெறுகின்றது என்று கூறி, அதற்குத் தென்னிந்திய சாசனங்களைச் சான்றாகக் கூறியுள்ளார். ஆனால் தென்னிந்திய சாசனமோ 'லசுனி'

என்பதைக் குற்றமாகக் கொண்டதன்றிக் குணமாகக் கொள்ள வில்லை. வைத்தியநாதன் அவர்கள் குணமாகக் கொண்ட தற்குக் காரணம் அரேபிய ஆசிரியர்கள் கூறிய செய்தியைப் பின் பற்றியதாகலாம்.

கல்வெட்டுகளில், இறைவனுக்கோ இறைவிக்கோ வேறு கடவுளர்க்கோ அளிக்கப்பட்ட கற்களில் தெளிவாக விலையுயர்ந்த கற்களின் எடையும் குற்றமும் கூறப்பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். குற்றம் உள்ளிட்ட கற்களையே கூறியிருக்கிறார்கள். குற்றமே இல்லாத மணிக்கற்கள் இயற்கையில் கிடைப்பதரிது.

## பெயர் ஒற்றுமை

ஆனால் அரேபியர்கள் லசுனி என்றொரு மணிக்கல்லைக் கூறியிருப்பது போலவே, பிளினி முதலிய உரோம ஆசிரியர்களும் கி. பி.. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே 'லைக்னிஸ்' (Lychnis) என்றொரு கல்லைக் குறிப்பிட்டுள்ளதை எந்த அறிஞரும் கவனிக்கவில்லை. ஆகவே இராசேந்திர சோழன் கல்வெட்டில் கூறப்பட்ட லசுனி என்ற பெயரே அரேபியர்களால் கி. பி. 8ஆம் நூற்றாண்டிற்குப் பின் லசுனியா (Las Suniya) என்றும், பிளினி என்பவரால் கி. பி. 2ஆம் நூற்றாண்டிற்கு முன் 'லைக்னிஸ்' என்றும் குறிப்பிடப் பட்டுள்ளதைக் காணும் போது வியப்படையாமல் இருக்க முடியாது.

ஆதலின் 'லசுனி' என்ற சொல் சங்க காலத்திலேயே தமிழ் நாட்டில் வேறோர் உருவத்தில் வழங்கியிருக்க வேண்டும். இந்தச் சொல்லைப் பிளினி கி. பி. 2ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் 'லைக்னிஸ்' என்று இலத்தீன் மொழியில் எழுதியுள்ளார். ஆனால் 'லைக்னிஸ்' என்ற பெயர் எந்தக் கல்லைக் குறித்தது என்பதில் குழப்பம் உள்ளது. சிலர் மாணிக்கம் என்றும், சிலர் garnet என்ற ஒருவகைக் கல் என்றும் கூறுவர். ஆனால் பொதுவாக இதை ஒருவகை மாணிக்கம் என்றே கொண்டுள்ளனர். இதைப்பற்றிப் பெரிப்புளூஸ் நூலிற்கு

விளக்கம் எழுதிய சாஃபு (Shoff) என்ற ஆசிரியர் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது:

"Generally we cannot tell when the words "Lychnis" and "Anthrax" (Latin carbun culus) mean garnet and when they mean Ruby, but the fine red Ruby which was used by the Romans unengraved as collections shown in rings and jewellery and one of the "anthraces" of the Theophrastos, the "Luchnitis" of Solinas and the best "Lychnis" of Pliny found in Indian regions and attributed by one writer to the Hydaspes are probably the ruby, which now comes above all from Upper Burma, Siam, the gem-gravels of Ceylon, much more rarely from Mysore and Salem, the Cauvery and other rivers... —'The Periplus of the Erythraen Sea' —wilfred H. Shoff."

இந்த ஆசிரியர் கூறிய விளக்கத்திலிருந்து 'லைக்னிஸ்'' லசுனி) என்ற பெயருடைய மாணிக்கம் இந்தியாவில் கிடைத்த தென்பதும் அதுவும் அரிதாக மைசூர், சேலம், காவிரிப் பள்ளத் தாக்கில் கிடைத்ததென்பதும் கவனிக்கத் தக்கதாகும். ஆதலின் லசுனி என்ற சொல் சங்ககாலத்தில் வேற்று உருவத்தில் ஒருவகை மாணிக்கத்தைக் குறித்து வந்ததென்று கருதலாம். இந்தச் சொல்லே கிரேக்கர்களாலும் உரோமர் களாலும் லைக்னிஸ், லைக்னிடிஸ் என்று சங்க காலத்தில் வழங்கப்பட்டது. பிற்காலத்தில் வடமொழியில் லசுநபாதம் என்று இதுவே மாணிக்கத்தின் குற்றமாகக் கூறப்பட்டது.

இராசேந்திர சோழன் கல்வெட்டிலும் லசுனி என்பது மாணிக்கத்தின் குற்றங்களில் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது.

கல்லாடத்தில் கூறப்பட்டுள்ள மாணிக்கத்தின் குற்றங்களில் லசுனி என்ற பெயர் காணப்படவில்லை. ஆனால், 'இலைச்சுமி' என்ற பெயர் (லசுனியின் இடத்தில்) கூறப்பட்டுள்ளது தெரிகின்றது.

" கருகிநொய் தாதல்காற்று வெகுளி
திருகல் முரணே செம்மண் இறுகல்
மத்தகக் குழிவு தராசம் இலைச்சுமி
எச்சம் பொரிவு புகைதல்புடாயம்
சந்தைநெய்ப் பிலினத் தகுபதி னாறும்
முந்திய நூலின் மொழிந்தன குற்றமும் "

—கல்லாடம் 98: 21-26

கல்லாடத்தில் கூறிய 'இலைச்சுமி' என்ற குற்றமே 'லசுனி' என்று இராசேந்திர சோழன் கல்வெட்டில் கூறப்பட்டிருக்க வேண்டும். கல்லாடம் இந்தக் கல்வெட்டுக்கு முந்திய நூலாதலால் 'இலைச்சுமி' என்ற பெயரே 'லசுனி' என்று மாறியதாகக் கருதலாம். சங்க காலப் பெயரும் இப் பெயரை ஒட்டியதாக இருந்திருக்கலாம்.

கிரேக்க, உரோம ஆசிரியர்கள் கூறிய செய்திகளிலிருந்து சங்க காலத்திலேயே ஒருவகை மாணிக்கத்தைக் குருந்தம் என்று தமிழில் அழைத்தனரென்பது தெரிகின்றது. மற்றொரு வகை மாணிக்கத்தை லக்னிஸ், லசுனி என்ற பெயர்களை ஒட்டிய ஒரு பெயரால் அழைத்திருக்கலாம்.

மாணிக்கத்தைப் பிற்காலத்தில் செம்மணி என்று கூறுவது வழக்கமாகும். சிவப்பு என்றாலே மாணிக்கத்தைக் குறிக்கும். பச்சை என்பது மரகதத்தைக் குறித்ததை இது சார்பாகக் கவனிக்க வேண்டும்.

# வைரம்

## உயர்ந்த மணி

சங்க நூல்களில் கூறப்படும் மணிகளுள் மிகச் சிறந்த மணி வைரமாகும். வைரத்தையே இன்றும் மணிகளுள் விலையுயர்ந்ததாகவும் சிறந்ததாகவும் கூறுவர். பதிற்றுப்பத்தில் வைரத்தைப் பற்றித் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

“ திருமணி பொருத திகழ்விடு பசும்பொன்
வயங்குகதிர் வைரமோ டுறழ்ந்துபூண் சுடர்வர
எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து ”

—பதிற்றுப்பத்து : 16–15

வயிரமணி வயங்குகதிர் உடையதாகக் கூறியிருப்பதைக் காணலாம். பதிற்றுப்பத்து 4 ஆம் பாட்டில் “வயங்குமணி இமைப்பின் வேலிடுப்” என்று கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். வயங்குமணி என்றது வைரத்தையே என்று கருதலாம்.

## இமைக்கும் ஒளி

வயங்கு என்பதற்கு இமைக்கும் ஒளியுடையது என்று பொருள் கொள்ளவேண்டும். ‘மணியிமைப்பு போலும் மின்னுக்கு மணியிமைப்பென்பது பெயராயிற்று’ என்று பழைய உரை கூறியிருப்பதைக் காணலாம்.

வைரமணி வானவில்லின் நிறங்களைப் போல மாறிக் காட்டும் ஒளியுடையது என்று சிலப்பதிகார உரையில் கூறப் பட்டுள்ளது. வைரத்தின் குணங்களைக் கூறும் பாட்டை அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டியுள்ளார்.

" பலகை எட்டுங் கோணம் ஆறும்
இலகிய தாரையும் சுத்தியும் தராசமும்
ஐந்துங் குணமென் றறைந்தனர் புலவர்
இந்திர சாபத்து இகலொளி பெறினே "

—சிலம்பு - ஊர்காண் - வரி 180-183
உரை மேற்கோள்.

## பல நிறங்கள் காட்டும்

இகல் ஒளி என்றது மாறுபட்ட நிறங்களைக் காட்டும் தன்மையாகும். வைரமணியின் மேல் ஒளி படும்போது பல நிறங்களைக் காட்டும் என்று மணிநூல் வல்லுநர் கூறுகின்றனர். வயங்கிய என்ற சொல் இக் கருத்தையே குறிப்பிடுகின்றது.

கிரேக்க, உரோம ஆசிரியர்கள் எழுதின நூல்களிலிருந்து சங்க காலத்தில் தமிழகத்தின் மேற்குக் கடற்கரைத் துறை முகங்களின் வழியாகப் பல மணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். அந்த மணிகளிலும் வைரத்தைத் தவிரப் பிற மணிகள் எல்லாம் பெரும்பாலும் இந்தியாவில் பிறந்தவை அல்ல என்று அவர்களே குறிப்பிடு வதைக் கவனிக்க வேண்டும்.

வைரத்தை முதலில் வெளி நாட்டினர் உணர்ந்தது இந்தி யாவின் வழியாகவே என்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆதலின் சங்க காலத்தில் கி. பி. முதல் இரண்டாம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டுத் துறைமுகங்களிலிருந்து மேற்கத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மணிகளுள் வைரம் மிகச் சிறந்த மணியாகும் என்பதை உணர வேண்டும்.

இந்த வைரம் இந்தியாவில் சுரங்கங்களிலும் ஆற்றிலும் பள்ளத்தாக்குகளிலும் கிடைத்தது.

பெரிப்புளூஸ் என்ற நூலின் ஆசிரியர் வைரத்தைத் தவிர இந்தியாவில் வேறு மணிகள் நிறையக் கிடைக்கவில்லை என்றும் மற்ற மணிகள் எல்லாம் ஈழ நாட்டிலிருந்து இந்தியா விற்குக் கொண்டு வரப்பட்டு ஏற்றுமதியாயின என்றும் கூறி யிருப்பதால் சிறப்பாகத் தமிழரே சங்க காலத்தில் எல்லாவகை மணிகளையும் அறிந்திருந்தனர் என்று கருத வேண்டும்.

## பல்வகை மணிகள்

மணிமேகலை 'மணி பல்லவம்' என்று குறிப்பிட்டுள்ள ஈழ நாட்டுப் பகுதியில்தான் உலகத்திலேயே பல வகையான மணிகள் இன்றும் கிடைக்கின்றன.

கொழும்பிலிருந்து ?9 கி.மீ தொலைவில் உள்ள இரத்தின புரம் என்ற ஊரைச் சுற்றிதான் இன்று நிறையப் பல்வகை மணிகற்கள் (Ruby, Sapphire, Cat's eye, tourmaline, alexandrite, ameythist, aquamarine, topaz, Spinel, garnet, Citrine, agate, zircon and moon - stone) கிடைக்கின்றன. இன்றும் 14 வகை மணிக்கற்கள் கிடைக்கின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். ஆதலின் மணிபல்லவம் என்று மணிமேகலை கூறியிருப்பது மிகவும் பொருத்தமே.

மணிகள் மிகுந்த இந்த இடம் பல்லவருடைய மேலாட் சிக்குக்கீழ் வந்ததால் 'மணிபல்லவம்' என்று பெயர் வழங்கி யிருக்கலாம்.

ஆனால், இவ்வளவு மணிக்கற்கள் கிடைத்த இரத்தின புரத்தில் இன்று விளையும் கற்கள் மாணிக்கமும் நீலமும் தவிர வைரம் இல்லை.

ஆதலின் சங்க காலத்திலேயே ஏற்றுமதி செய்யப்பட்ட வைரக்கற்கள் தமிழ் நாட்டிலும் இந்தியாவிலும் கிடைத்தவையே

என்பதில் ஐயமில்லை. இவை சங்க காலத்தில் உரோம, கிரேக்க நாடுகளுக்குத் தமிழ் நாட்டுத் துறைமுகங்களின் வழியாக ஏற்றுமதி செய்யப்பட்டன.

பதிற்றுப்பத்து இரண்டாம்பத்தில் யவனர்களிடம் இருந்து அருவிலை நன்கலங்களை வைரமணிகளோடு இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கைப்பற்றினான் என்று கூறியிருப்ப திலிருந்து சங்க காலத்திலேயே உரோமரும் கிரேக்கரும் தமிழ் நாட்டிலிருந்து வந்த வைரங்களை மிகவும் போற்றினர் என்பது தெரிகின்றது.

"அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறன் மூதூர்த் தந்து பிறர்க் குதவி"

—பதிற்றுப்பத்து 2ஆம் பதிகம் 10-11

அயோனியர் (Ionians) என்ற யவனர் போற்றிய வயிரத் தைப் பதிற்றுப்பத்து கூறியுள்ளது. இந்த வைரம் தமிழ் நாட்டிலிருந்து சென்றதாகும். வயிரம் என்ற பெயர் பதிற்றுப் பத்தைத் தவிர அகநானூற்றிலும் அரிதாக வழங்கியுள்ளது.

"வயிரத் தன்ன வையேந்து மருப்பின்" —அகம் 178

"நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்றுவாய் நிறையக் குவைஇ"

—அகம் 127

"வயிரக் குறட்டின் வயங்குமணி யாரத்து"

—புறம் 365

அகநானூறு 127ஆம் பாடலில் சேரலாதன் தன்னுடைய பகைவரிடமிருந்து வைரத்தைத் திறையாக நிறையப் பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது.

**உறுதிமிக்க வைரம்**

வைரத்தை மணிகளில் மிக உறுதியானதாகக் கருதுவர். வைரத்தின் உறுதியுடைய காட்டுப் பன்றியின் எயிற்றைப்பற்றி அகநானூறு கூறியுள்ளது.

வைரத்தையே பிற மணிகளில் துளை போடவும் அறுக்கவும் பட்டையிடவும் பயன்படுத்தினர்.

வைரத்தின் முதன்மை, துளையிடும் தன்மையால் பெற்றது என்று திருவிளையாடல் புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

" வைர ஊசியும் மயன்விளை இரும்பும்
செயிரறு பொன்னைச் செம்மைசெய் ஆணியும்
தமக்கமை கருவியும் தாமாம். "

இந்த மேற்கோளில் வைரத்தை வைரம் அறுக்கும், இரும்பை இரும்பு வெட்டும், பொன்னைப் பொன்னால் செய்த ஆணி வெட்டும் என்று அவற்றுக்கு அமைந்த கருவிகள் அவைதாம் என்று கூறியுள்ளார்.

" கண்ணாடி யறுக்கும் கூரிய வைரம் "

என்று நன்னூல் உரையில் கூறியிருப்பதையும் காணலாம். இன்றும் கண்ணாடியை அறுக்க வைரம் பயன்படுகிறது.

வைரத்தின் திண்மையும் வலிமையும் நன்கு தெரிந்ததே. சங்கநூல்களில் வைரத்தைத் 'திண்மணி' என்று குறிப்பிட்டுள்ளனர்.

" நீர்திகழ் சிலம்பி னன்பொன் னகழ்வேன்
கண்டுபொரு திமைக்குந் திண்மணி கிளர்ப்ப "
—அகம் 282

திண்ணிய மணி வைரமாகவே இருக்கலாம். "கண்பொருது இமைக்கும்" என்று கூறப்பட்டிருப்பதால் வைரம் என்று கொள்ளவேண்டும்.

## தோன்றுமிடம்

வைரக்கற்கள் இந்தியாவில் பெரும்பாலும் பாறைகளி லிருந்தும் மணற்பாங்கான பகுதிகளிலிருந்தும், ஆற்றுப்படுகை களிலிருந்தும் கிடைத்தன.

"அட்டுநீ ரருவிக் குன்றத் தல்லது வைரந்தோன்றா"
சிந்தாமணி 2925

சிந்தாணியில் நீர் சொரியும் குன்றிலே வயிரந்தோன்றும் என்று கூறியுள்ளதைக் காணலாம். நீர்திகழ் சிலம்பில் பொன்னை அகழ்ந்தவனுக்கு வைரமணி கிடைத்ததாக அகநானூறு கூறுவதால் சங்ககாலத்தில் ஆற்றுப்படுகைகளில் வைரம் கிடைத்தது தெரிகிறது.

சங்ககாலத்திலே முசிறி, தொண்டித் துறைமுகங்கள் வழியாக வைரம் ஏற்றுமதியானதாகப் பிளினி கூறியிருக்கின்றார். கோலாரிலே பொன்னும் கிடைப்பதால் பொன்னோடு வைரம் கிடைத்ததாகச் சங்கநூல்களில் கூறும் செய்தி பொருத்தமே.

வைரம் ஆந்திராவிலே பெருவாரியாகக் கோல்கொண்டா முதலிய இடங்களிலும் கோதாவரி, கிருஷ்ணா பள்ளத்தாக்கு களிலும் கிடைத்தன என்று கூறுவர்.

சிந்தாமணியில் 'வடவரை வைரச் சாதி' என்று கூறப் பட்டுள்ளது.

சங்கநூல்களில் மலையிடைப் பிறந்த மணியாகக் கூறும் மணி வைரமாகவே இருக்கலாம்.

" பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும் "
—புறம் 218

" மலையிடைப் பிறவா மணியே யென்கோ "
—சிலம்பு 277

மணிகளில் உயர்ந்ததாக வைரத்தைக் கூறுவதால் மாமலை பயந்த காமரு மணி வைரமாகவே இருக்கவேண்டும்.

" ஞாயிற் றன்ன வாய்மணி மிடைந்த
மதியுற ழார மார்பிற் புரள "
—புறம் 362

" திறல்விடு திருமணி யிலங்கு மார்பின் "
—பதிற்றுப்பத்து 463

" அருவரை மருங்கினாய்மணி வரன்றி
ஒல்லென விழிதரு மருவிநின் "
—ஐங்குறு நூறு 233

" கட்சி காணக் கடமா நல்லேறு
கடறு மணிகிளரச் சிதற பொன் மிளிரக் "
—புறம் 202

" பெருமலை நுடக்கம் போலத் தோன்றிய
பெருமலை வயின் வயின் விலங்கு மருமணி
அரவழங்குப் பெருந் தெய்வத்து
வளை ஞரலும் மணிப் பௌவத்து "

ஆய்மணி என்று கூறப்பட்ட தெரிந்தெடுத்த மணி வைரமாகவே இருக்கலாம். ஞாயிற்றன்ன ஒளி என்பதால் வெண்மையான ஒளிவீசும் வைரத்தைக் குறிப்பிட்டதாகக் கருதலாம். மலையிலிருந்து இறங்கும் அருவி கொண்டுவரும் மணி என்றும், மலைச்சாரலில் கிளர்ந்து சிதறும் மணி என்றும் சொல்லப்படுவதால் வைரமென்று கொள்ளலாம்.

திறல்விடு திருமணி என்பதற்குக் கூறிய உரையில் பிற ஒளியில் திறலுடைமையால் ஆகுபெயரால் இவ்வொளிக்குத் திறலென்று பெயராயிற்று என்று கூறியிருப்பதைக் காணலாம். ஆதலின் பிற ஒளிபடும்போது எதிர் ஒளிவிடும் மணி வைரமாகவே இருக்க வேண்டும்.

சிலப்பதிகாரத்தில் "இந்திரசாபத்து இகல் ஒளி" என்று மேற்கோள் காட்டப்படுவதிலிருந்து வானவில்லின் நிறங்களைக் காட்டும் வைரம் என்பது தெரிகின்றது. வயின்வயின் விளங்கும் அருமணி என்று கூறப்பட்டுள்ள மணியும் வைரமாகவே இருக்க வேண்டும்.

வைரங்களில் இன்றும் சிறந்ததாகக் கருதப்படும் பழங் காலத்து வைரங்கள் கோகினூர், பிட், கல்லினன் என்ற வைரங்களாகும்.

பிற்கால நூலான சிந்தாமணியில் வைரப்பூண், வைரவாள், வைரக்கிம்புரி, வைரத்தோட்டி ஆகியவை கூறப்பட்டுள்ளன.

# சாணைக்கல்

திருவிளையாடல் புராணத்தில் மாணிக்கம், முத்து, வைரம், மரகதம், நீலம் ஆகியவையே விலையுயர்ந்த மணிகள் என்று கூறப்பட்டுள்ளன. சங்க நூல்களில் சிறிய விலையுள்ள கற்களும் கூறப்பட்டுள்ளன.

## சாணைக்கல் செய்பவன்

அகநானூற்றில் சிறுகாரோடன் என்ற தொழிலாளி பயினொடு சேர்த்திய கல் கூறப்பட்டுள்ளது.

" அறுகோட் டியானைப் பொதினி யாங்கட்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போற் பிரியல மென்ற சொற்றும் "

—அகம் 1

" தொன்னசை காவாமை நன்னன் பறம்பிற்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போல் நாவினேன் ஆகிமற்றது "

—அகம் 356

சிறுகாரோடன் என்பவன் சாணைக்கல் செய்பவன் என்று உரையிலிருந்து தெரிகின்றது.

**சாணைக்கல்**

இயற்கையில் கிடைக்கும் சாணைக்கல்லை உருவாக்கும் தொழில், சங்ககாலத்தில் பழனியிலும், வடமலையாளத்தில் நன்னன் பறம்பிலும் இருந்ததாக அகநானூறு கூறியுள்ளது.

இந்தச் சாணைக்கல் ஒருவகைத் தாழ்ந்த குருந்தக்கல் என்றே அறிஞர் கருதுகின்றனர். இதையே Corundam என்று ஆங்கிலத்தில் இன்று அழைப்பதாகக் கருதுவர்.

வடமலையாளத்தில் நன்னன் பறம்பில் சாணைக்கல் கிடைத்ததாக அகநானூறு கூறியதற்கேற்பத் 'தென்கன்னட கெசட்டீர்' என்ற நூலும் வடமளையாளத்திலும் சாணைக்கல் கிடைப்பதைப் பற்றிக் கூறியிருப்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஆதலின், சங்க நூற்செய்திகள் கண்டு கேட்டுத் தெரிந்து கூறின உண்மைச் செய்திகளே என்பதில் ஐயமில்லை.

காரோடன் பயன்படுத்திய சாணைக்கல் ஒருவகை சிறு விலை மணிக்கல்லேயாகும். இந்தக்கல் மாணிக்கக் கல்லின் சாதியில் தாழ்ந்த வகையாகும். மிக அண்மைக் காலத்தில் இயற்கையில் கிடைத்த இக்கல்லிற்கு ஈடாகச் செயற்கையில் கல்லைச் செய்யும் வழிமுறையைக் கண்டுபிடித்தனர். அதனால் இந்தச் செயற்கைக் கல்லும் குருந்தம் என்ற தமிழ்ச் சொல்லடிப் படையில் ஆங்கிலத்தில் Corundam என்று வழங்குவதைக் கவனிக்க வேண்டும். சங்க காலத்தில் இந்த சாணைக்கல் தொழில் மிகச் சிறப்புற்றிருந்தமையால் இந்தக் கற்கள் வெளிநாட்டிற்கும் ஏற்றுமதியாகியிருக்க வேண்டும். இதன் காரணமாகவே குருந்தம் என்ற தமிழ்ப்பெயர் (Corundam) மேல் நாட்டு மொழிகளில் சென்றது. சாணைக்கல் செய்வோரின் சங்க காலப் பெயரான 'காரோடன்' பல்லவர்கள் காலத்தில் சாணைக் கல்லுக்கே வணிகப் பெயராக மாறியதைக் காணலாம்.

## செம்புக்கல்

பல்லவப் பரம்பரையில் வந்த கோபால தேவனின் அஸ்தியூர் கன்னடச் செப்பேட்டில் "கொளகுப்பை, ஜெவாஸி லாரல், கர்ஸபிண்டம், கெம்பை, காரோடம்" என்ற வணிக பொருட்பெயர்கள் காணப்படுகின்றன.

(இப் பெயர்களில் "கெம்பைக் காரோடம்" என்பது அக நானூற்றில் கூறப்பட்ட காரோடன்மார் ஆக்கிய சாணைக் கல்லைக் குறிப்பிட்டிருப்பதைப் பல்லவர் செப்பேடுகள் முப்பதை வெளியிட்ட தமிழ் வரலாற்றுக் கழகம் கண்டுபிடிக்கவில்லை.)

செம்பு என்பது கெம்பு என்று கன்னடத்தில் வழங்கும். இன்றும் தமிழில் கெம்புக்கல் என்று பேச்சுவழக்கில் கூறு வதைக் காணலாம். ஆனால் கெம்பு என்ற சொல் பல்லவர் காலத்தில் செம்பு என்ற பொருளில் வழங்கியது. ஆதலின் 'கெம்பைக்காரோடம்' என்பது கெம்புக் கல்லால் ஆன காரோடத்தையே குறிப்பிடும். இந்தக் கெம்புக்கல் ஒருவகைத் தாழ்ந்த குருந்தக் கல்லாகும். இக் காலத்தில் கெம்பு என்பது தமிழிலும் கன்னடத்திலும், மலையாளத்திலும் பதுமராகத் தையே குறிப்பிடும். இஃது ஒருவகை மாணிக்கக் கல்லாகும். ஆனால் கெம்பு என்பது சிவப்பு நிறத்தைக் குறிக்கும் என்பது கெம்புநீலம் என்ற நீலக் கல்லின் பெயரிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

ஆதலின் பல்லவர் செப்பேட்டில் குறிப்பிட்ட கெம்பைக் காரோடம் சிவப்பு நிறமான சாணைக்கல்லே என்பதில் ஐயமில்லை

இந்தக் கல் ஒருவகை விலை குறைந்த கல்லாகும். சாணைக்கல்லுக்கு உதவிய ஒருவகை விலை குறைந்த குருந்தக் கல்லே சங்ககாலத்தில் தென் கண்டத்திலும் பழனி மலையிலும் சாணைக்கல்லாக மாற்றப்பட்டுச் சங்ககாலத்தில் வெளிநாட்டுக்கு

ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் காரணமாகவே corundum என்ற பெயர் குருந்தம் என்ற தமிழ்ப் பெயரிலிருந்து வந்தது, அக்காலத்திய மேலை நாட்டு மொழிகளில் புகுந்து பரவியது என்று தெளியலாம்.

பல்லவர் காலத்தில் இப்பெயரே வணிகப் பெயராகக் கன்னட மொழிச் செப்பேட்டிலும் வழங்கியது.

## குப்பை என்பது என்ன?

கன்னடச் செப்பேட்டில் கூறப்படும் மற்றொரு பெயரான 'கொள குப்பை' என்பதைக் "கொள் குப்பை" என்று கருத இடமுண்டு. தமிழிலக்கணங்களில் நெல் குப்பை என்ற வழக்கு காணப்படுகின்றது. குப்பை என்ற சொல் இன்று தாழ்ந்த பொருளில் வழங்கினும் முற்காலத்தில் நெல்குவியல், முத்துக் குவியல் என்றெல்லாம் வழங்கியிருப்பதைக் காணலாம். ஆதலின், 'கொள குப்பை' என்ற கன்னட வழக்கம் 'கொள் குப்பை' என்ற தமிழ்ப் பெயராகும் என்னலாம்.

கொள் என்ற தானியத்தின் குப்பை என்று பொருள் கொள்ள வேண்டும்.

## ஏற்றுமதியால் பெற்றவை

நன்னன் சங்ககாலத்திலேயே இந்தச் சாணைக்கற்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்தான் என்று கருதவேண்டும். நன்னன் காலின் வழியாக, அஃதாவது காற்றைத் தொழில் கொண்டு வந்த கலத்தின் வழியாக, கப்பலின் வழியாக வெண் காற் குதிரைகளைப் பெற்றான் என்று சொல்லியிருப்பதால் நன்னன் சங்ககாலத்திலேயே சாணைக்கற்களையும் மிளகையும் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து குதிரைகளை இறக்குமதி செய்தான் என்று கருதலாம்.

இருப்பினும் மிளகுக்காக உரோமரின் பொன் நாணயங்கள் கொடுக்கப்பட்டதால், நன்னன் ஆண்ட ஏழில் நாட்டில் கி.பி. முதல் இரண்டாம் நூற்றாண்டிற்குரிய உரோமரின் பொன் நாணயங்கள் மிகுந்து கிடைத்துள்ளன.

ஆதலின், தமிழ் வேளிர் குடியினனான நன்னன் பறம்பில் செய்யப்பட்ட சாணைக்கற்கள் உரோம நாட்டிற்கும் சென்று பெயர் பெற்றன என்பதில் ஐயமில்லை. சங்ககாலத்திய நன்னன் பறம்பு, பல்லவர் காலத்தில் தென் கன்னட நாடானபோது சங்க காலத்துக் 'காரோடம், என்ற பெயர் கெம்பைக் காரோடம் என்று கன்னடச் செப்பேட்டில் வழங்கப்பட்டது என்று கொள்ளலாம்.

## இன்றைய நிலையில்

நன்னன் பறம்பை நேரில் கண்டபோது நான் இந்தச் சாணைக்கற்கள் இன்றும் கிடைப்பதை அறிந்தேன். ஆதலின் சங்ககாலத்தில் கூறப்பட்ட செய்தி இன்றும் உண்மையானதே என்று உறுதியாகக் கூறமுடியும்.

உரோமர்கள் குருந்தக்கல்லை Indian sand என்றே அழைத்தனர். குருந்தக்கல்லைப் பொடியாகவும் வரவழைத்தனர். இந்தக் கற்கள் சேர நாட்டிலிருந்து வந்ததாக உரோமர் குறிப்புகளிலிருந்து தெரிகிறது. குருந்தக் கல்லை சாணைபிடிக்கப் பயன்பட்ட கல்லிருந்து வேற்றுமைப்படுத்தப்பட்ட சிறிய விலையுயர்ந்த மணிக்கல்லாகவும் கருதினர்.

## ஆய்வுகளில் குறை

சங்ககாலத்தில் கூறப்பட்ட வெளிநாட்டு வாணிகச் செய்திகளைக் கிரேக்க உரோம அறிஞர்களின் செய்திகளோடு சங்க நூலறிவு போதிய அளவு இல்லாததால் சில பிழைகளும் குறைகளும் அறிஞர்கள் சிலர் செய்த ஆங்கில மொழி ஆராய்ச்சிகளில் காணப்படுகின்றன. வரலாற்றுப் பேரறிஞர் நீலகண்ட சாத்திரியார் எழுதிய நூல்களிலும் இக்குறை காணப்

படுகின்றது இவருக்குச் சங்க நூல்களின் அறிவு போதிய அளவு இன்மையால் இக்குறை ஏற்பட்டுள்ளதை நடுநிலைமையில் சீர்தூக்கிப் பார்ப்போர் கண்டு கொள்ளலாம்.

சங்க நூல்களை ஆராய்வது எளிதானதன்று. மிகமிக நுட்பமான செய்திகளைச் சுருக்கமாகச் சொல்வதால் இவற்றைத் தெரிந்தும் தெளிந்தும் ஆராய்வது மிகவும் இன்றியமையாதது. சங்க நூல்களின் செய்திகளைத் தெளிவாக ஆராயாததால் பல்லவர் காலத்துக் கல்வெட்டில் 'கெம்பைக்காரோடம்' என்ற பெயரை வரலாற்று அறிஞர்களும் உணரவில்லை என்பதை இங்குக் குறிப்பிட வேண்டியுள்ளது.

# கட்டளைக்கல்

சங்க நூல்களில் குறிப்பிட்டுள்ள விலை குறைத்த மணிக்கற்களில் மற்றொன்று கட்டளைக் கல்லாகும்.

கட்டளைக்கல் என்பது ஒருவகை மணிக்கல்லாகும் என்பதைப் பலரும் அறியார். இந்தக்கல்லை ஆங்கிலத்தில் 'Touch Stone'' அல்லது 'Jaspar' என்றும் கூறுவர்.

## கருநிறக் கற்கள்

இந்தக் கற்கள் பெருமளவு இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகி வந்ததாக பிளினி என்ற உரோம ஆசிரியர் கூறியுள்ளார்.

இந்தக் கற்களில் சில நிறங்களைக் கூறியிருப்பினும் சங்க நூல்கள் தெளிவாகக் இந்தக் கற்கள் கரிய நிறமுடையன என்றே கூறியிருப்பதைக் காணலாம் பிளினி என்பவர் Black Jaspar or touch stone பெருமளவில் இந்தியாவிலிருந்து வந்ததாகக் கூறியுள்ளார். சங்க நூல்களில் கட்டளைக்கல் கறுப்பு நிறமுடையது என்று கூறுவதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். நீலகண்ட சாத்திரியார் எழுதிய 'வெளிநாட்டுப் பயணிகளின் செய்திகள் ('Foreign Notices of India') என்ற நூலில் இத்தகைய செய்திகளைக் கூர்ந்து, ஒப்பிட்டு ஆராய்ந்து நேர் படுத்திக் கூறவில்லை.

கட்டளைக்கல் (touch stone) லைப்பற்றிச் சங்க நூல்களில் பல செய்திகள் உள்ளன.

## தரம் உரைக்கும் கல்

பொன்னின் மாற்றத்தை உணர்வதற்கு இந்தக் கல் சங்க காலத்திலேயே பயன்படுத்தப் பெற்றது; கிரேக்க, உரோமர் களாலும் பயன்படுத்தப் பெற்றது. சங்ககாலத்தில் இந்தக் கல்லைப் பண்டைத்தமிழர் மிக நன்றாகத் தெரிந்திருந்தனர். கட்டளை என்ற பெயர் கல்+தளை என்ற சொற்களிலிருந்து தோன்றியது. கல்லைத் தளையிடுவது, மதிப்பிடுவது என்ற பொருளுடையதாகும்.

" கட்டளை அன்ன மணிநிறத்தும்பி "
—ஐங்குறு நூறு 215

" நறுந்தா தாடிய தும்பி பசுங்கேழ்ப்
பொன்னுரை கல்லின் நன்னிறம் பெறூஉம் "
—நற்றிணை 263

" நன்பொன்னன் புனிறு தீ ரேனல்
கட்டளையன்ன கேழன் மாந்தும் "
—ஐங்குறு நூறு 192

' பொன்காண் கட்டளை கடுப்பக் கண்பின் "
பெரும்பாணாற்றுப்படை 230

" கட்டளை அன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறுஅர் நெல்லிவட் டாடும் "
—நற்றிணை 3

" பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக்கல் "
—குறள் 505

கரிய காட்டுப் பன்றியும், கருநீலத் தும்பியும் கட்டளைக்கல் போலக் கரியவாக இருந்தனவாக கூறப்பட்டிருப்பதைக் காண லாம். மகரந்தத் தூள் படிந்த தும்பி பொன்னுரைத்த கட்டளைக் கல் போலத் தோன்றியதாகக் கூறப்பட்டிருப் பதையும் காணலாம்.

கட்டளைக் கல் இந்தியாவில் கிடைத்ததைப்பற்றிப் பிளினி எழுதியுள்ளார். (The best pieces of Black Jaspar or touch stone occurring in collections now come from India) பொன் கல்லில் கிடைத்ததால் பொன்னையும் கல்லாகக் கருதினர். தமிழகத்தில் பொன் கல்லோடு கலந்து மலிந்திருந்தமையால் உரை மாற்றைக் காணக் கட்டளைக் கல்லை மிக்குப் பயன் படுத்தியிருப்பர்; கட்டளைக் கல்லை வெளிநாட்டுக்கும் ஏற்றுமதியாக்கியிருப்பர்.

# பளிங்குக் கல்

விலை குறைந்த மணிகளில் ஒன்றாகப் பளிங்கும் கருதப் படும். சங்க நூல்களில் பளிங்கைப் பற்றிய செய்திகள் வருகின்றன. பளிங்கை ஆங்கிலத்தில் Quarts, Crystal Quarts என்று கூறுவர். பளிங்கு பழங்காலத்தில் காவிரி ஆறு பாயும் பள்ளத்தாக்கில் கிடைத்ததாகக் கூறியுள்ளனர். தமிழ் நாட்டிலும், மலையாளத்திலும் பளிங்குக் கற்கள் கிடைத்ததாகச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

“களிறு பொரக் கரைந்த கயவாய்க் குண்டு கரை
ஒளிறுவான் பளிங்கொடு செம்பொன் மின்னும்
கருங்கற் கான்யாற் றருஞ்சுழி வழங்கும்”

—நற்றிணை 292

“ பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை யீட்டுவட் டேய்ப்ப
உதிர்வன படூஉங் கதிர்தெறு கவாஅன் ”

—அகம் 5

“ புகர்முகம் பொருத புதுநீ ராலி
பளிங்கு சொரிவதுபோற் பாறை வரிப்பக் ”

—அகம் 108

" மையில் பளிங்கி னன்ன தோற்ற
பல்கோ ணெல்லிப் பைங்கா யருந்தி "

—அகம் 399

" கடத்திடைப் பிடவின் றொடைக்குலைச் சேக்கும்
வான்பளிங்கு விரைஇய செம்பரன் முரம்பின் "

—பதிற்றுப்பத்து 66 : 17 - 18

" பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பிற் பாயம் பாடி "

—குறிஞ்சிப்பாட்டு, 57 - 58

" கா அய்க் கொண்ட நுகமரு ணூறை
பருஉப்பளிங் குதிர்த்த பலவுறு திருமணி "

—மலைபடுகடாம், 515 - 58

## பல நிறங்களில்

பளிங்குக் கல்லைப் பள பளப்பான கல் என்று பொதுவாகக் கருதினர். நெல்லிக் கனிக்குப் பளிங்கை ஒப்பிட்டு அகநானூறு கூறியுள்ளது. முற்றிய காட்டு நெல்லிக்கனி சிவப்பு கலந்த பழுப்பு நிறமாகவும் பளபளப்பாகவும் காணப்படும். அதிலிருந்து பளிங்குக் கல்லின் நிறத்தையும் தன்மையையும் புரிந்து கொள்ளலாம்.

பளிங்குக் கற்கள் பொதுவாக வெண்மை நிறமாகக் கருதப் பட்டாலும் வெவ்வேறு நிறம் காட்டும் என்று கூறுவர். பதிற்றுப் பத்து வான்பளிங்கு என்று சொல்லியுள்ளது. நற்றிணை 'ஒளிறுவான் பளிங்கு' என்று குறிப்பிட்டுள்ளது. தெளிவான சுனைத் தண்ணீர் பளிங்கைக் கரைத்துச் சொரிந்து வைத்தாற் போன்று இருந்ததாகக் கூறியிருப்பதால் பளிங்குக் கண்ணாடி

போலிருக்கும் என்ற கருத்து சங்க காலத்திலிருந்து தெரிகின்றது. ஆலங்கட்டி மழை சொரிவது, பளிங்கு சொரிவது போல இருந்த தாக ஓர் அகநானூற்றுப் பாட்டு உவமித்துள்ளது. பளிங்கு பெரும்பாலும் வெண்மையாகவும் கண்ணாடி போலவும் உள்ள தால் நற்றிணையும் இவ்வாறு கூறியுள்ளது.

" அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சம்
கடுத்தது காட்டு முகம் "

—குறள் 706

தன்னையடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டு காட்டும் பளிங்கு என்று திருக்குறள் கூறியிருப்பதிலிருந்து பளிங்கு, கண்ணாடிபோல நிறத்தைக் காட்டுமென்று கருதின ரென்பது தெளிவாகின்றது. உருவைக் காட்டும் கண்ணாடி போலப் பளிங்கினால் செய்த அறை இருந்ததாக மணிமேகலை யிலும் கூறப்பட்டுள்ளது.

" விளிப்பறை போகாது மெய்புறத்திடூஉம்
பளிக்கறை மண்டப முண்டத னுள்ளது "

—மணிமேகலை 3 : 63 - 64

ஓசை வெளிப்போகாது உடம்பை மட்டும் தோற்றுவிக்கும் பளிங்கால் ஆன அறையுடைய மண்டபம் என்று மணிமேகலை கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். பளிங்கின் வழியாக உருவம் வெளியே தெரியும் என்று கருதினர்.

## சில இடங்கள்

கானாற்றருகில் யானை இடித்த கரையில் பளிங்கு மின்னி யதை நற்றிணை குறிப்பிட்டுள்ளது. காவிரியாற்றுக் கரையில் பளிங்கு கிடைத்ததாக ஆசிரியர் சிலர் கூறியிருப்பதை இது சார்பாகக் கவனிக்க வேண்டும்.

பரல் நிறைந்த முரம்பு நிலத்தில் பளிங்கு கலந்திருந்ததாகப் பதிற்றுப்பத்து கூறியுள்ளது. பளிங்கு இத்தகைய நிலத்தில் இயற்கையில் கிடைப்பதைக் கண்டுள்ளனர். பளிங்குப் பாறைகளும் இயற்கையில் கிடைப்பதைக் கண்டுள்ளனர்.

தமிழ் நாட்டிலிருந்து மேலை நாட்டினர் பளிங்கைத் தருவித்ததைப் பற்றி கிரேக்க, உரோம ஆசிரியர்கள் குறிப் பிட்டுள்ளனர். சங்க நூல்களும் பளிங்கைப் பற்றிக் கூறி யுள்ளதால் இச்செய்தி பொருத்தமாகவே உள்ளது.

## பளிங்குக் கட்டடங்கள்

மணிமேகலையில் பளிங்கினால் அமைந்த பளிக்கறைப் பள்ளியும், பளிக்கறை மண்டபங்களும் கூறப்பட்டிருப்பதால் அக்காலத்தில் பளிங்கு தமிழ் நாட்டில் நிறையக் கிடைத்திருக்க வேண்டுமென்று கருதலாம்.

## பளிங்குக் காசுகள்

அகநானூற்றில் பளிங்கைப் பற்றி ஓர் அரிய செய்தி கூறப் பட்டுள்ளது. பளிங்கைக் காசாகப் பயன்படுத்தினர் என்ற செய்தி இதுவரை கேட்கப்படாததாகும்.

> " புறவுக்குயின் றுண்ட புன்காய் நெல்லிக்
> கோடை யுதிர்த்த குவிகட் பசுங்காய்
> அறநூற் பளிங்கின் துளைக்காசு கடுப்ப
> வறுநிலத் துதிரும் அத்தம் கதுமென"
>
> —அகம் 315

உருண்டையான பளிங்குக் கற்கள் காசாகப் பயன்பட்ட தாகத் தெரிகின்றது. இக்காசுகளைச் சேர்த்து வைக்கத்

துளையிட்டு நூலில் கோத்து வைத்தனர் என்றும் தெரிகின்றது. இவ்வாறு நூலில் கோத்த பளிங்குக் காசுகள் நூலறுந்து உதிர்ந்த போது நெல்லிமரம் கோடை காலத்தில் உதிர்த்த குவிந்த பசுங்காய் போல இருந்ததாக அகநானூறு கூறியுள்ளது. பளிங்குவடம் என்று இதுவே பிற்காலத்தில் அழைக்கப் பட்டது.

## வேம்பின் கனிபோல

சங்க காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கிய பொன் நாணயங் கள் வேப்பங்கனி போன்று உருண்டையாக இருந்ததை 67ஆம் குறுந்தொகைப் பாட்டிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அது போன்றே பளிங்குக் காசுகளும் உருண்டையாக இருந்தன என்று தெரிகின்றது.

மலைபடுகடாத்தில் பளிங்கு உதிர்த்த திருமணி கூறப் பட்டுள்ளது.

> "காஅய்க் கொண்ட நுகமரு ஹூறை
> பரூஉப்பளிங் குதிர்த்த பலவுறு திருமணி
> குரூஉப்புலி பொருத புண்கூர் யானை
> முத்துடை மருப்பின் முடுவலி மிகுதிரள்".
>
> —மலைபடுகடாம்வரி 515-518

## பொருந்தா உரை

நச்சினார்க்கினியர் "பரூஉப் பளிங்கு தெரித்த பலவுறு திரு மணி" என்பதற்கு 'மரத்தினின்றும் சிதறியுதிர்த்த பருத்த நிகர மாகிய கருப்பூரம்' என்று கூறினார். நச்சினார்க்கினியர் உரை பொருத்தமற்றது.

சங்க காலத்தில் கருப்பூர மரம் தமிழ்நாட்டில் இருக்க வில்லை. பல்லவர் காலத்தில்தான் கருப்பூர மரம் தமிழ்நாட்டில் வந்தது. ஆதலின் நச்சினார்க்கினியர் உரை தவறு. ஆதலின், பெரிய பளிங்கு உதிர்த்த திருமணி கருப்பூரம் அன்று, அது பளிங்கின் தொடர்பாகிய மணியாகும்.

காட்டுப் பூனையின் கண் போன்ற கல்லாகிய கோமேதகத் தைப் போல (Beryl) பளிங்குக் கல்லிலும் ஒருவகைக் கல் (Quartz Cat's eye) அன்றைய தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதாக பிளினி முதலிய ஆசிரியர்கள் கூறியுள்ளார் கள். இந்தக் கல்லே பெரிய பளிங்கு உதிர்த்த திருமணி என்று கருத வேண்டும்.

திருமணி என்ற சொல் சங்க நூல்களில் விலையுயர்ந்த மணிக்கற்களுக்கே வழங்கியிருப்பதால், விலை குறைந்த பளிங்கி லிருந்து தோன்றிய உயர்ந்த சிறந்த மணிக்கல்லான Quartz Cat's eye என்ற கல்லையே பளிங்குதிர்த்த திருமணியாகக் கருத வேண்டும். பளிங்கு வயிரம் என்றொரு பெயர் கல்வெட்டுகளில் வருகின்றது.

நச்சினார்க்கினியர் கருப்பூரம் என்று கூறியிருப்பது கால மலைவு (Anacronism) என்ற குற்றத்தின் பாற்படும். சங்க காலத்தில் கருப்பூர மரம் தமிழ்நாட்டிற்கு வரவில்லை. பிற் காலத்திலேயே மலேயாவிலிருந்து வந்தது என்பதை உணர வேண்டும். மரத்திலிருந்து எடுக்கப்படும் கருப்பூரம் வெண்மை யாகப் பளிங்கு போலிருப்பதால் நச்சினார்க்கினியர் இத்தகைய உரை கூறினார்.

பளிதம் என்ற சொல் கருப்பூரத்தைக் குறிக்கும். பளிங்கு ஒரு வகைக் கல்லையே குறிக்கும். பளிதமும் பளிங்கும் ஒன்றல்ல. இயற்கை உயிர்கள், பொருள்கள் பற்றிச் சங்க காலத்

தில் இருந்த சிறந்த அறிவு பிற்காலத்துத் தமிழர்க்கு இன்மை யால் இத்தகைய மயக்க உரைகளையும் குழப்பான பொருளை யும் பிற்கால விளக்கங்களில் காண்கிறோம்.

பளிங்கை நிகண்டுகள் படிகம் என்று அழைக்கும். பளிக்கு வடமும் நூல்களில் கூறப்பட்டுள்ளது. பளிங்கு வழியாகப் புறத்தில் தெரியும் பவளத்தைப் போற்றினர். "பளிக்கறைப் பவழப்பாவை பரிசெனத்திகழும் சாயல்" என்று சீவக சிந்தாமணி கூறியிருப்பதைக் காணலாம்.

# பவளம்

சங்க நூல்களில் கூறப்படும் மற்றொரு மணி பவளமாகும். இது சங்க நூல்களில் துகிர் என்றழைக்கப்பட்டுள்ளது.

## கல் மணிகளா?

மணிகளில் துகிரும் முத்தும் கடலுயிர்களில் தோன்றியன வாகும். இவை மணிகளாகக் கருதப்பட்டாலும் கல்லிலிருந்து பிறந்தவையல்ல. இருப்பினும் இவற்றை மணிகளாகவே கருதினர். மணிகளில் மிகச் சிறந்தவற்றில் ஒன்றாக முத்து கருதப்பட்டது. பவளமும் ஒரு மணியாகக் கருதப்பட்டது.

பவளம் தமிழ் நாட்டிலோ இந்தியாவிலோ கடலில் விளையவில்லை.

கிரேக்க உரோம ஆசிரியர்கள் குறிப்பிலிருந்து பவளம் தமிழ் நாட்டிற்கு மேலை நாடுகளிலிருந்து அனுப்பப்பட்டதாகத் தெரிகின்றது.

## நம் நாட்டில் இல்லை

காவிரிப் பூம்பட்டினத்தில் குவிந்த பண்டங்களில் தென் கடல் முத்தும் குணகடல் துகிரும் பட்டினப்பாலையில் (189) கூறப்பட்டுள்ளன. கீழ்த்திசைக் கடலில் பிறந்த பவளம் என்று

கூறினும், தமிழ் நாட்டுக் கீழ்க்கடலில் உலகிலேயே சிறந்த முத்துமணி கிடைத்ததேயன்றிப் பவளம் கிடைத்ததில்லை. ஆதலின் குணகடல் துகிர் என்பதற்குக் கீழ்க்கடல் வழியாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதியான பவளம் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

## தேடிவந்த பவளம்

சங்க காலத்தில் உரோம நாட்டுக்கருகில் இருந்த கடலில் எடுக்கப்பட்ட பவளமே பெரும்பாலும் தமிழகத்திற்கு வந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

பவளத்தை இந்தியர் மிகவும் போற்றியதாக அக்காலத்தில் வெளிநாட்டு ஆசிரியர் எழுதியுள்ளனர்.

பெரிப்புளூஸ் என்னும் நூலில் நன்கு சிவந்த பவளம் நடுக் கடலில் (மத்தியதரை) இருந்து எடுக்கப்பட்டுத் தமிழ் நாட்டுத் துறைமுகங்களான முசிறிக்கும் தொண்டிக்கும் ஏற்றுமதி செய்யப் பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இன்றும் இத்தாலியப் பவளம் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பவளம் மிகுதியாக இருந்ததால் பவளம் விளையும் இடத்திலேயே பவளம் கிடைப்பது அரிதாகிவிட்டது என்றும் அந்நூல் கூறுகின்றது. ஆனால், இந்தியாவில் மதிக்கப்பட்ட அளவு மேல்நாட்டில் பவளம் ஒரு சிறந்த மணியாகக் கருதப் படவில்லை.

பொன்னையும் பவளத்தையும் முத்தையும் மணியையும் ஒரே நன்கலத்தில் அமைத்ததாக ஒரு பாடல் கூறியுள்ளது.

மகளிரின் சிறந்த மேனியைத் 'துகிர்மேனி' என்று பட்டினப் பாலை கூறியுள்ளது. பவளத்தைப் பற்றிச் சங்க நூல்களும் கூறியுள்ளன.

" ஈயன் மூதாய் வரிப்பப் பவளமொடு
மணிமிடைந் தன்ன குன்றங் கவைஇய "
—அகம் 14

" குறுமோட்டு மூதாய் குறுகு றோடி
மணிமண்டு பவளம் போலக் காயா "
—அகம் 374

" இனச்சித ருகுத்த விலவத் தாங்கட்
சினைப்பூங் கோங்கி னுண்டாது பகர்நர்
பவளச் செப்பிற் பொன் சொரிந்தன்ன "
—அகம் 25

" அலங்கு குலை யீந்தின் சிலம்பிபொதி செங்காய்
துகிர் பொதி பவள மேய்க்கும் "
—ஐங்குறுநூறு மிகை, 2

## பெயர் விரிந்தது

இந்திர - கோபப் பூச்சியைப் பவளமொடு ஒப்பிட்டுக் கூறுவது சங்கப்பாடல் மரபாகும். மணியும் பவளமும் சேர்ந்த தன்மையைக் காயாவுடன் கூடிய இந்திர கோபத்துடன் ஒப்பிட்டு அகநானூறு கூறியுள்ளது. மணிமண்டு, பவளம் என்ற அகநானூற்றுத் தொடரே அகநானூற்று இரண்டாவது தொகுதிக்குப் பெயராக மணிமிடைப்பவளம் என்று வந்தது. இந்தத் தொடரே பிற்காலத்தில் மணிப்பிரவாளம் என்று வடமொழி விரவிக்கலந்த தமிழ் நடைக்குப் பெயராக மாறியது.

## பயன்பட்ட வகைகள்

பவளத்தைக் கோவையாகவும், மணியுடனும் முத்துடனும் சேர்த்து அணிகலன்களாக்கிப் பயன்படுத்தினர்.

"பவழஞ் சேர்ந்த பல்காழல்குலர்"
—பெருங்கதை 43-146

"செந்துகிர்க் கோவை சென்றேந் தல்கு
லந்துகின் மேகலை யசைந்தன வருந்த"
—சிலம்பு 4: 29-30

அல்குலின் மேல் உடுத்திய துகிலில் பவள வடத்தை அணிவது வழக்கமென்று தெரிகின்றது.

பவளக்கடிப்பிடை முத்தம் என்று ஓர் அணிகலன்களாகத் திணைமாலை குறிப்பிட்டுள்ளது.

" உடுத்தவை, கைவினைப் பொலிந்த காசமை
பொலங்காழ் மேன்
மையில் செந்துகிர்க் கோவை யவற்றின் மேற் "
—கலி 85

" நுண்டுகி னுழைந்த வல்குற் பவளமொத்து "
—சீவக சிந்தாமணி 1184

" திகழொளி முத்தங் கரும்பாகத் தைஇப்
பவழம் புனைந்த பருதி சுமப்பக்
கவழ மறியாநின் கைபுனை வேழம் "
—கலி 80

" பூண்டவை, எறியா வாளு மெற்றாமழுவுஞ்
செறியக் கட்டி யீரிடைத் தாழ்ந்த
பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய வானேற் றவிர் பூண் "
—கலி 85

சிறுவர்க்கான யானைப் பொம்மையைத் தாங்கிய வட்டக் பலகை பவளத்தால் செய்யப்பட்டிருந்தது. எறியாத வாளுப் எற்றாத மழுவும் ஆனேற்றுப் பூணும் சிறுவரின் அணிகலனாகம் கூறப்பட்டுள்ளன அவற்றில் ஆனேற்றுப் பூண் பவளத்தால் செய்யப்பட்டது.

பவளத்தால் பொதிகைக்குத் திரள்கால் செய்யப்பட்டதாக மணிமேகலை கூறியுள்ளது.

காசுமாலையில் பவளக் காசையும் பல மணிகளோடு சேர்த்திருந்ததாகப் பெருங்கதை (இலாவாண காண்டம் 19, 142) கூறியுள்ளது.

சங்க காலத்திலும் பிற்காலத்திலும், மாலைகளிலும் மேகலைகளிலும் பவளத்தை மிகுதியாகப் பயன்படுத்தினரென்று தெரிகின்றது.

# முத்து

சங்க நூல்களில் மிகச் சிறந்த மணிகளில் ஒன்றாக முத்தைக் கருதினர் என்பது தெரிந்ததே. தமிழ் நாட்டு முத்து சங்க காலத்திலும் இடைக் காலத்திலும் உலகம் முழுவதும் சிறப் புற்றிருந்தது. பாண்டி நாட்டில் கொற்கையில் விளைந்த முத்தைப்பற்றிச் சங்க நூல்கள் கூறுகின்றன.

## புகழ்பெற்ற முத்து

தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதியான விலையுயர்ந்த பொருள்களில் முத்தே முதன்மை வாய்ந்ததாகும்.

உரோமர்கள் கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டு முத்தையே மிகவும் போற்றினர். உரோமப் பேரரசின் அரசிகள் இந்த முத்துக்களையே அணிந்து மகிழ்ந்தனர்.

## வேற்றுமை

முத்து, மணிகளில் சிறந்ததொன்றாகக் கருதப்படினும் முத்து கடலில் பிறக்கும் மணியாகும். பிறமணிகளைப் போலக் கல்லில் பிறப்பதில்லை. பவளமும் கடலில் பிறப்பதாயினும் அது தாழ்ந்த மணியாகவே கருதப்பட்டது.

சங்க நூல்களில் வலம்புரிச் சங்கைப் பெறுவதற்காக மூழ்கினதாகக் கூறப்படினும் முத்தைப் பெற மூழ்கினதாகக் கூறப்பெறவில்லை. முத்தைப் பெறுவதற்கு மூழ்கியது சங்க காலத்தில் எளிய நிகழ்ச்சியாகி விட்டதால் கூறவில்லை. ஆயினும் கடலின் அடியில் இருந்த மீனைக் கைக்கொள்ள விரும்பிய பரதவர் முத்துச் சிப்பிகளையும் கொண்டு வந்தனர் என்பது அகநானூறு 296 ஆம் பாட்டால் விளங்குகின்றது.

சங்க காலத்தில் முத்தை எடுத்தல் என்பது இக்காலத்தைப் போல மிக அரிய நிகழ்ச்சியாகக் கருதப்படவில்லை. அன்றாட நிகழ்ச்சியாகவே கருதப்பட்டது.

சங்க காலத்தில் முத்து மிகுதியாகக் கொற்கைக் கடற் கரையில் கிடைத்ததால் அதற்காகக் குளித்ததைப் பற்றிக் கூறவில்லை.

## வலம்புரிச் சங்கின் முத்து

ஆனால், வலம்புரிச் சங்கு சங்க காலத்திலேயே அரிய தாகவும், பெருமை மிக்கதாகவும் கருதப்பட்டதால் வலம்புரிச் சங்கை மூழ்கி எடுப்பது கூறப்பட்டது. வலம்புரிச் சங்கில் கிடைக்கும் முத்திற்கும் ஒருதனிப் பெருமை ஏற்பட்டது.

> “ இலங்கிரும் பரப்பின் எறிசுறா நீக்கி
> வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்
> ஒலி தலைப் பணிலம் ஆர்ப்பக் கல்லெனக்
> கலி கெழு கொற்கை எதிர்கொள இழிதரும் ”
>
> —அகம் 350

அகநானூறு கூறியுள்ள செய்திகளில் சுறாமீனுக்குப் பயந்து வலம்புரிச் சங்குகளை மூழ்கி எடுத்தது கூறப்பட்டுள்ளது. வலம்புரிச் சங்கு எடுப்பதைப் போலவே அக்காலத்தில் முத்துச்

சிப்பியையும் எடுத்திருப்பர் என்பதில் ஐயமில்லை. வலம்புரிச் சங்கெடுக்கும் முறையைக் கூறிய அகநானூற்றுச் செய்திக்கும் 13 ஆம் நூற்றாண்டில் மார்க்கோபோலோ முத்தெடுக்கும் முறையைப் பற்றிக் கூறிய செய்திக்கும் மிகுந்த ஒற்றுமை உண்டு.

## மார்க்கோபோலோ கூற்று

முத்தெடுக்கும் தொழில் பாண்டிய அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருந்ததை அகநானூறு தெரிவித்துள்ளது.

"மறப் போர்ப் பாண்டிய ரறத்திற் காக்குங்
கொற்கையம் பெருந்துறை முத்தி னன்ன
கைப் பொலிந் திலங்கு மெயிறு கெழு துவர்வாய்"
—அகம் 27

மார்க்கோபோலோ கூறியுள்ள செய்திகளில் நீர்ப்பரப்பில் முத்து எடுப்போர் பாண்டிய அரசனுக்குப் பத்தில் ஒரு பங்கு கொடுக்க வேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது.

கொற்கையில் முத்துக் குளித்ததை மறப்போர்ப் பாண்டியர் அறத்தில் காத்ததாக அகநானூறு கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். முத்துக் குளித்தலைப் பாதுகாக்க சங்க காலத்தில் பாண்டியர் ஒருநிலைப் படையையே (Standing army) கொற்கையில் நிறுத்தி வைத்திருக்க வேண்டும். இன்றும் சங்கு எடுத்தல் அரசின் உரிமையாகும். அதிலும் வலம்புரிச் சங்கு அரசினரால் ஏலம் விடும்போது மிகப் பெரிய தொகையைத் தருகின்றது.

முத்துக் குளிப்போரை ஊறு செய்யும் பெரிய மீன்களைத் தடுக்க மந்திரம் சொன்ன பிராமணர்களுக்கு இருபதில் ஒரு பங்கு தரப்பட்டதாக மார்க்கோபோலோ கூறியுள்ளார்; மந்திரத்தால் கட்டுப்பட்ட மீன்கள் பகல்வேளை வரையில்தான் ஊறு செய்வதில்லை என்றும் இரவில் அவை கட்டுப்படுவதில்லை என்றும் கூறியுள்ளார்; இந்தப் பிராமணர்கள் விலங்குகளையும் பறவைகளையும் இவ்வாறு கட்டுப்படுத்தும் திறனுள்ளவர் என்றும் கூறியுள்ளார்.

பகலில் சுறாமீன்கள் யாரையும் இயற்கையில் ஊறு செய்வதில்லை என்பது இக்காலத்தில் கண்டறிந்த செய்தியாகும். காலையிலும் மாலையிலும் சுறாமீன்கள் மனிதரைக் கவ்வும் என்பது இக்காலத்தில் கண்டறிந்ததாகும். இதைச் சங்ககாலத்திலும் கூறியுள்ளனர்.

அகநானூற்றில் ‘எறி சுறா நீக்கி’ என்று சொல்லியிருப்பதால் சுறாமீன்களைக் கட்டும் ‘கட்டுவித்தை’ தெரிந்தோர் சங்க காலத்தில் இருந்தனரென்பது தெளிவாகின்றது. ஆனால், அவர்கள் பிராமணர்களாக இருந்திருக்க முடியாது.

மார்க்கோ போலோ தவறுதலாக, உள்ளூர்ப் பூசாரிகளைப் புரிந்து கொள்ளாமல், ‘பிராமணர்கள்’ என்று எழுதியுள்ளார். பிராமணர்கள் இந்தக் கட்டுவித்தையை என்றுமே செய்த தில்லை.

சுறாமீன்களைக் கட்டுப்படுத்துவோரைக் ‘கடல் கட்டி’ என்ற பெயரால் மார்க்கோ போலோ அழைத்துள்ளார். கட்டு விச்சி போன்ற பழங்குடி மக்களினத்தாரே இந்தக் கட்டு வித்தையில் வல்லவர். கண்கட்டு வித்தையைப் போலக் கடலில் ஊறு செய்த சுறாமீன்களைக் கட்டிப் போட்டவர் பிராமணர்களாக இருக்க முடியாது.

## பெத்தலார்

ஏப்பிரல் மாதத் துவக்கத்தில் பெரிய சிறிய படகுகளில் முத்தெடுக்கச் செல்வோர் ‘பெத்தலா’ என்ற இடத்திற்குப் போய் அங்கிருந்து 60 கல் தொலைவில் இருந்த மன்னார் சந்தியில் சென்று முத்துக் குளிப்பர் என்று மார்க்கோ போலோ கூறியுள்ளார். பெத்தலார் என்பது இலங்கையில் இருந்த பட்டலம் என்று யூல் என்ற அறிஞர் கூறியுள்ளார்.

## தொள்ளாயிரம் பார்

ஆனால், இலங்கைக் கடற்கரைக்கருகில் இருந்த ஊரில் முத்தெடுக்கச் சென்றதாகக் கூறியது பொருத்தமாக இல்லை. இன்றும் 'தொள்ளாயிரம் பார்' என்று முத்தெடுக்கும் இடம் கூறப்படுகின்றது.

ஆத்தொம்பது பார்
வடஒம்பது பார்
சைத்தொம்பது பார்
மேலொம்பது பார்
திருச்செந்தூர் பூந்தோட்டம் பார்

என்று பல 'பார்'கள் முத்து விளையும் 'பார்' -இடங்களாக இன்றும் மீனவர் கூறுவர்.

இப் பார்களில் மிகக் கூடுதலாக முத்துக் கிளிஞ்சல்கள் தொள்ளாயிரம் பாரில் அகப்பட்டதாக 1954 ஆம் ஆண்டு முத்துக் குளியல் அறிக்கைக் கூறியுள்ளது.

இந்தப் 'பார்களின்' பெயர்களில் ஒம்பதுபார் மூன்று பெயர் களில் வருகின்றது. பத்து பார் ஒரே ஒரு பெயரில் மட்டும் வருகின்றது. ஒன்பதும் தொள்ளாயிரமும் பார்களுக்கு வழங்கிய பெயர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது. தொள்ளாயிரம் பாரில் 1954ஆம் ஆண்டு 2,20,00,000 முத்துச் சிப்பிகள் எடுக்கப் பட்டன. இதற்கடுத்து கிடைத்த பாரில் 17,47,000 சிப்பிகளே அகப்பட்டன. ஆதலின் தொள்ளாயிரம் பாரே முத்து மிகமிக விளைந்த பாராகும். அர்த்த சாத்திரத்தில் 'பாசிகா' (Pasika) என்ற இடம் முத்து விளைந்த இடமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த முத்து 'பாசிப் பார்' என்று இன்று வழங்கும் இடத்தில் விளைந்த முத்தாகலாம்.

திருச்செந்தூர் பூந்தோட்டம் பார், திருச்செந்தூர் கோயில் தோட்டத்தை அடுத்துக் கடலில் விளைந்த முத்தாகலாம். தூத்துக்குடியும் திருச்செந்தூரும் மிக அருகில் உள்ள கடற்கரை ஊர்களாகும்.

சைத்தொம்பது பார்

சைத் கொடமூர்த்திப் பார்

என்ற பெயர்கள் பிற்காலத்தில் அரேபியர்கள் முத்து வணிகம் செய்தபோது சையது என்ற சிறந்த மரக்கலராயர் பெயரால் வந்திருக்கலாம். பிற்காலத்தில் அரேபியர்களும், வெனிஸ், ஜெனோவா வணிகர்களும் தூத்துக்குடி முத்தை விலைக்கு வாங்கினர் என்று தெரிகின்றது.

போர்த்துக்கீசியர்கள் தூத்துக்குடி முத்திற்காகவே 1524ஆம் ஆண்டிலிருந்து 1658-ஆம் ஆண்டு வரை இந்தப் பகுதியைத் தங்களுடைய ஆட்சிக்கு உட்படுத்தி, அங்கிருந்த - சங்க காலத்திலிருந்து வாழ்ந்த - மீனவக் குடியினரான பரவரை முற்றிலும் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றினர்.

முத்துக் குளிக்கும் உரிமை போர்த்துக்கீசியரிடமிருந்து டச்சுக்காரர்களுக்கும், பின்னர் ஆங்கிலேயருக்கும் மாறியது. கிழக்குக் கரைத் தொண்டியிலும் திருநெல்வேலிக் கடற்கரையிலும் முத்துக்குளியல் 1914 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடந்தது.

தொள்ளாயிரம் பாரே நிறைய முத்துச் சிப்பிகளைத் தந்தது என்று கண்டு பிடித்தனர். 1953 ஆம் ஆண்டு தொள்ளாயிரம் பாரில் ஏறக்குறைய மூன்று கோடி முத்துச் சிப்பிகள் இருந்த தாகக் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவேண்டும். தொள்ளாயிரம் பார் என்று மீனவர் கூறிய பெயரே தொள்ளாயிரம் முத்துச் சிப்பிகள் கிடைக்கக் கூடிய பார் என்ற பொருளில் வழங்கிற்று என்று கருதலாம்.

இப்பொழுது அறிவியல் அறிவோடு கணிக்கும் திறமை படிப்பில்லாத மீனவர்க்கு இல்லாததால் தொள்ளாயிரம் பார் என்று அழைத்தனர். ஆயினும் இது முத்துச் சிப்பிகளின் எண்ணிக்கையைக் கணிக்கும் மீனவர்களின் குறிப்பு மொழியாக வும் கருதலாம்.

'இராசவுக்கு சிப்பி சோதித்துப்பார்'

என்ற பெயர் வழங்குகின்றது. அரசர்க்கு மட்டும் உரிமை யான பார்களும் இருந்திருக்கலாம்.

## முத்தொளளாயிரம் - நூல்

ஆதலின் முத்தொள்ளாயிரம் என்ற நூல் எழுதப்படும் முன்னால் தொள்ளாயிரம் பாரில் விளைந்த சிறந்த முத்தைக் குறித்தே, 'முத்துத்தொள்ளாயிரம்' என்று பாடல்களைத் தொகுத்த ஆசிரியர் பெயரிட்டிருக்கலாம். இப்பெயரே முத்தொள் ளாயிரம் என வழங்கிற்று.

மூன்று தொள்ளாயிரம் என்பதற்கோ, தொள்ளாயிரம் பாடல் கள் இருந்ததற்கோ யாதொரு சான்றும் இல்லை. ஆதலின் தொள்ளாயிரம் பாறையில் விளைந்த சிறந்த முத்துப் போன்ற பாடல்கள் என்ற பொருளில், முத்தொள்ளாயிரம் என்று நூற் பெயர் (முத்து+தொள்ளாயிரம்) தோன்றியிருக்க வேண்டும்.

அகநானூற்றில் மூன்றாம் பகுதிக்கு நித்திலக் கோவை என்று பெயர் இருப்பதையும் இது சார்பாகக் கவனித்துப் பார்க்க வேண்டும். முத்துக் கோவை போன்ற சிறந்த பாடல்கள் வழங் கினார். ஆதலின் 'பெத்தலார்' என்று மார்க்கோ போலோ கூறுவது முத்தொள்ளாயிரம் என்ற சொல்லின் மாற்றமே என்று கருதலாம். தொள்ளாயிரம் பாரில் விளைந்த முத்து அவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம்

## முத்துச் சிப்பிகள் பற்றி

சங்க காலத்தில் முத்துக் குளித்தலைப்பற்றி ஏலியன் (Aelian) என்பவர் எழுதியிருக்கிறார். சோழ நாட்டுக் கடற்கரையிலும் முத்துக் குளிக்கப்பட்டதாகக் கூறியுள்ளார். இது சார்பாக ஒரு கதையையும் கூறியுள்ளார். அக்கதை இது :

"முத்துச் சிப்பிகள் கூட்டம் கூட்டமாகச் செல்லும். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு தலைவன் உண்டு. அந்தத் தலைவனை முத்துக் குளிப்போர் பிடித்து விட்டால் முத்துச் சிப்பிகளின் கூட்டத்தையே பிடித்து விடலாம்."

இஃது ஒரு புராணச் செய்தியே என்பதில் ஐயமில்லை. தேனீக்களில் தாய்த் தேனீயைப் பிடித்தால் தேனீக் கூட்டத்தைப் பிடிக்கலாம் என்பது உண்மையே. ஆனால், முத்துச் சிப்பிகளின் வாழ்வில் அத்தகைய தலைவனோ, அத்தகைய கூட்டு வாழ்க்கையோ கிடையாது என்பது அறிஞர்கள் கண்டதாகும்.

ஆனால், ஏலியன் கூறிய செய்தி தமிழ் நிகண்டுகளில் வேறு முறையாகக் கூறப்பட்டுள்ளது.

இப்பி ஆயிரம் சூழ்ந்தது இடம்புரி என்றும்
இடம்புரி ஆயிரம் சூழ்ந்தது வலம்புரி என்றும்
வலம்புரி ஆயிரம் சூழ்ந்தது சஞ்சலம் என்றும்
சஞ்சலம் ஆயிரம் சூழ்ந்தது பாஞ்ச சன்னியம் என்றும்

நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளது. இந்தச் செய்தியைப் போன்றே ஏலியன் கூறிய செய்தியும் உள்ளது.

### சிப்பியும் சங்கும்

இப்பி என்பது முத்துச் சிப்பியைக் குறிக்கும். முத்துச் சிப்பியும் சங்குகளும் வேறு வேறு இனமாகும். ஆதலின் இப்பி ஆயிரம் சூழ்ந்தால் வலம்புரி ஆவது பொருளற்ற செய்தி யாகும்.

இன்றும் இடம்புரிச் சங்குகள் நிறைய கிடைக்கின்றன. ஆனால், மிக அரிதாக வலம்புரிச் சங்குகள் கிடைக்கின்றன. கூட்டமாக அவை கிடைப்பதில்லை.

பாஞ்ச சன்னியம் என்பது முற்றிலும் புராணச் செய்தியாகும். இந்தச் செய்திகளில் முத்துச் சிப்பிகள் கூட்டமாகக் காணப் பட்டன என்பதே உண்மையானதாகும். கொற்கை யருகில் முத்துக் குளித்த செய்தியைச் சங்க நூற் பாடல்கள் குறிப்பிட் டுள்ளன.

" இவர் திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர் நடைப் புரவிக் கால்வடுத் தபுக்கும்
நற்றேர் வழுதி கொற்கை முன்றுறை "

—அகம் 130

" தோளா முத்தின் தெண்கடல் பொருநன்
திண்தேர்ச் செழியன் பொருப்பின் கவா அன் "

—அகம் 137

" யாத்த தூணித் தலைதிறந் தவைபோற்
பூத்த இருப்பைக் குழைபொதி குவியிணர்
கழல்துளை முத்திற் செந்நிலத்து உதிர "

—அகம் 225

" வினைநவில் யானை விறற்போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பிற் கொற்கை முன்றுறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து "

—அகம் 201

" பன்மீன் கொள்பவர் முகந்த இப்பி
நாரரி நறவின் மகிழ் நொடைக்கு ஊட்டும்
பேரிசைக் கொற்கைப் பொருநன் வென்வேல் "

—அகம் 296

" அலங்கிதழ் நெய்தற் கொற்கை முன்றுறை
இலங்கு முத்து உறைக்கும் எயிறுகெழு துவர்வாய் "

—ஐங்குறு நூறு 185

" கைவல் கம்மியன் கவின்பெறக் கழாஅ
மண்ணாப் பசுமுத்து ஏய்ப்பக் குவியிணர்ப்
புன்னை அரும்பிய புலவுநீர்ச் சேர்ப்பன் "

—நற்றிணை 94

" கொற்கையம் பெருந்துறை முத்தொடுபூண்டு "

—சிலம்பு 14:80

" சீருடை விழுச்சிறப்பின்
விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்
இலங்குவளை யிருஞ்சேரிக்

கட் கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோர் நசைப் பொருந "

—மதுரைக் காஞ்சி 134-138

கொற்கை முன்துறையில் அலையடித்து வந்த சிப்பியில் தோன்றிய குளிர்ச்சியான கதிரையுடைய முத்து, கரையில் சென்ற குதிரைக் காலில் பட்டுத் தடுத்ததாக அகநானூறு கூறியுள்ளது. மீன் கொள்பவர் முகந்த சிப்பியைக் கள்ளிற்கு மாறிக் கொண்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

## முத்து விளையுதொரு தென்கடலிலே

சங்க காலத்தில் முத்து கொற்கையில் அவ்வளவு எளிதாகக் கிடைத்ததாகத் தெரிகின்றது.

முத்தினையும் சங்கையும் குளிப்போர் இருப்புகள் கொற்கையில் இருந்ததைப் பாண்டியனின் சிறப்பாக 'மதுரைக் காஞ்சி' கூறியுள்ளது. 'விளைந்து முதிர்ந்த விழுமுத்து' என்று மதுரைக் காஞ்சி கூறியிருப்பதால், அவர்கள் முத்து விளைவதும் முதிர்வதும், முதிர்ந்த பிறகு, விழுமுத்து எடுக்கக் குளித்தலும் தெரிந்திருந்தனர் என்பது தெளிவாகின்றது.

புறநானூற்றுப் பாடலில் முத்து விளைதலைப் பற்றி ஒரு குறிப்பு வருகின்றது.

"தென்பவ் வத்து முத்துப் பூண்டு
..................................
..................................
..................................
மிசைப் பெய்த நீர் கடற்பரந்து முத்தா குந்து"

—புறம் 380

## முத்து பிறப்பது எப்படி?

மேலிருந்து பெய்த நீர் முத்துச் சிப்பியில் விழுந்து, அந்த நீரே முத்துச் சிப்பியின் வயிற்றில் முத்தாகியது என்று சங்க காலத்திலேயே கருதினர் என்பது தெளிவாகின்றது.

ஆனால், இக்கால ஆராய்ச்சியில் முத்துச் சிப்பியின் வயிற்றில் மணல் போன்ற கெட்டியான பொருள் புகுவதால் அதன் ஊறு துன்பந்தராமல் தடுக்கவே சிப்பி வயிற்றில் ஒருவகைக் குழம்புப் பொருள் சுரந்து சுற்றி முத்தாகிறது என்று கண்டு பிடித்துள்ளனர்.

## செயற்கை முத்து

சிப்பியின் வயிற்றில் செயற்கையாக மணல் போன்ற பரலைப் புகுத்திச் செயற்கை முத்தை உண்டு பண்ணும் முறையை முதலில் 'மிக்கி மோட்டோ' என்ற சப்பான் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்தார். இப்போது தமிழ் நாட்டிலும் செயற்கை முத்து உண்டுபண்ணுகின்றனர்.

முத்து முதிர்வதைப் புறநானூறு (53) 'முதிர்வார் இப்பி முத்து' என்று கூறியுள்ளது. முதிர்ந்த சிப்பியையே மூழ்கி வாரினர் என்பது தெளிவாகின்றது.

தெற்குக் கடலில் முத்து கிடைப்பதைப் பற்றிச் சங்கநூல்கள் சிறப்பாகக் கூறியுள்ளன. சிலப்பதிகாரம் முதலிய நூல்களும் தென்கடல் முத்தைப்பற்றியும் கொற்கையில் கிடைத்த முத்தைப் பற்றியும் கூறியுள்ளன.

> " தென்கடன் முத்துந் தென்மலைச் சந்தும்
> தண்கட னிறுக்குந் தன்மைய வாதலிற் "
>
> —சிலம்பு 8:19-20

"தண்கடற் பிறந்த முத்தின் ஆரமும்"

— அகம் 13

தென்பவ்வத்து முத்து, தென் கடன் முத்து, கொற்கை. முத்து என்று சொல்லப்படுவதால் சிறந்த முத்து சங்க காலத்தில் பாண்டி நாட்டுக் கடலிலேயே கிடைத்தது என்பதில் ஐயமில்லை.

## பதிப்பில் பிழை

அகநானூறு "தண்கடற் பிறந்த முத்தின் ஆரம்" என்ற வரியில் "தண்கடற்" என்பது தென்கடல் என்றிருக்க வேண்டும். பழைய பதிப்பில் "தன்கடல்" என்றும், பிற்காலப் பதிப்பில் "தண்கடல்" என்றும் வருகின்றது. இந்தப் பாடங்கள் மிகவும் தவறானவையாகும்.

## கொற்கை முத்து

பாண்டியருக்கு உரித்தானவை தென்கடல் முத்தும் தென் மலைச் சந்தனமும் என்பது நூல்களின் வாயிலாகத் தெளி வாகத் தெரிகின்றது.

பெரிப்புளூஸ் எனும் நூலிலும் பிளினி என்பார் எழுதிய நூலிலும் பாண்டியனின் கொற்கையில் முத்துக் குளித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. கொற்கையில் தண்டிக்கப்பட்ட குற்ற வாளிகளைக் கொண்டு முத்துக் குளிக்கப்பட்டது என்று பிளினி எழுதியுள்ளார். பிளினிக்கு முன்னர் மெகஸ்தனிசு என்பாரும் பாண்டியரின் முத்தைப்பற்றி எழுதியுள்ளார்.

## சோழநாட்டில் முத்து

பிளினி எழுதிய நூலில் சோழருடைய உறையூரில் முத்து விற்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. உறையூரில் விற்ற முத்து

சோழருக்கு 'பாக்' சந்தியிலிருந்து (Palk Straits) கிடைத்ததாகக் கூறியுள்ளார்.

ஈழநாடு அக்காலத்தில் சோழர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தால் ஈழநாட்டுக் கடற்கரையில் கிடைத்த நல்ல முத்துக்கள் காவிரிப்பூம்பட்டினத்திலும் உறையூரிலும் விற்கப்பட்டன என்று வெளி நாட்டறிஞர் எழுதினர்.

சிலப்பதிகாரமும் புகாரில் விற்ற மாசறு முத்தைப்பற்றிக் கூறியுள்ளது. மாதவி அணிந்த தூமணியாகிய முத்தைப் பற்றியும் 'கண்டிரன் முத்தைப்' பற்றியும் சிலப்பதிகாரம் கூறியுள்ளது. மதுரையில் வெள்ளை முத்தும் சிவந்த முத்தும் விற்கப்பட்டதும் கூறப்பட்டுள்ளது.

ஆதலின் பாண்டிய நாட்டில் மட்டுமின்றிச் சோழ நாட்டிலும் சங்க காலத்தில் முத்து மலிந்திருந்தது. இந்த முத்துக்களே முசிறி, தொண்டி ஆகிய துறைமுகங்களுக்குச் சென்று ஏற்றுமதியாயின.

கிரேக்க வணிகர் முசிறியிலும் தொண்டியிலும் சிறந்த முத்துக்களைப் பெற்றதாக 'பெரிப்புளுசு' நூல் குறிப்பிடுகிறது.

## கிரேக்கரின் முத்து ஆர்வம்

கிரேக்கர்களும் உரோமர்களும் தமிழ்நாட்டு முத்தினை எவ்வளவு விலையானாலும் கொடுத்து வாங்கினர். ஆயிரக் கணக்கான கல் தொலைவு கடந்து முத்தைத் தேடி அலைந்ததற்காகவும் அதற்காக உரோம நாட்டின் செல்வத்தை வீணாக்கியதற்காகவும் பிளினி சினத்துடன் உரோமப் பெருங்குடி மக்களைக் கடிந்து எழுதினார்.

காதுகளில் 'கிலிகிலி' என்று முத்தின் ஒலியைக் கேட்டு மகிழ்வதற்காகவே முத்தைக் காதணியாக அணிந்ததையும்,

செருப்பில் கூடத் தமிழ்நாட்டு முத்தை அணிந்து மகிழ்ந்ததை யும் கண்டு கிரேக்க அறிஞர் பிளினி வருந்தினார்.

## முத்து அணியப் பெற்ற முறைகள்

முத்தை இட்டுக் கிலிகிலியென்று ஒலிக்கும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தது என்பதை இது சார்பாகக் கவனிக்க வேண்டும்.

" நோன்பகட் டுமணர் ஒழுகை யொடு வந்த
மகாஅர் அன்ன மந்தி மடவோர்
நகாஅர் அன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கி
.......................................
.......................................
கிளர்பூட் புதல்வரொடு கிலிகிலி யாடுந்
தத்து நீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்"

—சிறுபாணாற்றுப்படை 55

குரங்குகள் கிளிசஞ்லில் முத்தை வைத்துக் கிலுகிலுப்பை போல உமட்டியரின் குழந்தைகளுக்கு ஆட்டிக் காட்டும் என்று கூறியுள்ளதைக் காணலாம். அந்த அளவு கொற்கையில் அக்காலத்தில் முத்துக்கள் மலிந்திருந்தன.

தமிழ் நாட்டு முத்தை உரோம அரசிகள் தலையிலும் கழுத்திலும் காதிலும் கைவிரல்களிலும் அணிந்திருந்ததாக அந்நாட்டினர் எழுதியுள்ளனர்.

நீரோ என்ற உரோமப் பேரரசன் படுக்கையிலும் செருப்பிலும் பந்தலிலும் தனது தாடியிலும் தமிழ்நாட்டு முத்தை அணிந்து மகிழ்ந்தான் என்று பிளினி கூறியுள்ளார். தான் அருந்தும் தமிழ்நாட்டு மதுவிலும் முத்தைக் கரைத்துக் குடித்தானாம் மன்னன் நீரோ.

உரோம அரசிகள் மூன்று வடமாக முத்துகளைக் கழுத்தில் அணிவது வழக்கமாக இருந்தது. காதிலும் கைவிரலிலும் அசைக்கும்போது ஒலிக்கும்படி அணிகலன்களில் பயன்படுத்தினராம். மூன்று வட முத்துமாலைகளைத் தமிழகத்திலிருந்து வாங்கினதாகவும் பிளினி கூறியுள்ளார்.

அகநானூறுத் தொகுதிக்கு நித்திலக் கோவை என்று பெயர் வழங்கியிருப்பதை இது சார்பாக எண்ணிப் பார்க்க வேண்டும். நூல் அறுமுத்தைப் பற்றிக் குறுந்தொகை (104) கூறியுள்ளது. "தண்கடற் பிறந்த முத்தின் ஆரமும்" என்று அகநானூறு (13) கூறியுள்ளது. முத்து அணி ஆரத்தைப் பற்றிக் கலித்தொகை (99) கூறியுள்ளது.

## முத்து மேகலை

மாதவி தனது இடையில் பெரிய முத்துக்களால் கோத்த முப்பத்திரண்டு வடத்தையுடைய விரிசிகை யென்கிற மேகலையை அணிந்திருந்தாள் என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார்; கழுத்தில் ஒரு காழ் முத்தம் - ஒற்றை வடம் - அணிந்திருந்ததையும் அவர் கூறியுள்ளார். ஆதலின் சங்க காலத்தில் முத்துமாலை தமிழகத்தில் மிகுந்திருந்தது.

முத்தில் துளைபோடும் தொழிலாளர் இருந்தனர். தோளா முத்தைப் பற்றியும் (அகம் 137), துளைமுத்தைப் பற்றியும் (அகம் 225) கூறியுள்ளதைக் காணலாம்.

முத்தைச் சிலம்பில் பரலாக வைத்து, அந்தச் சிலம் பொலியில் சங்க காலத்து மகளிர் மகிழ்த்தனர் என்பதும் தெரிகின்றது. ஆனால், இத்தகைய சிலம்பை உரோம அரசிகள் பயன்படுத்தவில்லை.

> " .............................. தெண்ணீர்
> முத்தரிப் பொன் சிலம்பு ஒலிப்பத் தத்துற்று "
> — நற்றிணை 110

இதிலிருந்து சங்க காலத்திலேயே முத்தைப் பரல் கற்களாகச் சிலம்பில் வைத்துச் சிலம்பொலி கேட்டு மகிழ்ந்தனர் என்று தெரிகிறது.

“புனைவினை ஆய்சிலம்பு எழுந்தார்ப்ப” என்று கலித்தொகை (59) கூறுவதையும் கவனிக்க வேண்டும்.

கண்ணகி, பாண்டிய அரசன் நெடுஞ்செழியன் முன்னர் வழக்குரைத்தபோது, ‘யாமுடைய சிலம்பு முத்துடை அரியே’ என்று பாண்டியன் கூறினான்.

சோழர்களுக்கும் அக்காலத்தில் இலங்கைக் கரையிலிருந்து முத்துக்கள் வந்தன என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறும் செய்திகளிலிருந்து தெளிவாகின்றது.

உரோமர் முத்துகளை இந்தியரைப் பின்பற்றி விலைமதிப்புப் போட்டனர் என்றும் பிளினி எழுதியுள்ளார்.

முற்காலத்தில் வைரத்துக்கு அடுத்ததாக-சிறந்த மணியாக முத்தையே மதித்தனர்.

கிளியோபாட்ரா என்ற அழகியான அரசிகூட சிறந்த முத்துகளை வைத்துக் கொண்டிருந்தாளாம்.

## பெயர்களில் முத்து

முத்து சிறியதாயினும் மணிகளின் அரசி என்று உரோமர்கள் கருதினர். உரோமர்கள் முத்தை எந்த அளவு போற்றினரென்றால் தங்களுடைய குழந்தைகளுக்கும் அன்புடன் வளர்த்த நாய்களுக்கும் முத்து (Margarita) என்ற பெயரை இட்டு அழைத்தார்கள். இந்தப் பெயரிடும் பழக்கம் தமிழருடைய பழக்கத்தை உரோமர் பின்பற்றியதால் வந்திருக்கலாம் என்று தோன்றுகின்றது. முத்து, முத்தன், முத்தையன்

என்ற பெயர்கள் மிகப் பரவலாகத் தமிழ் நாட்டில் வழங்குகிறது சில குடும்பங்களில் தலைக் குழைந்தைக்கு முத்து என்று பெயரிடுவது வழக்கம்.

" நோயிலை இவட்கென நொதுமலர் பழிக்குங்காற்
சிறுமுத்தனைப் பேணிச் சிறு சோறு மடுத்துநீ "

— கலி 59

" .............. குறுநிலக் கோமா னந்த
முத்தனை யன்றிப் பின்னை யாரையே முதன்மை
செய்தான் "

— வில்லிப்புத்தூரார் பாரதம், சூதுபோர் 14

தலைக் குழந்தை, அதுவும் ஆண் குழந்தை, முத்துபோலச் சிறந்தவன் என்று கருதும் வழக்கம் கலித்தொகையைப் பாடின காலத்திலிருந்தே இருந்தது என்பது தெளிவாகின்றது.

தலைக் குழந்தைக்கு முத்து, முத்தையன் என்ற பெயரிடும் வழக்கம் கொங்கு நாட்டிலும் எங்கள் வீட்டிலும் அண்மைக் காலம்வரை இருந்த பழக்கமாகும்.

ஆதலின் கலித்தொகையில் கூறப்பட்ட முத்தன் என்ற பெயர் வழக்கம் பண்டைப் பெயர் சூட்டு வழக்கம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உரோமர்களும் தமிழ் நாட்டுடன் சங்க காலத்தில் இருந்த வணிகத் தொடர்பால் தங்கள் குழந்தைகளை முத்தின் பெயரால் அழைத்தனர் என்று கருத வேண்டியுள்ளது.

பிற்காலத்தில் வைரத்தையும் முத்தையுமே சிறந்த மணிகளாக-உரோமரைப் போலவே-கருதினதால் 'வைர முத்து' என்ற பெயர்கள் தோன்றின.

தமிழ் நாட்டில் முத்தையே முதல் மணியாகக் கருதினர். ஏனென்றால் முத்துதான் தமிழ் நாட்டில் விளைந்த சிறந்த மணியாகும். அதனால்தான் படப்பாடலிலும்,

"முத்தான முத்தல்லவோ
முதலில் வந்த முத்தல்லவோ"

என்று வருகின்றது. கி. மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை முத்துதான் தமிழ் நாட்டின் சிறந்த மணி என்பதை உணர வேண்டும்.

சீனர்களின் நூல்களில் கி. மு. இரண்டாவது நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து முத்தையும், ...... அரிய மணிகளையும் பெற்று, பொன்னையும் பட்டையும் அவற்றுக்கு ஈடாக கொடுத்தது கூறப்பட்டுள்ளது.

## முத்து மீனாட்சி

மதுரையில் உள்ள மீனாட்சியம்மனுடன் தொடர்புபடுத்தி முத்து மீனாட்சி என்ற பெயர் வழங்கி வருவது தெரிந்ததே. மெகஸ்தனீஸ் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் எழுதிய நூலில் பாண்டியனின் மகனுடன் (Pandala) முத்தைத் தொடர்பு படுத்திக் கூறியது மிகவும் கவனிக்கத்தக்கது.

பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடற் புராணத்தில் தடாதகைப் பிராட்டியார் செழியர்பிரான் திருமகளாய்க் கலை பயின்று முடி புனைந்து செங்கோலாச்சி அரசளித்த பெண்ணரசியாகக் கூறியிருப்பதைப் பார்க்க வேண்டும். கி. மு. முதல் நூற்றாண்டுக்கு முன் மெகஸ்தனீஸ் கூறிய செய்தி உண்மையே என்பதை இடைக் காலத்து நூலாகுய திருவிளை யாடற்புராணம் கூறுவதிலிருந்து தெரிகின்றது. புராணங்கள் சில உண்மை வரலாற்றுச் செய்திகளை வைத்துக் கூறின என்பது தெரிகின்றது.

மெகஸ்தனீஸ் கூறிய செய்தியிலிருந்து, கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் பாண்டிய அரசி சிறப்பாக ஆண்டிருக்கின்றாள், அவள் நாட்டில் முத்து விளைந்தது என்பன தெளிவாகின்றன. அந்தப் பாண்டிய அரசியையே பிற்காலத்தில் முத்து மீனாட்சி என்று அழைத்துத் தெய்வமாக்கினர் என்று எண்ணலாம். ஆதலின் இந்தப் பெயர் இன்றும் பெண்களுக்குச் சூட்டப் பெறுகின்றது. பிற்கால நாயக்க மன்னர்களும் மீனாட்சியம்மனிடமிருந்து அரசுரிமை பெற்றதாகக் கூறிக் கொண்டதும் கவனிக்கத் தக்கது.

## ஒற்றைக் கிளிஞ்சல்

'பெரிப்புளூசு' நூல் குறிப்பிடும் ஒரு செய்தியிலிருந்து கிரேக்கர்கள் வலம்புரி முத்தையும் தமிழ்நாட்டிலிருந்து பெற்றிருப்பர் என்றே தெரிகின்றது. சோழ நாட்டுக் கடற்கரையிலிருந்து உறையூர்க்குச் சென்ற ஒரு வகை ஒற்றை யோட்டுக் கிளிஞ்சல் (Univalue) முத்தைப் பற்றிப் 'பெரிப்புளூசு' நூல் கூறியுள்ளது. இந்த முத்தும், கிளிஞ்சலும் சிறந்த துணிகளை (Muslins) ஏற்றுமதி செய்த உறையூரில் கிடைத்ததாகக் கூறியிருப்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

உறையூரை 'அர்கரு' (Argaru) என்று கிரேக்கர்கள் அழைத்தனர். உறையூரில் ஏற்றுமதியான மெல்லிய துணியை 'Argareitede' என்று அழைத்தனர். இந்தத் துணி சங்க நூல்களில் கூறப்படும் 'துகில்' என்ற மெல்லிய துணியாகலாம்.

உறையூர் அறுவை வாணிகன் என்ற புலவர் பெயர் சங்க நூல்களில் உள்ளது. ஆதலின் உறையூரில் விற்கப்பட்ட துணி சங்க காலத்திலேயே சிறப்புற்றிருந்தது என்பதில் ஐயமில்லை.

கிரேக்கர் இந்த முத்தை ஒருவகைக் கிளிஞ்சலின் பெயரால் (Molluse) அழைத்துள்ளனர். ஆனால் இஃது இரட்டை

ஓட்டையுடைய முத்துச் சிப்பியன்று; இந்த முத்து வலம்புரி முத்தாகவே இருக்க வேண்டும். இதில் ஐயமில்லை.

சோழ நாட்டுக் கோவலன் கண்ணகியை "மாசறு பொன்னே, வலம்புரி முத்தே" என்று அழைத்திருப்பதைக் காணலாம். அக்காலத்தார் வலம்புரி முத்தைப் பிற முத்திலும் மிகச் சிறந்ததாகக் கருதினர்.

" வலம்புரி முத்திற் குலம்பிரி பிறப்பும் " (ஆத்திரையான்- பொது) என்ற பாட்டு வரியிலிருந்து, வலம்புரி முத்தை முத்துக் குலத்திற் சிறந்த முத்து என்று கருதினரென்று தெரிகின்றது.

' மரபின் தூய்மை கூறுவார் வலம்புரி முத்தென்றார் ' என்று உரையாசிரியர் கூறியிருப்பதையும் கவனிக்கவேண்டும்.

ஒற்றைக் கிளிஞ்சலான சங்குகளிலும் அரிதாக முத்து தோன்றுவதுண்டு. ஆனால், இந்த முத்து உண்மையான முத்தன்று; தரத்திலும் குணத்திலும் தாழ்ந்த வகையாகும். இருப்பினும் சமயச் சார்பான காரணங்களாலும் பழங்குடி மக்களால் போற்றப்பட்டதாலும் வலம்புரிச் சங்கில் மிக அரிதாகப் பிறந்த முத்து மிகுந்த பெருமையுடையதாகவும் சிறந்ததாகவும் கருதப்பட்டது.

இந்த முத்து உண்மையாகவே, அறிவியற்படி சிறந்த முத்தாகாவிட்டாலும் செயற்கைக் காரணங்களால் மிகச் சிறப்புடையதாகக் கருதப்பட்டது.

## பிற்காலச் செய்தி

பாமாஸ் (Bahamas) என்ற தீவில் அண்மைக் காலத்தில் இத்தகைய சங்குமுத்து கிடைத்ததைப் பற்றி Hemingway என்ற சிறந்த நாவலாசிரியர் எழுதியுள்ளார். இந்த முத்துகளை இங்கிலாந்து அரசி மேரி மிகவும் விரும்பினதாக 'எமிங்வே'

என்ற ஆசிரியர் (Island in the Steam) என்ற புதினத்தில் எழுதியிருக்கிறார். இந்த முத்துகள் இளஞ் சிவப்பாகவும் பளபளப்பாகவும் இருந்ததாக எழுதியிருக்கிறார். இந்த முத்துகளைச் சங்கு முத்துகள் (Conch pearls) என்றழைப்பர்.

சங்குகளில் அரிதாகக் கிடைப்பது வலம்புரிச் சங்காகும். அந்த அரிய வலம்புரிச் சங்கில் கிடைத்த முத்து மிகமிக அரிதானதாகவும் தூய்மையானதாகவும் கருதப்பட்டது. இது சோழ நாட்டுக் கடற்கரையில் கிடைத்ததால்தான் உறையூரில் விற்கப்பட்டதாகத் தெரிகின்றது. இதையும் கிரேக்கர் வாங்கியிருக்கின்றனர்.

# வரலாற்றின் ஒளி வீச்சு!

## உண்மைச் செய்தி

ஆதலின், சிலப்பதிகாரம் கூறும் "வலம்புரி முத்து" கற்பனைச் செய்தியன்று.

கிரேக்கர்கள் சங்குகளையும் தமிழகத்திலிருந்து வாங்கினர் என்று கிரேக்க ஆசிரியர்கள் எழுதியுள்ளனர்.

சங்குகளை அறுத்து வளையல் செய்யும் தொழில் சங்க காலத்தில் இருந்ததைச் சங்க நூல்கள் கூறியுள்ளன.

சங்க நூல்களில் கொற்கையில் பிறந்த முத்தைப் பற்றியே பல செய்திகள் வருகின்றன. பதிற்றுப்பத்தில் மட்டுமே "பந்தர் பயந்த பயங்கெழு முத்தம்" என்ற செய்தி சொல்லப்பட்டுள்ளது. பந்தர் என்ற ஊரின் பெயரையோ, அது பயந்த முத்தையோ குறித்து வேறு எந்தச் சங்க நூல்களும் கூறவில்லை.

ஆனால், அறிஞர் மு. இராகவையங்கார் அர்த்த சாத்திரத் தில் கௌடில்யர் கூறிய மூன்று வகை முத்துகளைப்பற்றி எழுதியுள்ளார்;

தாம்ரபர்ணிக

பாண்ட்ய கவாடக

சூர்ணேய

என்ற மூன்றுவகை முத்துகளைப்பற்றி அவர் கூறியுள்ளார்.

'பாசிகா' என்ற ஊரும் அர்த்த சாத்திரத்தில் முத்து விற்ற ஊராகச் சொல்லப்பட்டுள்ளதையும், இந்த முத்துகளில் ''முக்தாயணி விபூஷிதம் யுக்தம் கவாடம் பாண்ட்யா நாம்'' என்று குறிப்பிட்டுள்ளதையும் அவர் கூறியுள்ளார்.

## பாண்டிய கவாடம்

ஆனால், பாண்டிய கவாடம், தாம்ரபர்ணியம் ஆகிய முத்துகளைப்பற்றி அவர் எழுதிய விளக்கம் தெளிவாக இல்லை. பாண்டிய கவாடம் என்பது பாண்டியரது வாயிற் கதவெனக் கொண்டு, இடைச் சங்க காலத்துப் பாண்டியரின் தலைநகராக இருந்த கபாடபுரம் என்று கூறி, அந்தத் துறைமுகப்பட்டினம் கடல் கோளால் அழிந்த பிறகு கொற்கையில் விளைந்த முத்தே 'தாம்ரபர்ணிகம்' எனப்பட்டது என்று கூறியுள்ளார். இதையே அறிஞர் மயிலை. சீனி வேங்கடசாமி அவர்களும் ஏற்றுக் கொண்டு, தாம்ரபர்ணிகம் சங்க நூல்களில் கூறப்பட்ட 'கொற்கை முத்து' என்று கொண்டுள்ளார். ஆனால், அது சரியான விளக்கம் என்று கருத முடியாது.

## அலைவாய் - ஆலவாய்

அலைவாய் என்ற தமிழ்ப் பெயரையே 'பாண்டிய கவாடம்' என்று வட மொழியில் மொழி பெயர்த்துள்ளனர். அலைவாய் என்பதே பாண்டியரின் தொன்மையான தலைநகரமாகும்.

அது கடல் கோளால் அழிந்த பிறகு, உள்நாட்டில், இப்போதுள்ள மதுரையில் புதிய தலைநகரத்தை நிறுவியபோது 'அலைவாய்' என்ற பழைய பெயரையே இட்டு வழங்கினர்.

ஆனால், பிற்காலத்தில் புராணங்கள் எழுந்தபோது 'ஆலவாய்' என்று தவறாகக்கொண்டு, 'பாம்பு மண்டலித்து வாயில் பற்றிய ஊரைச் சுற்றிய நகரம்' என்று விளக்கினர்.

இந்தப் புராணக் கருத்து பொருத்தமற்றது. அலைவாய் என்பதை ஆலவாய் என்று மாற்றிப் புராணக் கதை படைத்தனர்.

மீனவர்களிடையே கடற்கரையில் படகுகள் எளிதில் இறங்கக்கூடிய இடங்களை அலைவாய் என்று கூறும் வழக்கம் இன்றும் உள்ளது. ஆதலின் அலைவாய் என்ற பெயர் இன்றும் மீனவர் வழக்கில் உள்ளதாகும்.

அதுபோன்றே மீனவர்களின் 'தொண்டி' என்ற வழக்கைக் கடற்கரை ஓரத்தில் ஆழமான, பள்ளமான இடத்தைக் குறிக்கப் பயன்படுத்துவதைக் கேட்டிருக்கிறேன்.

பண்டைக் காலத்தில் அலைவாய், தொண்டி, புகார் என்ற துறைமுகத்தைக் குறித்த பொதுப் பெயர்கள், சிறப்பு வழக்காகச் சங்க காலத்தில் சில துறைமுகங்களைக் குறிப்பிட்டன என்பதைக் கவனிக்க வேண்டும்.

பாண்டியரின் பண்டை அலைவாய் அழிந்த பிறகு திருமுருகாற்றுப்படை எழுதப்பட்ட காலத்துத் திருச்செந்தூர், 'நாமனூர் அலைவாய்' என்று அழைக்கப்பட்டதைக் கவனிக்க வேண்டும்.

## தொண்டி

அதுபோலவே சங்க காலத்தில் மேற்குக் கடற்கரையில் தொண்டி என்ற துறைமுகப் பட்டினமும் பிற்காலத்தில் கிழக்குக் கடற்கரையில் தொண்டி என்ற பட்டினமும் இருந்ததைக் கவனிக்க வேண்டும்.

## கபாடபுரம்

'பாண்டிய கவாடம்' என்றது பாண்டியரது வாயிற்கதவு என்று சிலர் கொண்டனர். ஆனால், அது பொருத்தமற்றது என்று கருதி, கோவிந்தராசர் எழுதிய உரையான, "கபாடமென்ற பெயர் கொண்ட பாண்டிய நகரம்" என்ற விளக்கத்தை மு. இராகவையங்கார் வற்புறுத்தினார்.

திரு. ஐயங்கார் அவர்களும் கவாடம் என்பது அலைவாய் என்ற தமிழ்ப் பெயரில் உள்ள 'வாய்' என்ற சொல்லின் மொழி பெயர்ப்பே என்பதை உணரவில்லை. வாய், வாயில் என்ற சொற்கள் சங்க காலத்திலேயே ஊர்களுக்கு வழங்கியுள்ளன.

'கடம்பின் வாயில்' என்பது கடம்பர் வாழ்ந்த தென் கன்னடப் பகுதிக்குப் புகுமுகமாக இருந்த ஊரின் பெயராகச் சங்க நூல் கூறியதைக் கவனிக்க வேண்டும்.

'காண்ட வாயில்' என்ற ஊரும் சங்க நூல்களில் வரு கின்றது. இது இன்று நடுகாட்டில் மாண்ட வாயில் என்று வழங்கப்படும் கடற்கரை ஊராக இருக்கலாம்.

ஆதலின் அலைவாய் என்ற பாண்டியருக்கு உரிய கடற் கரைத் தலை நகரப் பட்டினத்தையே வடமொழியில் பாண்டிய கவாடம் என்று கௌடில்யரும், வால்மீகியும் மொழி பெயர்த்துக் கூறினர் என்பதில் ஐயமே யில்லை.

எனவே, பாண்டிய கவாடத்தில் விளைந்த முத்து பண்டைப் பாண்டியரின் அலைவாயில் பிறந்த முத்து ஆகும்.

மெகஸ்தனீஸ் காலத்திற்கு முன்னர் அலைவாயைப் 'பாண்டிய கவாடம்' என்றும், அலைவாய் அழிந்து கொற்கைத் துறை தோன்றிய சங்க காலத்தில் வடமொழியாளர் கொற்கை முத்தையும் பழைய பெயரால் அழைத்திருக்கலாம் என்றும் கொள்வதில் ஐயமில்லை.

ஆனால், தாம்ரபர்ணிகம் கொற்கை முத்து என்று இராகவ ஐயங்கார் எழுதியதோ, அதையொட்டி மயிலை சீனிவேங்கட சாமி அவர்கள் எழுதியதோ ஒப்புக்கொள்ளத் தக்க செய்திகளாய் இல்லை.

## தாம்ரபர்ணிகம்

'தாம்ரபர்ணிகம்' என்ற வடமொழி வழக்கு. சங்க காலத்தில் தமிழில் வழங்கவே யில்லை; தேவார காலத்திலும் வழங்க வில்லை.

ஆனால், வடமொழியிலும், பாலி மொழியிலும், சங்க காலத் திலும் அதற்கு முன்னரும், 'தாம்ரபர்ணிகம்' இலங்கையைக் குறித்து வழங்கியுள்ளது.

மெகஸ்தனீஸ் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் இலங்கை நாட்டை இந்தப் பெயரால் குறிப்பிட்டுள்ளார். அதற்குப் பின்னர் பௌத்த நூல்களில் 'தம்மப்பன்னி' என்றே இலங்கை நாடு குறிப்பிட்டுள்ளது.

கிறித்துவுக்கு முன்னரே பாலி மொழியில் இலங்கைத் தீவு தம்மப்பன்னி என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாமிரபர்ணி என்ற பெயரின் பாலிமொழி வழக்கே தம்மப் பன்னி என்பதாகும். ஆதலின் தாம்ரபர்ணிகம் என்ற முத்து, இலங்கை முத்து என்பதில் ஐயமே யில்லை. அதற்கேற்ப கிரேக்க, உரோம வரலாற்றுச் செய்திகளும், அறிவியல் செய்தி களும் தெளிவாகத் தாம்ரபர்ணிகம் என்ற முத்து இலங்கைக் கடற்கரையில் பாக் சலசந்தியில் (Palk Straits) கிடைத்த முத்தையே குறித்தன என்பதை உணர வேண்டும்.

## இரு துறைகள்

சங்க காலத்திலும், பிற்காலத்தில் இராசராசன், இராசேந்திரன் முதலிய சோழப் பேரரசர் காலத்திலும் இரண்டே இடங்களில்தான் முத்து விளைந்தது என்பதற்கு அறிவியல், வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

பாண்டிய நாட்டிற்கு அருகில் இருந்த மன்னார் வளைகுடாவிலும், இலங்கை நாட்டிற்கு அருகில் இருந்த பாக் சலசந்தியிலும் முத்து விளைந்ததாகப் பண்டை கிரேக்க, உரோம ஆசிரியர்கள் கூறியுள்ளனர்.

ஆதலின், பாண்டிய நாட்டில் கி. மு. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அலைவாய்ப்பட்டினத்தில் முத்து விளைந்தது. அந்த முத்தே பாண்டிய கவாடம் என்றழைக்கப்பட்டது. பின்னர் கொற்கையில் விளைந்த முத்தும் அதே பெயரால் அழைக்கப்பட்டது. 'தாம்ரபர்ணிக' என்ற முத்து இலங்கைக் கடற்கரையில் அகப்பட்டது. இந்த முத்து 'தாம்ரபர்ணிகம்' என்று அழைக்கப்பட்டது. இதை உணராது, இது கொற்கை முத்து என்று கூறினர்.

## ஆறும் பெயரும்

தாமிரபர்ணி என்று தமிழ்நாட்டு ஆற்றைக் குறிப்பிட்டது மிகப் பிற்கால வழக்காகும். இதன் பண்டைப் பெயர் 'தண் பொருநை' என்பதாகும். இந்த ஆறு கடலில் கலக்குமிடத்தில் கொற்கை இருந்தது. தாமிரபர்ணி என்ற ஆற்றின் பிற்காலப் பெயரை வைத்துக் கொண்டு, வால்மீகி கூறிய தாம்ரபர்ணிகம் என்ற முத்தின் பெயர், தாம்ரபர்ணி ஆறு கடலில் கலக்கும் ஊரான கொற்கை முத்து என்று கூறினர்.

## முத்தும் சோழரும்

சங்க காலத்திலேயே கரிகாற் சோழன் ஈழ நாட்டைவென்று, ஈழ நாட்டுக் குடிகளை அடிமையாக்கி, காவிரிக் கரையை உயர்த்

தினான் என்று கூறப்படும் மரபுச் செய்தியையும் கவனிக்க வேண்டும். வரலாற்று அறிஞர்கள் கரிகாலன் காலத்திலேயே ஈழ நாட்டு வடக்குப் பகுதி சோழ அரசாட்சிக்கு உட்பட்டிருந்தது என்று கூறியிருக்கின்றனர்.

சோழர்கள் சங்க காலத்திலும், இராசராசன், இராசேந்திர சோழன் காலத்திலும் இலங்கை நாட்டைத் தங்களாட்சிக்குள் வைத்துக்கொள்ளப் போரிட்டதற்கு முக்கியமான காரணம் ஈழ நாட்டுக் கடற்கரையில் (Palk Stright) விளைந்த முத்தின் விலை மதிப்பே என்பதை வரலாற்று அறிஞர் சிலர் கூறியுள்ளனர்.

மேலை நாட்டில் முத்தை விற்றுப் பெரும்பொருள் பெறுவதற்காகவே சோழ மன்னர்கள் ஈழ நாட்டு வடக்குப் பகுதியைத் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்துவதில் முனைந்து நின்றனர்.

அறிவியல் அடிப்படையாகவும் வெளிநாட்டு வரலாற்றுச் செய்திகளின் அடிப்படையாகவும் பார்க்கும்போது, சங்க காலத்தில், முத்து பாண்டிய நாட்டுக் கடற்கரைக்கு அருகிலும் ஈழ நாட்டு வடகடற்கரையின் அருகிலுமே விளைந்தது என்பதில் ஐயமே யில்லை.

## ஏற்றுமதி மட்டுமே

சேர நாட்டுக் கடற்கரை அருகிலோ, சோழ நாட்டுக் கடற்கரை அருகிலோ உண்மையாக முத்து விளையவில்லை, பிறக்கவில்லை என்பதை உணர வேண்டும்.

முத்து ஏற்றுமதியான துறைமுகத்தை முத்து விளைந்த இடமாகக் கருதும் வழக்கம் கிரேக்க, உரோம ஆசிரியர்கள் எழுதிய நூல்களிலும், வடமொழி ஆசிரியர் எழுதிய நூல்களிலும் சங்க நூல்களிலும் காணப்படுவதாகும். அதை வைத்துக் கொண்டு, முத்து 'ஏற்றுமதி'யான துறைமுகத்தை முத்து 'விளைந்த' இடமாகக் கூறுவது தவறு.

## பந்தர் - விளக்கம்

அறிஞர் மயிலை. சீனி வேங்கடசாமி 'பந்தர் பயந்த பயங்கெழு முத்தம்' என்று வரும் பதிற்றுப்பத்து வரியில் காணப் படும் 'பந்தர்' என்பது முசிறிக்கருகில் இருந்தது என்று கொண்டார். ஆனால், பந்தர் என்ற அரபுச் சொல் அக்காலத்தில் சங்கத் தமிழில் நுழைந்ததாகக் கருத முடியவில்லை.

முசிறியில் முத்து ஏற்றுமதியானதற்குச் சான்று இருப்பினும் முசிறிக்கு அருகில் பந்தர் என்ற இடம் இருந்ததற்குச் சான்று இல்லை.

பந்தர் என்ற பெயர் முத்துகள் விற்கப்பட்ட பெரிய அங்காடியாக இருந்திருக்கலாம். அந்த அங்காடி, பந்தலுக் கடியில் இருந்திருக்கலாம். ஆதலின், அந்த இடத்திற்கோ - ஊருக்கோ பந்தர் என்ற பெயர் வந்திருக்கலாம். பதிற்றுப்பத்தே 'நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்' (55-4) என்று கூறியுள்ளது. பந்தர் என்ற சொல் பண்டகசாலை என்ற பொருளில் பயின்று வந்திருப்பதைக் காணலாம்.

முத்து துஞ்சிய பந்தரே, முத்து நிறைந்த பண்டகசாலை இருந்த ஊரே, பந்தர் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். அந்த ஊரை முசிறியினின்று வேறு ஊராகக் கருதலாம்.

ஒருவகைக் கோமேதகக் கற்கள் (Zircon) பந்தர்பெஸ் 'Pantarbas' என்ற இந்தியப் பெயருடன் வழங்கப்பட்டதாகப் பிளினி எழுதியுள்ளார். வேறு சில மேலைநாட்டு ஆசிரியர் களும் இந்தக் கல்லை இதே பெயருடன் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தப் பெயர் ஓர் இந்திய மொழிப் பெயரிலிருந்து வந்ததாக வார்மிங்டன் என்ற வரலாற்று ஆசிரியர் எழுதியுள்ளார் *

---

* Pantarbers may be a eorruption of an Indian word - Footnote (84) - "The Commerce between the Roman Empire and India" by E. H. Warmington.

இந்த 'பந்தர் பெஸ்' என்ற பெயர், பதிற்றுப் பத்து கூறிய பந்தர் என்ற ஊர்ப் பெயருடன் மிகவும் ஒத்துள்ளதைக் காண லாம். இந்த ஊரிலேயிருந்து கோமேதகமும் ஏற்றுமதியான தாய்ப் பிளினி கூறியுள்ளதால் இவ்வூரே பதிற்றுப்பத்து கூறிய பந்தர் என்று தெரிகின்றது.

## பந்தலாயினிக் கொல்லம்

பந்தர் என்ற ஊர் பந்தலாயினிக் கொல்லமாக இருக்கலாம். இந்த ஊரின் முற்காலத்துப் பெயர் பந்தர் என்று தெளிவாகத் தெரிகின்றது. Friar Odoric என்ற பாதிரியார் 1321ஆம் ஆண்டு பம்பாய்க்கு அருகில் இருந்த 'தானா' என்ற ஊரிலி ருந்து புறப்பட்டு பந்தராணி, கொடுங்கொளூர், கொல்லம் ஆகிய துறைமுகங்கள் வழியாக இலங்கைக்கும் சென்னை-மயிலை தோமையார் ஆலயத்துக்கும் சென்றதாக எழுதியுள்ளார்.

1296இல் எழுதிய சீன அரசாங்கக் குறிப்பிலும் மாபாருக்கும் (தமிழகம்) சொல்லத்திற்கும் பந்தரினா (Fandarina) என்ற ஊர்க்கும் சீன நாட்டிலிருந்து பெண் ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.*

ஆதலின் இடைக்காலத்தில் பந்தர் என்ற பெயரால் வெளி நாட்டுக்காரர்களால் அழைக்கப்பட்ட துறைமுகமே பந்தர் என்று பதிற்றுப்பத்தில் கூறப்பட்ட ஊராகக் கருதலாம்.

## புதிய கொல்லம்

மிகப் பிற்காலத்தில் தெற்கு மலையாளத்தில் இருந்த கொல்லத்தை ஒட்டி, வடக்கு மலையாளத்தில் இருந்த பந்தர் என்ற துறைமுகத்திற்கும் கொல்லம் என்ற பெயர் சூட்டப்பட்ட தால் அதை வேற்றுமைப்படுத்திக் கூறப் 'பந்தல் ஆயின கொல்லம்' என்ற பொருளில் 'பந்தலாயினிக் கொல்லம்' என்று அழைத்தனர்.

---

* Foreign Notices of South India'—K.A.N.

தென் மலையாளக் கொல்லத்தில் இருந்து பந்தரில் குடியேறிய சில நாயர் தலைவர்கள், கொல்லம் என்று இந்தப் புதிய ஊருக்குப் பெயரிட்டதாக மலையாளப் பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன.

இந்தப் பந்தலாயினிக் கொல்லத்தை இன்று'கொயிலாண்டி' என்று அழைக்கின்றனர். கள்ளிக் கோட்டைக்கு அருகில் இவ்வூர் உள்ளது.

சில வரலாற்று ஆசிரியர்கள் இதையே சேரநாட்டுத் தொண்டியாகக் கொண்டனர். நெல்கிண்டா (Nelcynda) என்று மேல் நாட்டு ஆசிரியர்கள் குறிப்பிட்ட துறைமுகம் இதுவாகவே இருக்கலாம் என்று கூறினர். ஆனால், வரலாற்று ஆசிரியர்கள் சிலர் இதை ஒப்புக்கொள்ளவில்லை. இந்தக் கொயிலாண்டிக்கருகில்தான் வாஸ்கோடகாமா வந்து இறங்கிய தாகக் கூறுவர். இறங்கின இடம் இன்றும் சுட்டிக் காட்டப்படு கின்றது.

பந்தர் என்ற சேரநாட்டுத் துறைமுகம் 'பந்தலாயினிக்' கொல்லமாகவே இருக்கலாம். இது முசிறி என்று கருதச் சான்று யாதும் இல்லை.

# ஆய்வுப் பயன்!

## தெளிந்த முடிவு

சங்க காலத்தில் தமிழ் நாட்டுச் செய்திகளை எழுதின கிரேக்க, உரோம ஆசிரியர்கள் முசிறி, காவிரிப்பூம்பட்டினம், உறையூர் ஆகிய ஊர்களில் முத்து சிறப்பாக விற்கப்பட்டதைக் கூறியுள்ளனர். 'பந்தர் பயந்த பயங்கெழு முத்தம்' என்பது 'பந்தரில் ஏற்றுமதியான முத்தம்' என்று கருதப்பட வேண்டும். தவிர, பந்தர் என்ற முசிறித் துறைமுகத்தில் விளைந்த முத்து என்று கருதுவதற்குச் சான்று இல்லை.

சங்க காலததில் கொற்கையிலும், அதையொட்டி இருந்த கடற்கரையிலும், ஈழ நாட்டுக் கடற்கரையிலுமே முத்து விளைந்தது என்பது கிரேக்க, உரோம ஆசிரியர்களின் செய்தி களிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது.

அர்த்த சாஸ்திரத்தில், சௌர்ணேயம் என்று கூறிய முத்து பெரியாறாகிய 'சூர்ணியாறு' என்ற பெயரால் வந்தது என்று அறிஞர் மு. இராகவையங்காரும் அவரைப் பின்பற்றி மயிலை சீனி வேங்கடசாமி அவர்களும் எழுதினார்கள். ஆனால், வரலாற்றுப்படியோ அறிவியல்படியோ சேர நாட்டில் கடற்கரை யில் முத்து விளையவில்லை என்பது முக்கியமான செய்தி யாகும்.

சேர நாட்டுத் துறைமுகமான முசிறியில் பாண்டிய நாட்டில் விளைந்த முத்தும், சோழ அரசாட்சிக்கு உட்பட்ட 'பாக்' சலசந்தியில் விளைந்த முத்தும் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பது மேல்நாட்டு அறிஞர்களின் நூல்களிலிருந்து தெரிகின்றது.

## மொழி - மாற்றம்

சூர்ணியாறு என்ற பேரியாற்றின் பெயர், அகநானூற்றில் வழங்கிய 'சுள்ளியம் பேர்யாறு' என்ற பெயரின் மொழி பெயர்ப்பு என்று அறிஞர் மு. இராகவையங்கார் கூறியுள்ளது மிகவும் பொருத்தமானதாகும்.

> "..............சேரலர்
> சுள்ளியம் பேர்யாற்று வெண்ணுரை கலங்க"
>
> —அகம் 146

சுள்ளி என்ற தமிழ்ச் சொல்லே 'சூர்ணி' என்று வடமொழியில் மாற்றப்பட்டுப் பின்னர் சௌர்ணேயம் என்றும், கௌர்ணேயம் என்றும் மாறிற்று என்று சீனி வேங்கடசாமி அவர்கள் கூறுவர். பேரியாறு என்ற பெயர் பிறஆறுகளுக்கும் இருந்ததால், முசிறியில் கலந்த பேரியாற்றைச் சுள்ளியம் பேரியாறு என்று சங்க காலத்தில் அழைத்தனர்.

## பேராறு - சிற்றாறு

மகாநதி என்ற ஆறு வடநாட்டில் உள்ளது. ஆனால் இத்த ஆற்றின் பெயர், பெரியாறு என்ற பெயரின் வடமொழி பெயர்ப்பே அன்றி வேறன்று. பெரிய ஆறுகளைப் பெரியாறு என்பது ஆரியர்க்கு முற்பட்ட பெயர் வழங்கும் மரபாகக் கருதவேண்டும். அது போன்றே சிறிய ஆறுகளைக் சிற்றாறு என்று வழங்கும் மரபையும் காணலாம்.

ஆந்திர நாட்டில் ஓடும் கிருஷ்ணா நதி தெலுங்குக் கல்வெட்டுகளில் பேரேறு (Pereru) என்றும், தமிழ்க் கல்வெட்டு களில் பேராறு என்றும் வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம். பேராறு என்று கூறும் வழக்கு சங்க காலத்தில் வேறு ஆறுகளுக் கும் இருந்திருக்கும்.

## பேர் யாறு

பிற பேராறுகளில் இருந்து முசிறியில் கலந்த பேராற்றைப் பிரித்துக் காட்டவே சுள்ளியம் பேர்யாறு என்று அழைத்தனர்,

சுள்ளி என்பதை 'சூர்ணி' என்று மொழி பெயர்த்தனர் என்பது பொருத்தமேயாகும். சுள்ளி என்பது ஒருவகை முட் செடி. மலையாளத்தில் இப்பெயர் வழங்குகின்றது. இந்தச் செடி ஆற்றங்கரையில் மண்டிக் கிடந்ததால் சுள்ளியம் பேர்யாறு என்ற பெயர் பெற்றது.

அது போன்றே பிற்காலத்தில் மலையாளத்தில் பெரியாறு என்பதைப் 'பூர்ணவாகினி' என்று மொழி பெயர்த்தனர்.

முசிறியில் முத்து விளைந்ததற்குச் சான்றுகள் இல்லை. ஆதலின் முசிறியில் ஏற்றுமதியான முத்தையே சுள்ளியாற்றின் பெயரால் சௌர்ணேயம் என்று அழைத்தனர். ஆனால், இந்த முத்துகள் பாண்டி நாட்டிலிருந்தும், சோழ நாட்டிலிருந்தும் தரை வழியாக வந்தவை; முசிறி வழியாக ஏற்றுமதியானவை.

## மிளகு - மரீசி

முசிறியில் மிளகு மிகுதியாக ஏற்றுமதியானதால் மிளகை 'மரீசி' என்று முசிறியின் பெயரால் அழைத்ததை மு. இராகவ ஐயங்கார் குறிப்பிட்டுள்ளார். அது போன்றே சுள்ளியாறு கலக்கும் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியான முத்தைச் 'சௌர்ணேயம்' என்று அழைத்தனர்.

சங்க காலத்திலேயே முசிறி என்ற பெயரின் மாற்றமான 'மரீசி' என்ற மிளகின் பெயர் வணிகப் பெயராக (Trade name) மாறி விட்டது. அதனாலே இந்த வணிகப் பெயர் சங்கத் தமிழிலும் வழங்கியுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

"சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியற்
புணர்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறுத்து"

பெரிய பலாப்பழத்தைப் போன்ற மூட்டைகளில் மிரியல் (மிளகு) பாரத்தைக் கழுதைகள் தாங்கிக் கொண்டு சென்ற சாத்து என்று பட்டினப்பாலை கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

மிளகு சென்ற பெரு வழிகளில் சுங்க வரி விதிக்கப்பட்டிருந்தது. வரியை ஏய்க்கக் கவர்த்த - கள்ள - வழிகளில் சென்றாலும் காவலர் காத்து வரியை வாங்கினர் என்று கூறியதைக் கவனிக்க வேண்டும்.

## பெயர்கள் பிறந்த வழி

வடமொழி வணிகப் பெயரான மரீசி என்பதே மிரியல் என்று சங்கத் தமிழில் வழங்கியுள்ளது.* ஏற்றுமதி, இறக்குமதியாகும் ஊரின் பெயரால் வணிகப் பொருள்களை அழைப்பது ஒரு வழக்கமாகும்.

முந்திரிக் கொட்டையைப் போர்த்துகீசியர் முதலில் கொல்லத்தின் வழியாக இந்தியாவிற்கு இறக்குமதி செய்ததால் 'கொல்லம் அண்டி' என்று மலையாளத்தில் அழைத்தனர்.

பச்சை மிளகாய் வெளிநாட்டிலிருந்து போர்த்துகீசியர்களால் கொல்லத்தின் வழியாக இறக்குமதி செய்யப்பட்டது. அதனால் 'கொல்லம் மிளகு' என்று அது அழைக்கப்பட்டது.

---

* மெரியாலு என்ற தெலுங்குச் சொல் மிளகைக் குறிக்கும்.

தமிழ்நாட்டு மிளகிற்கு மாற்றாக இந்தக் காயைப் பயன் படுத்தியதால்தான் தமிழில் 'மிளகாய்' என்று அழைக்கப் பட்டது.

அது போன்றே சுள்ளியாறு வழியாக முசிறித் துறைமுகத் தில் ஏற்றுமதியான முத்து 'சௌர்ணேயம்' (கௌர்ணேயம்) என்றழைக்கப்பட்டது என்று கொள்வதே பொருத்தமாகும்.

தாலமி என்ற உரோம ஆசிரியர் தமிழ்நாட்டில் சூசிக் கரை முத்து கிடைத்ததாகக் கூறியுள்ளார். அந்த சூசிக்கரையைத் தூத்துக்குடி என்று கருதுவர்.

## முத்து பிறக்கும் இடங்கள்

திருவிளையாடற் புராணத்திலும், கல்லாடத்திலும், சோழர் காலக் கல்வெட்டுகளிலும், முத்தின் குணங்களும் குற்றங்களும் கூறப்பட்டுள்ளன.

முத்து பிறக்கும் இடங்களாகச் சங்கு, மூங்கில், யானைத் தந்தம், பன்றிக் கொம்பு, பாம்பின் தலை, கொக்கின் கழுத்து, கமுகு போன்ற இருபது இடங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால் அவை எல்லாம் வெறும் புராணச் செய்திகளேயாகும். கரும்பில் முத்து விளைவதாகக் கூறுவதும் உண்மைச் செய்தியன்று.

சங்கில் முத்து விளைவது உண்டு. மற்றவை உண்மையற்ற கற்பனைச் செய்திகளாகும்.

## யானையிடம் முத்தா ?

யானைத் தந்தத்தில் முத்து விளைவதாகக் கூறினதற்கு ஒரு காரணம் உண்டு.

'முத்து படமுற்றிய உயர் மருப்பு'

—புறம் 161

என்றும்,

'வெண்கோடு பயந்த ஒளிதிகழ் முத்தம்'
—புறம் 170

என்றும் கூறியுள்ளது.

"முத்துடை மருப்பின் மழகளிறு மிளிற"
—பதிற்று 32

"பெருங்களிற்று முத்துடை வான்கோடு"
—முருகு

"யானை முத்தார் மருப்பு"
—குறிஞ்சி 35

"யானை முத்துடை மருப்பின்"
—மலைபடு 517

என்று சங்க நூல்கள் கூறியுள்ளன.

"வேழத்தின் வெண் மருப்பினைக் கீழ்ந்து
சிங்கங் குருகுண்ண முத்துதிரும்"

என்று திருஞானசம்பந்தர் (250-9) கூறியுள்ளார்.

இயற்கையில் யானை வாழும் சூழலில் சிங்கம் வாழ்வதில்லை. ஆதலின் இது கற்பனைச் செய்தியே.

சில யானைத் தந்தங்களில் அரிதாக, உருண்டையாக முண்டு (மணி) இருப்பதுண்டு. யானைத் தந்தத்தை வெட்டுவோர் இந்த உருண்டையை முத்து என்று கருதினர். யானையின் தந்தம் பொதுவாக வாழைத் தண்டுபோல உரிஉரியாக இணைந்திருக்கும். அரிதாக, உள்ளே கெட்டியாக-உருண்டையாக இருப்பதை முத்து என்று கொண்டனர். இந்த முத்து அவ்வளவு சிறந்ததன்றாதலால் விறலியர்க்கு அரசன் பரிசிலாகக் கொடுத்ததாகப் புறநானூறு கூறியுள்ளது.

பழங்காலத்திலேயே தந்தத்தையும் விலையுயர்ந்த மணி போலவே மதித்துள்ளனர். இது போன்று பன்றிக் கொம்பின் தந்தத்திலும் இருக்கலாம். அதனால் பிற்காலத்தில் பன்றிக் கொம்பிலும் முத்து பிறந்ததாகக் கூறினர்.

## மூங்கிலில் முத்து

மூங்கிலில் முத்து பிறந்ததாகக் கூறினதற்கும் ஒரு விளக்கம் காணப்படுகின்றது. மூங்கிலில் அரிதாகக் கல் போன்றதொரு பொருள் (Tabashir) கிடைக்கின்றது. இது கெட்டியான வெண் மணல் போலத் தோன்றுகின்றது. இதையே மூங்கில் முத்து என்று கருதினர்.

இதைச் சிறந்த மருந்தாகவும் கிழக்கு ஆசியாவில் கருதுவர். ஆனால், இதுவும் உண்மையான முத்து இல்லை.

கரும்பு முதலிய பிற பொருள்களில் இருந்து முத்து உண்டாகும் என்பதெல்லாம் வெறும் கற்பனைச் செய்திகளேயாம். அவை பிற்கால வடமொழிப் புராணங்களிலிருந்து தமிழில் புகுந்தன எனலாம்.

சங்க காலத்திலேயே 'மிசைப் பெய்த நீர் கடற் பரந்து முத்தாகுந்து' என்று புறநானூறு பாடல் (380) கூறியுள்ளது. மழைத்துளி வாய் திறந்த சிப்பியில் விழுந்து முத்தாகும் என்ற கருத்து தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்றது. பிளினி என்ற ஆசிரியரும் இக் கருத்தை எழுதி யிருப்பதால் தமிழ்நாட்டிலிருந்தே அவர் இக்கருத்தைப் பெற்றிருப்பார்.

## கல்வெட்டில் காணும் முத்துகள்

சோழர் காலத்துக் கல்வெட்டுகளில்

வட்டம்

அனுவட்டம்

ஒப்புமுத்து

குறுமுத்து
நிம்போளம்
பயிட்டம்
அம்புமுது
கரடு
இரட்டை
சப்பத்தி
சக்கத்து
குளிர்ந்த நீர்
சிவந்த நீர்

என்று பல முத்து வகைகள் கூறப்பட்டுள்ளன.

குறுமுத்து என்பது தற்காலத்தில் (Seed Pearls) என்று சொல்லப்படுவதாகும்.

நல்ல உருண்டையான முத்து 'வட்டம்' என்று அழைக்கப் பட்டுள்ளது. இந்த முத்துகள், முத்துச் சிப்பியின் ஓட்டோடு ஒட்டியில்லாது சதையில் பதிந்திருக்கும் என்பர். 'கரடு' என்பது Warty pearl எனப்படுவதாகும். இதை முத்து வணிகர்கள் Cogde perie என்றழைப்பர்.

பொதுவாக வட்டமில்லாத முத்துகளை barroc pearls என்றழைப்பர். இந்த வகைகளைச் சேர்ந்தவற்றையும் சோழர் காலத்துக் கல்வெட்டு வகைப்படுத்திக் கூறியிருப்பதாகக் கருத லாம். ஆனால், அவற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளப் போதிய சான்றுகள் இன்று இல்லை.

சோழர் கல்வெட்டுகளில் கூறிய முத்துகளில் 'வட்டம்' என்ற முத்தும், 'குளிர்ந்த நீர்' என்ற முத்தும் சங்க நூல்களி லேயே கூறப்பட்டுள்ளன என்று கருத இடமுண்டு.

"வெருகிருள் நோக்கி அன்ன கதிர்விடு
பொருகாழ் முத்தம் இடைமுலை விளங்க"
—அகம் 73

காட்டுப்பூனை இருளில் நோக்கும்போது கண் முழுவட்டமாக ஒளிரும் என்று கூறுவர். ஆதலின் இருளில் காட்டுப் பூனை நோக்கும்போது தோன்றும் கண் என்று கூறப் பட்டுள்ளது.

முழு வட்டமான உயர்ந்த முத்தை ஒரு வடத்தில் அணிவதை உரோமரும் சிறப்பாகக் கருதினரென்று தெரிகின்றது.

"மாடவெண் புறவின் முட்டை"
"வடிவெனத் திரண்ட பேழ்வாய்"
"கோடு கொள் முத்தம் வெள்ளை நிறத்தன"

என்று திருவிளையாடற் புராணம் கூறுவதைக் காணலாம். மாடப்புறாவின் முட்டை போன்று நீண்ட வட்டவடிவமான முத்தையும் போற்றினர். 'இவர் திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்' (அகம் 130) என்று சங்கநூல் கூறுவதால் சோழர் காலத்து, குளிர்ந்தநீர் முத்து 'ஈர்ங்கதிர் முத்தம்' என்று கூறப்பட்டிருப்பதாகக் கொள்ள வேண்டும்.

தூய வெள்ளையான வட்ட வடிவ முத்து 'சந்திர குரு' என்றும், சிவந்த நீர் முத்து 'அங்காரகன்' என்றும் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## ஆணிமுத்து

முத்தின் குற்றமாகக்

| | |
|---|---|
| காற்றேறு | கல்லேறு |
| மணலேறு | நீர்நிலை |

என்பன கூறப்பட்டுள்ளன. முழு வட்டமான முத்தையே ஆணி முத்து என்று கூறினர் எனத் தெரிகின்றது.

சங்க காலத்திலேயே முத்தைத் துளை யிடவும், மாலைகளாகச் செய்யவும், முத்தையே அணிகலனாக அணியவும் தெரிந்திருந்தனர்.

## கருமுத்து

பிற்காலத்தில், கருமுத்து சிறப்பானதாகக் கருதப்பட்டது. கருமுத்தன், கருமுத்து என்ற பெயர்களைச் சூடிக்கொள்ளும் பழக்கம் வந்தது.

கருமுத்து, மெக்ஸிகோ வளைகுடாவில் மிகுதியாக விளைகிறது. கி.மு. 1700 ஆம் ஆண்டிற்கு முன்னரே இந்திய வணிகர் 'ஊர்' (Ur) என்ற சுமேரியர்களின் நகரத்திற்கு நகைகளையும், மீன் கண்கள் எனப்படும் முத்தையும் ஏற்றுமதி செய்தனர் என்று ஓர் ஆராய்ச்சியாளர் கூறுவார். (Ornaments and Jewellery in proto Historic India - M. Pezhard). இந்த முத்து தமிழ் நாட்டிலிருந்துதான் சென்றிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆதலின் தமிழ் நாட்டில் முத்தெடுக்கும் தொழில் கி.மு. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இருந்திருக்க வேண்டும்.

## தமிழ்ப் பெயரே

முத்து என்ற பெயர் வடமொழியில் உள்ள 'முக்தா' என்ற சொல்லிலிருந்து வந்ததாக அறிஞர் சிலர் கூறுவர். இந்தியாவில் தமிழ் நாட்டிலேதான் சிறந்த முத்து மிகுதியாகப் பண்டைக் காலந்தொட்டுக் கிடைத்தமையால், முத்து என்ற தமிழ்ப் பெயரையே வட மொழியாளர் பயன்படுத்தினர் என்று கொள்ள வேண்டும். நித்திலம் என்ற பெயரும் முத்திற்கு வழங்கியுள்ளது

மலையாளத்தில் 'இத்தில்' என்ற பெயர் தட்டையான இரட்டையோட்டுக் கிளிஞ்சலுக்கு வழங்குகின்றது. இத்தில் முள்ளன் என்ற பெயர் மலையாளத்தில் நலுங்கை (அழுங்கு) அஃதாவது எறும்பு தின்னி என்ற விலங்கைக் குறிக்கும்.

இத்தில் கிளிஞ்சல் போன்ற அழுங்கின் முதுகில் முட் செதில்கள் உள்ளதால் 'இத்தில் முள்ளன்' என்றழைத்தனர்.

முற்றில் என்ற பெயர் சிறுமுறம் போன்ற இரட்டையோட்டுக் கிளிஞ்சலைக் குறிக்கின்றது.

முரு (முறு) என்ற சொல் மலையாளத்தில் இரட்டை யோட்டுக் கிளிஞ்சலைக் குறித்து இன்றும் வழங்குகின்றது.

இந்தப் பெயர்களையெல்லாம் கவனிக்கும் போது நித்திலம் என்ற பெயர் 'நித்தில்' என்று இருந்திருக்க வேண்டும். அது போன்றே முத்து என்ற பெயரின் பழைய உருவம் 'முத்தில்' என்று இருந்திருக்கலாம். முத்து, முத்தல், மொத்தை என்ற சொற்களின் அடிப்படைப் பொருள் உருண்டை, திரட்சி என்ப தாகும். திரண்ட உருவை உடையதால் முத்தில், முத்து என்று பெயரிட்டழைத்திருக்கலாம்.

முற்றில் என்ற இரட்டைக் கிளிஞ்சலின் பெயரே முத்தில், முத்து என்று மாறியும் இருக்கலாம். ஆனால், முத்து என்ற பெயர் வடமொழியிலிருந்து வந்ததாகச் சொல்வது வரலாற்று அறிவிற்கோ, அறிவியல் அறிவுக்கோ, பகுத்தறிவுக்கோ பொருத்தமற்றது என்று உறுதியாகக் கூறலாம்.

முத்தை நிகண்டுகளில்,

நித்திலம்
சங்கீன்ற பிள்ளை
ஆழி வித்து

என்றும் அழைத்தனர். இதில் சங்கீன்ற பிள்ளை என்பது வலம்புரி முத்தாகலாம்.

# குறிப்பு

குறிப்பு

# இணைப்பு

## மணிக் கலம்

1. இந்தியாவிலிருந்து வந்த பெரிய மணிகளில் இருந்து மதுவருந்தவும், உணவு உண்ணவும் கலங்கள் செய்ததைப் பற்றியும், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்ததைப் பற்றியும் உரோம ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

> Common garnets are often found is large pieces and in India small dishes are carved out of them. The Romans must have traded in that for Pliny speak of cups cut out of Lychnis and vessels out of Indian carbunculi.

'மணிக்கலத்தன்ன ஆயிதழ் நெய்தல்' என்று பதிற்றுப் பத்து (30-2) கூறுவதைக் காணலாம். மணியால் செய்த பாத்திரம் என்று கூறப்பட்டுள்ளது. 'நீல உண்மணிக் கோலக் குழிசி' என்று பெருங்கதை (2-6 வரி 68) கூறுவதிலிருந்து குடம் போன்ற பாத்திரத்தை நீலமணியில் செய்தனர் என்று தெரிகின்றது. ஆதலின் உரோம ஆசிரியர்கள் கூறியது உண்மையான செய்தியே என்பதைத் தமிழ் நூல்கள் காட்டுகின்றன.

'சிறு விலை பெறுமணிகள்' என்று திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. கரிய கம்பளத்தில் பதுமராகத்

தையும் ஏனை எட்டுத் திசைகளில் எண்வகை இரத்தினங்களை யும் வைத்தனர். நவமணி விற்போர் கம்பளத்தைப் பரப்பிக் கீழ்த்திசை நோக்கியிருத்தல் மரபு என்று கூறும் செய்திகள் அக்காலத்துப் பழக்கத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. மாணிக்கம், முத்து, வைரம், மரகதம், நீலம் ஆகிய இவை சிறிய விலையுள்ளன என்று திருவிளையாடற் புராண உரை கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

சிறு விலை மணிக்கெதிராக 'அருவிலை நன்மணி'யும் செழு மணிக்காரர் குழுவினையும் பெருங்கதை கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும் சிறு விலை மணிகள், பெருவிலை மணி கள் என்று இரு வகையாக மணிகள் பகுத்துக் கூறப்பட்டன என்று தெரிகின்றது.

பளிங்கையும் மணியென்று கூறும் வழக்கம் இருந்தது.

'மணிக்கயம்' (பெருங்கதை 1-55:2)

'மணிமருள் தெண்ணீர்' (மலைபடுகடாம் 180)

ஆகிய வரிகளில் மணி என்பது பளிங்கையே குறித்து வழங்கியது.

தமிழ்நாட்டிலிருந்து மேலை நாட்டிற்குப் பளிங்கு ஏற்றுமதி யாகியுள்ளதை உரோம ஆசிரியர்கள் கூறியுள்ளனர்.

> "The trade in Indian crystal was an important one. Pliny speaks of an unequalled excellence of Indian rock - crystal glass and mostly from Ceylon."

**பந்தர்**

'பந்தர்' என்ற பெயர் ஒருவகை விலையுயர்ந்த கல்லிற்கும் வழங்கியுள்ளது என்று கருத இடமுண்டு.

> "Pliny says that pantarbes was the same stone as Jargoon. Macrindle says that panterbes may be a corruption of an Indian word."

பந்தர் என்பதை அரபுச் சொல் என்று கொண்டால், சேர நாட்டுக் கடற்கரையில் இறக்குமதியான முத்தையே அது குறித்தது என்று கொள்ள வேண்டும்.

ஏனென்றால் கி. பி. முதல் நூற்றாண்டுக்கு முன்னரே பந்தர் அப்பாஸ், பந்தர் புசிர் (Bundar Abbas, Bundar Busir) என்ற பாரசீக வளைகுடாவில் இருந்த துறைமுகங்கள், முத்து முதலிய வணிகப் பொருள்கள் ஏற்றுமதி செய்யும் இடங்களாகச் சிறந்திருந்தன என்று வரலாற்று ஆசிரியர்கள் (Ornaments and Jewellery in Prehistoric India, M. Pezhard) எழுதியுள்ளனர்.

பெர்சிய வளைகுடாவிலும், தமிழ்நாட்டுக் கடற்கரையிலும் வட இலங்கைக் கடற்கரையிலும் விளைந்த முத்தைப் போலச் சிறந்த முத்து விளைந்ததாக கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க ஆசிரியர்கள் கூறியுள்ளனர்.

> The pearls of Bahcrin fishery are said to be even finer than those of Ceylon and they form the best important trade of Basra. The shell of molluses which yield the Ceylon, Indian and Persian pearls are sometimes are as much as a foot in diameter and are usually about nine inches.

ஆதலின் சேரநாட்டுக் கடற்கரையில் இருந்த 'பந்தர்' என்ற துறைமுகம், பாரசீக வளைகுடாவில் இருந்த துறைமுகத்தின் பெயரால் ஏற்பட்டிருக்கலாம். இங்கு பாரசீக வளைகுடாவில் விளைந்த சிறந்த முத்து இறக்குமதியாக்கப்பட்டிருக்கலாம். இதையே 'பந்தர் பயந்த பயங்கெழு முத்தம்' என்று பதிற்றுப் பத்து கூறியிருக்கலாம்.

சங்க காலத்து நூல்களில் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியான பொருள்களே மிகுதியாகக் கூறப்பட்டுள்ளன ஆனால், இறக்குமதியானவை கூறப்படவில்லை.

அகழ்வு செய்து ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்ட உரோமரின் மணிக்கல் தொழிற்சாலை இருந்த அரிக்கமேடு சங்க நூல்களில் கூறப்படாதது கவனிக்கத் தக்கதாகும். அரிக்கமேட்டில் விலை குறைந்த கற்கள் பல இறக்குமதியாக்கப் பட்டு அணிகலன்களாக மாற்றப்பட்டன என்பது ஆராய்ச்சியில் தெரிகின்றது.

ஆதலின் பெர்சிய வளைகுடாவிலிருந்த பந்தர் என்ற துறைமுகத்திலிருந்து தமிழ் நாட்டிற்குச் சிறந்த முத்து இறக்குமதி யாகியிருக்கலாம் என்று தெரிகின்றது. அதன் காரணமாகவே பந்தர் என்ற அரபுச் சொல்லால் தமிழ் நாட்டுத் துறைமுகம் அழைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், இந்தக் கருத்தை உறுதிப்படுத்தப் போதிய சான்றுகள் இல்லை என்பதும் குறிப் பிடத்தக்கதாகும்.

"சீர்மிகு சிறப்பினோன்
தொல்குடிக் குரித்தெனப்
பார்வளர் முத்தமொடு
படுகடல் பயந்த ஆர்கலி யுவகையர்"

என்று கலித்தொகை (103) கூறுவதைக் கவனிக்க வேண்டும். பாண்டியரின் சிறந்த பழைய குடிக்கு உரிய முத்தம் என்று கலித்தொகை கூறுவதை உணர்தல் வேண்டும். மிகப் பண்டைக் காலத்தேயே முத்து பாண்டியர்க்கு உரியதென்று கருதினர் என்று அறிய வேண்டும். இது மெகஸ்தனீஸ் கூறிய செய்தியிலிருந்து தெரிகின்றது.

'முதிர் வார் இப்பி முத்தம்' —புறம் 53

'விளைந்த முதிர்ந்த விழு முத்து'
—மதுரைக் காஞ்சி 135

என்று சங்க நூல்கள் கூறுவதால் முத்துச்சிப்பிகள் நன்கு வளர்ந்த பிறகே முத்துச் சிப்பிகளை வாரியெடுத்தனர் என்பது தெரிகின்றது. ஆதலின் சங்க காலத்திலேயே சிப்பிகளின்

முத்து முதிரும் காலத்தை நன்கு தெரிந்திருந்தனர் என்று தெரிகின்றது.

குருவிந்தக்கல் மாணிக்க வகையுள் ஒன்றென்பர். 'காவிக்கல் என்பாருமுளர்' என்று கம்பராமாயண உரையில் கூறப்பட்டுள்ளது.

## கம்பர் கருத்துகள்

கம்பர் இப்பி என்று குறிப்பிடுவது முத்தை அளிக்கும் சிப்பியை யாகும்.

'வாய்சொரி இப்பியோடும்
வலம்புரி உமிழ்ந்த முத்தும்'

6-8-25

என்று பாடியுள்ளார்.

'துறையிடை உறங்கும் இப்பி'

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

'கூன்சூல் முதிர் இப்பி'

என்று கம்பர் மற்றோரிடத்தில் கூறியுள்ளார்.

சிப்பிகள் சூலுற்று முத்து ஈனுவதாகக் கம்பர் கூறியுள்ளார். ஆனால் முத்து என்பது சிப்பியின் முட்டை அன்று.

சங்கும் முத்தைக் கொடுக்கும் என்கிறார் அவர். இப்பி என்பது இரட்டை ஓட்டுக் கிளிஞ்சல். சங்கு ஒற்றையோட்டுக் கிளிஞ்சல்.

'தான்சூலி நாளில் தகைமுத்தம்
உயிர்த்த சங்கம்'

5-1, 40-7

என்கிறார் கம்பர். சங்கு தருகின்ற முத்திலும் வலம்புரி தருகின்ற முத்து சிறந்தது என்று கம்பர் கருதுகின்றார்.

வெண்ணிறச் சங்கைத் தூய்மைக்கு அறிகுறியாகப் போற்றுவது இலக்கிய மரபாகும். கம்பரும் அவ்வாறு கூறியுள்ளார்.

சலசஞ்சலம் என்ற சங்கு, வலம்புரிச் சங்கு ஆயிரம் சூழ்ந்தது என்று சொல்லப்பட்டுள்ளது. இத்தகைய சங்கு இயற்கையில் இருப்பதாகத் தெரியவில்லை. சலசஞ்சலச் சங்கை அறுத்து மகளிர் அணிந்த வளையங்களைப் பற்றியும் கம்பர் கூறியுள்ளார்.

வலம்புரிச் சங்கென்பது, இடம்புரிச் சங்கு ஆயிரம் சூழ்ந்தது என்று நிகண்டுகள் கூறுவதும் உண்மையன்று.

சங்கு முத்தைத் தருவதென்பது பலருக்குக் கற்பனைச் செய்தியாகத் தோன்றும். சில சங்குகள் முத்தைத் தருகின்றன என்பது உண்மையே. கரீபியன் (Carribean) தீவுகளில், கடலில் சங்குகளில் இருந்து அரிதாக முத்துகள் கிடைக்கின்றன. அண்மைக் காலம் வரை சங்குகளிலிருந்து கிடைக்கும் அந்த முத்துகள் (Conch Pearls) இங்கிலாந்து அரசிக்கு உரிமையாகச் செலுத்தப்பட்டு வந்தன.

இவ்வகை முத்துகள், சிப்பி முத்துகள்போல அவ்வளவு சிறந்தவையல்ல. இருப்பினும், அரிதாகச் சங்கிலிருந்து பிறப்பதால் அந்த முத்துகளைப் போற்றினர்.

சங்க காலத்திலேயே வலம்புரிச் சங்கு விலையுயர்ந்த பொருளாகக் கருதப்பட்டது. முத்தெடுப்பதைப்போல வலம்புரிச் சங்கையும் சங்க காலத்தில் மூழ்கியெடுப்பது வழக்கமாகும். வலம்புரிச் சங்குகள் மிக மிக அரிதாகக் கிடைக்கும். அரிதான வலம்புரிச் சங்கில் பிறகும் முத்தையும் மிக மிக அரிதாகக் கருதினர்.

சங்கைக் கோடு, பணிலம், நந்து என்றெல்லாம் கம்பர் அழைத்துள்ளார்.

இலக்கியத்தில் சங்கு என்று குறிக்கப்படுவது வலம்புரிச் சங்காகும். இதை Dextral conch shell என்பர். வலம்புரிச் சங்கு என்பது Sinistral conch shall எனப்படும்.

வலம்புரிச் சங்கை ஊதுவது போரிலும் பூசையிலும் நல்லது என்று மக்கள் கருதினர்.

குறிப்பு

குறிப்பு

## கல்வெட்டுகளில்

முதல் இராஜராஜன் தாம் எடுப்பித்த உடையார்
ஸ்ரீராஜராஜீஸ்வரம் உடைய பரம சுவாமிக்குக்
கொடுத்த அணிகலன்களில் ஒரு சிலவற்றைக் காண்க.

கண்ட நாண் ஒன்றிற் கோத்த நீலங் கோமளம் ஒன்றும் உட்பட ஐம்பத்தொரு கழஞ் சேய் காலுக்கு விலை காசு...

கண்ட நாண் நடுவு ரத்நப் பட்டிகை உடைய தொன்றிற் கட்டின, வயிரம் அறுபத்தாறும், மாணிக்கம் நாற்பத்து மூன்றும், மரகம் முப்பத்து நாலும்... துடர் பன்னிரண்டும் உட்பட, நிறை அறு பத்து நாற் கழஞ்சேய் காலே...க்கு விலை காசு இருநூற்றைம்பத்து இரண்டு;

புல்லிகைக் கண்டநாண் ஒன்றிற் கட்டின வயிரம் ஐம்பத்து நாலும், மாணிக்கம் ஏழும் உட்பட நிறை எண்பத்து முக்கழஞ்சேய் அரைக்காலுக்கு விலை காசு இருநூற்று...

பாசமாலை ஒன்றிற் கட்டின வயிரம் எழுபத்தைஞ்சும், மாணிக்கம் எழுபதும், பொத்தி நாற்பத் தொன்றும், கோத்தமுத்து - ஒப்பமுத்தும்'

குறுமுத்தும் நிம்பொளமும் ஆக முத்து எண்பத்து மூன்றும் உட்பட நிறை... ஒன்பதின்... விலை காசு...

...ஒன்றிற் கட்டின வயிரம் நாற்பத்தைஞ்சும் மாணிக்கம்... பத்தாறும், மரகதம் பத்தும், பொத்தி முப்பத்தொன்பதும், முத்து... உட்பட நிறை இருபத்து நாற் கழஞ்சேய் ஆறு மஞ்சாடிக்கு விலை காசு நூற்று இரண்டேகால்;

பவழ கடகம் ஒன்றிற் கட்டின பவழம் பத்தும் உட்பட நிறை இருபதின் கழஞ்சேய் ஒன்பது மஞ்சாடியும் மூன்று மாவுக்கு விலை காசு முப்பத்தெட்டு...

---

தஞ்சைப் பெரிய கோயில் விமானத்தின் தென்புறச் சுவரில் உள்ளது. தென்னிந்தியக் கல்வெட்டுகள்- தொகுதி 2, எண் ?3.



மார்க்கோபோலோ தமிழ்நாட்டிலிருந்து கொண்டு சென்ற விலையுயர்ந்த மணிகளைக் காட்டி விளக்குகிறார்.

## நமது வரலாற்றை வழங்கும் வெளிநாட்டு அறிஞரும் நூல்களும்

| | பெயர் | நாடு | வாழ்ந்த காலம் | இங்கு வந்து கண்ட காலம் | எழுதிய நூலின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | மெகஸ்தனிஸ் | கிரேக்கர் | — | கி.மு. 302-296 | இண்டிகா |
| 2 | ஸ்டிராபோ | சிறிய ஆசியா (Asia Minor) | கி.மு. 64- கி.பி. 24 | (வரவில்லை) | ஸ்ட்ராபோவின் வரலாறு (43 நூல்கள்) |
| 3 | பெரிப்ளூஸ்-நூல் | கிரேக்க -எகிப்தியர் (Graeco - Egyptian) | — | கி.பி. 50 - 80ல் எழுதப்பெற்றது | பெரிப்புளூஸ் நூலில் செங்கடல் பயண வரலாறு |
| 4 | பிளினி | உரோமானியர் (வெனிஸ்) | கி.பி. 23-79 | | பிளினியின் இயற்கை வரலாறு (37 நூல்கள்) |
| 5 | தாலமி | கிரேக்கர் | கி.பி. 119-161 | | தாலமியின் நில நூல் (13 நூல்கள்) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | பாஹியான் | சீனர் | கி.பி. 374-456 | கி.பி. 399-414 | பாஹியான் எழுதிய போ-கோ-சி |
| 7 | யுவான் சுவாங் | சீனர் | கி.பி. 600-664 | கி.பி. 629-645 | சி - யு - கி |
| 8 | ஆல்பெருனி | Centrel Ashia Muslim | கி.பி. 973-1048 | கி.பி. 1030 | ஆல்பெருனியின் வானநூல் |
| 9 | மார்க்கோபோலோ | இதாலி (வெனிஸ்) | கி.பி. 1254-1324 | கி.பி. 1292-95 | மார்க்கோ போலோவின் பயண வரலாறு |
| 10 | அர்ரியன் | கிரேக்கர் | கி.பி. 90-180 | — | மாவீரர் அலெக்சாந்தரின் படையெடுப்பு & இண்டிகா |



மார்க்கோபோலோ
(முதுமைத் தோற்றம்)

## பெயர்கள் வழங்கப்பட்ட நிலை

| தமிழ்ப் பெயர்கள் | கிரேக்க மொழியில் | பெரிப்புளூஸ் நூலில் | பிளினி | மார்க்கோபோலோ |
|---|---|---|---|---|
| அருவா நாடு | அரவரணை நாடு (தாலமி) Arivaranai | — | — | — |
| உறந்தையூர் (உறையூர்) | ஆர்கரு (தாலமி) | ஆர்கரு | ஒதென்பிரோ - ஒதென்பெரோ ஒரதே | — |
| நாகப்பட்டினம் | நிகமா (தாலமி) | நஸோபட்ணா | — | — |
| தஞ்சாவூர் | தோரிங்கா நாடு | — | — | — |
| காவிரிப் பூம்பட்டினம் | காபேரிஸ் (தாலமி) | காமாரா | காபேரிஸ் எம்போரியம் | — |

| | | | | |
|---|---|---|---|---|
| மயிலாப்பூர் (சென்னை) | மலியார்பா (தாலமி) | சோபட்ணர் (மயிலைத் திருவல்லிக்கேணி) | — | சாந்தோம் |
| மாமல்லபுரம் | மலங்கே ,, | மபாரிடிக் | — | மாபர் |
| கன்னியாகுமரி | குமாரியா ,, | குமாரி | — | குமரி (Kumari) |
| கொற்கை | கோல்கே ,, | கோல்கே | கோரகே | — |
| முசிறி | முசிறிஸ் ,, | முசிறிஸ் | முசிறிஸ் | — |
| தூத்துக்குடி | சூசிகுரை ,, | — | — | — |
| குட்டநாடு | கொட்டியாரா ,, | குட்டனோரோ | கொட்டனோரா | — |
| திருவனந்தபுரம் (அனந்தசயனம்) | பராலியா ,, | பார்லியா | — | — |
| காஞ்சிபுரம் | காந்திபட்ணா ,, | காந்திபிரமா | காந்திபிரமா | காஞ்-சி-பு-லே (யுவான்சுவாங் - |

# மேற்கோள் நூல்கள்


1. சங்க நூல்கள்

   சிலப்பதிகாரம்

   சோழர் காலத்துக் கல்வெட்டுகள்

   திருவிளையாடற் புராணம்

   நவமணிகள் — வைத்தியநாதன்

2. The Commerce between the Roman Empire and India

   — E. H. Warmington.

3. A History of Gem History in Ancient and Madieval Times.

   — M. S. Shukla.

4. Elephant — Ramesh Bedi.

5. Tabashir — Mannual of Indian Forest Botany

   — N. S. Bor - O. U. P.

6. Periplus of Erithrean sea.

7. Loan words evidence in Bibilical Hebrew Chain Rabin - Proccedings of the Second world Conference of Tamil Studies.

8. Prospects of Pearl Fishery of Tuticorin of Mannar in 1955.

— P. I. chacko, M. A., F.S.U.

9. Color Encyclopedia of Gemstones.

— Joel E. Arem.

மெகஸ்தனிஸ்

பிளினி

தாலமி

பெரிப்ளூஸ் - நூல்

பாஹியான்

யுவான் சுவாங்

மார்க்கோபோலோ

ஆகிய வெளிநாட்டு
அறிஞர்களின்
கருத்துக்களடங்கிய
ஒப்பாய்வு நூல்



பி.எல்.சாமி

